
# திருக்கோயில்

ஜனவரி & பிப்ரவரி 1976 ரூ. 1



# மறவாதீர்கள்:

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களே நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

# திருக்கோயில்

மாலை : 18 இராக்கத—மார்கழி & தை ஜனவரி & பிப்ரவரி—1976 மணி : 4 & 5

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

"திருக்கோயில்" திங்கள் இதழின் 'சந்தாதாரர்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்.
*அறநிலைய ஆட்சித் துறை,*
*சென்னை—600 034*

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

## பொருளடக்கம்

தருமமிகு சென்னையில் பெருமைமிகு கோயில்கள்
—ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

ஓட்டைக் குடம் —கி. வா. ஜகந்நாதன், M.A.,

சிரிக்கும் திறம்—எஸ். மகராஜ பிள்ளை, B.A., B.L.,

பழந்தமிழ் நாடகச் சிறப்பு
—கி. ஆ. பெ. விசுவநாதம்

ஸ்ரீ கிருஷ்ண அந்தாதி—கவிஞர் கண்ணதாசன்

வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறி
—அ. கி. பரந்தாமனர், M.A.,

பரத நாட்டியக் கலை
—பத்மபூஷண் டாக்டர் த. பாலசரசுவதி

சமயமும் சமுதாயமும்
—சீலத்திரு அருணகிரிநாத தேசிகர்

காதல் செய் கோயில் கழுக்குன்றே—பி. வி. கிரி

பொய்கை இடத்தழுத புகலியர்கோன்
—ச. சாம்பசிவன், M.A.,

கந்த புராணம் —திருமுருக கிருபானந்த வாரியார்


பஞ்சாமிர்தம்—டி. என். சுகிசுப்பிரமணியன்

மக்கள் தெய்வம் மாகாளி
—இரா. நாகசாமி, M.A.,

பெரியவாச்சான் பிள்ளை உரைநயங்கள்
—பத்மவிபூஷண் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

அறிவியலும் இறையியலும்—மருதவாணன்

ஆசிரியர் :
ந.ரா. முருகவேள்
M.A., M.O.L.,



துணை ஆசிரியர் :
கே.எஸ். ஜெகன்னாதன்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

## தருமமிகு சென்னையில்

# பெருமைமிகு கோயில்கள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

158610


**முன்னுரை :**

சென்னை நகரிலும், அதனைச் சார்ந்த சுற்றுப் பகுதிகளிலும், நமது அறநிலைய ஆட்சித் துறையின் கணக்கில் வந்துள்ள திருக்கோயில்கள் 608. அவற்றுள் வரி விதிப்புக்குட்பட்ட கோயில்கள் 297. இவற்றுள் பிள்ளையார் கோயில்கள் 75. முருகன் கோயில்கள் 22. சிவன் கோயில்கள் 39. பெருமாள் கோயில்கள் 51. கூத்தபிரான் (நடராசர்) கோயில்கள் 2. சிவவிட்டுணு கோயில் 1. அம்மன் கோயில்கள் 81. ஆஞ்சநேயர் கோயில்கள் 10. தருமராசர் கோயில்கள் 8. அடியார் கோயில்கள் 8. இங்ஙனம் பல சிறந்த கோயில்களைக் கொண்டு திகழ்வது நம் சென்னை மாநகரம். அவற்றுள் மிகவும் புகழ் வாய்ந்த, பழமையும் பெருமையும் மிக்க சில கோயில்களைப் பற்றி மட்டும் இங்குக் காண்போம்.

சென்னை மாவட்டத்தில் முதன்மையான பாடல் பெற்ற திருக்கோயில்கள் 4. அவை யாவன : திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி சுவாமி கோயில், திருவொற்றியூர்த் தியாகராச சுவாமி கோயில், திருமயிலாப்பூர்க் கபாலீசுவரர் கோயில், திருவான்மியூர் மருந்தீசுவரர் கோயில். திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி சுவாமிகோயில், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல் பெற்ற சிறப்புடைய வைணவத் தலமாகும். ஏனைய திருவொற்றியூர், திருமயிலாப்பூர், திருவான்மியூர்க் கோயில்கள், சைவநாயன்மார்களின் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற சைவக் கோயில்கள் ஆகும்.


**திருவல்லிக்கேணி :**

திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி கோயில், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், பாசுரங்களினால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற மாட்சிமையுடையதாகும். இக்கோயிலின் கருவறையில் வேங்கடகிருஷ்ணர் எழுந்தருளியுள்ளார். அவருக்கு வலப்புறம் உருக்குமிணித் தாயாரும், இடப்புறம் தம்பிசாத்தகியும், எழுந்தருளியிருக்கின்றனர். மற்றும் தமையனாராகிய பலராமரும், மகனாகிய பிரத்தியும்நனும், பேரனாகிய அநிருத்தனும், பெருமாளுக்கு வடபுறம் தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளனர். பார்த்தசாரதிப் பெருமாள், வலக்கையில் பாஞ்சசந்யம் என்னும் சங்கினை ஏந்தியுள்ளார். அவர்தம் இடக்கை



பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் (உள் தோற்றம்)

திருவடியை காட்டுகின்றது. திருவடிக்கு அடிமை செய்தால், பெருமாளின் திருவருளைப் பெற்று வெற்றிக்கு அறிகுறியாகச் சங்கினை முழக்கலாம் என்னும் உண்மையினை, இத்திருக்கோலம் புலப்படுத்துகின்றது. கீதாசாரியன் ஆகிய வேங்கடகிருஷ்ணர், தாம் பகவத் கீதையில் அறிவுறுத்திய சரணாகதித் தத்துவத்தினை உணர்த்தும் முறையில், இத்திருக்கோலத்தில் அழகுற விளங்குகின்றார். ''எந்தை ஒரு வல்லித் தாமரையாள் ஒன்றிய சீர் மார்பன் திருவல்லிக்கேணியான்'' என்று, பேயாழ்வார் பாடியதற்கேற்ப, பார்த்தசாரதிப் பெருமாளின் வலப்புற மார்பில் உயர்ந்த மணிகள் பதித்த அணிகலங்களுடன், திருமகள் அழகுற விளங்குகின்றாள். மூலவரின் இடுப்பில் விலை மதிக்க முடியாத, பேரொளி வீசும் ஒரு வாள் விளங்குகின்றது. அடியார்களின் அஞ்ஞானத்தைக் களைகின்ற மெய்ஞ்ஞான வாளின் அடையாளமாக இது திகழ்கின்றது.



பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் (வெளித் தோற்றம்)

பார்த்தசாரதிப் பெருமாளின் எழுந்தருள் திருமேனி (உற்சவ மூர்த்தி), மிக்க சிறப்பும், அழகும் வாய்ந்ததாகும். அந்தத் திருவுருவத்தில் பாரதப் போரில் அம்புகள் பாய்ந்ததனுல் ஏற்பட்ட தழும்பின் அகுறிகள் காணப்படுகின்றன. தம் அடியவனுகிய அருச்சுனனைக் காப்பதற்காகப் பெருமாள், அவன்மீது பகைவர்கள் எறிந்த அம்புகளைத் தாம் ஏற்றுத் தாங்கிக் கொண்ட கருணைத் திறனே. இத்தழும்புகள் நமக்கு உணர்த்துகின்றன. திருமுழுக்கின்போது தங்கம் பூசிய செம்பு நிறத்தில் காணப்படும் இத்திருவுருவம், பின்னர்ச் சற்று நேரத்திற்குள், நீலங் கலந்த கருநிறத்தை அடைந்து, பெருமாள் நீலமேனி நெடியோன் என்னும் உண்மையினைப் புலப்படுத்தும் திறம், மிக்க வியப்பினை விளைவிக்கின்றது. வேறு எங்கும் காணப்படாத நிலையில் இங்குப் பெருமாள் மீசையுடையவராகக் காணப்படுகின்ருர். குருக்கேத்திரப் போரில் பார்த்தனுக்குத் தேர்ச் சாரதியாகச் சென்றவர் ஆதலின், போர்ச் செயலுக்குரிய ஆண்மைத் திறத்தினைக் காட்டப் பெருமாள் இங்கு மீசையுடன் விளங்குகின்ருர் போலும்!


இக்கோயிலில் உள்ள சந்நிதிகளில் மிகவும் பழமையானது மன்னுதர் எனப்படும் அரங்கநாதரின் சந்நிதியாகும். அவருக்குரிய தேவியின் பெயர், வேதவல்லித் தாயார் என்பது. அரங்கநாதரின் கோயிலின் வடபகுதியிலும், தென் பகுதியிலுமாக நரசிங்கப் பெருமாளும், வராகப் பெருமாளும், எழுந்தருளியுள்ளனர். இங்குள்ள நரசிங்கப் பெருமாளுக்குத் தெள்ளிய சிங்கர் என்பது பெயர். ''தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத் திருவல்லிக்கேணிக் கண்டேன்'' என்பது பாசுரம். இக்கோயிலில் இராமபிரானுக்கும் தனிச் சந்நிதி அமைந்துள்ளது. இங்கு இராமபிரான், பரதன், சத்துருக்கனன், இலக்குவன் என்னும்சகோதரருடனும், மனைவியாகிய [illegible]கையுடனும் எழுந்தருளி விளங்குகின்ருர். இவ்வாறே கஜேந்து[illegible]ன் என்னும் யானையை முதலையின் வாயினின்று விடுவித்துக் காப்[illegible]றிய கஜேந்திரவரதர் சந்நிதியும் இங்கு அமைந்துள்ளது. இதன் கருவறையில் சங்கு சக்கரங்களுடன், கருடன் மேல் வீற்றிருக்கும் நிலையில், கஜேந்திர வரதர் விளங்குகின்ருர்.

இக்கோயிலின் கருவறையைச் சுற்றிச் சில பழையமையான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. நந்திவர்ம பல்லவர் (கி.பி. 779—830) காலத்திலேயே, இத்திருக்கோயில் புகழ் பெற்று இருந்தமை ஒரு கல்வெட்டால் புலனுகின்றது. விசய நகர அரசராகிய வீர வேங்கடபதி மன்னர் (கி.பி. 1586—1616), இக்கோயிலில் திருமழிசையாழ்வாரை எழுந்தருளச் செய்தார். வீரப் பிரதாப சதாசிவ தேவர் (சகம் 1486), இக்கோயிலில் பள்ளி கொண்ட பெருமாள் (அரங்கநாதர்), கண்ணபிரான், வேதவல்லித் தாயார் திருவுருவங்களை எழுந்தருள்வித்ததுடன் திருவாய் மொழி மண்டபம், மடைப்பள்ளி, திருச்சுற்று மதில் என்பவற்றையும் கட்டுவித்தார். மேலும் அவ்வரசர் இக்கோயிலுக்குப் புதுப்பாக்கம், வேப்பேரி, வியாசர்பாடி ஆகிய மூன்று ஊர்களை நன்கொடையாகத் தந்தார். இக்கோயிலின், கருவறைக்கு முன்னுல் உள்ள மண்டபமும், திருவாய்மொழிப் பிரபந்த மண்டபமும், பல்லவர் காலத்துக்கு முற்பட்டே கட்டப்பெற்றிருத்தல் வேண்டும் என்பதற்குரிய சான்றுகள் காணப்படுகின்றன. இவற்ருல் இக்கோயிலின் பழமையும், பெருமையும் இனிது விளங்கும்.

**திருவொற்றியூர் :**

திருவொற்றியூர், சென்னையின் பல பகுதிகளுள் மிக்க பழமையும், பெருமையும் வாய்ந்தது. அதனுல் இதற்கு ஆதிபுரி என்றும்,

திருவொற்றியூர் கோயில்



இங்குள்ள பெருமானுக்கு ஆதிபுரீசுவரர் என்றும் பெயர் வழங்கும்.

ஒரு காலத்தில் பொங்கி எழுந்த பிரளய வெள்ளத்தை, இறைவன் இவ்வூரின் மேல் வராமல் தடுத்து ஒற்றியிருக்கச் செய்ததனுல், இதற்கு ஒற்றியூர் எனப் பெயர் அமைந்தது. வாசுகி என்னும் பாம்பினைச் சிவ பெருமான் தன் உருவத்தில் ஏற்றுக் கொண்டதனுல், இங்குள்ள பெருமானுக்குப் படம்பக்கநாதர் என்று பெயர். படம்பக்கம் என்னும் ஒரு வகைப் பறை, இக்கோயிலில் சிறப்பாகப் பயன்படுத்தப் பட்டதனுல், இறைவனுக்குப் படம்பக்க நாதர் என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர். திருவள்ளுவர் காலத்தில் வாழ்ந்தவராகக்கருதப் படும் ஏலேலசிங்கர் என்பவருக்கு விலையுயர்ந்த மாணிக்கங்களை ஏராளமாக வழங்கியதனுல், இங்குள்ள இறைவனுக்கு மாணிக்கத்தியாகேசர் என்னும் சிறப்புப் பெயர் ஏற்பட்டது. ஒரு சமயம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டபோது, அரசன் ஒருவன் கோயில்களின் படித்தரங்களைக் குறைக்கும்படி கட்டளையிட்டு ஆணை ஓலை அனுப்பினுன். அதில் இறைவன், ''ஒற்றியூர் நீங்கலாக'', என்று வரி பிளந்து எழுதி வைத்தார். அதனுல் இங்குள்ள இறைவனுக்கு ''எழுத்தறியும் பெருமான்'' என்னும் பெயர் ஏற்பட்டது.


கருவறையில் பெருமான் புறறுவடிவில் இருப்பதனுல், ''புற்றிடங்கொண்டார்'' என்றும் வழங்கப்படுகிருர். கலிய நாயனுர் என்பவர் இத்தலத்தில்தோன்றியவராவர். இத்தலத்தைத் துதித்துப் புகழ்ந்து, திருநாவுக்கரசர், சுந்தரர், ஐயடிகள் காடவர்கோன், பட்டினத்தார், இராமலிங்க அடிகள் முதலியபற்பல அருளாளர்கள், போற்றியுள்ளனர். பட்டினத்தாரின் சமாதி, இங்குக் கடற்கரைக்குஅருகில் உள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், சங்கிலி நாச்சியாரை இங்குள்ள மகிழ மரத்தின் அடியில் திருமணம் செய்து கொண்டு, சிலகாலம் வாழ்ந்திருந்தார்.



பட்டினத்தார் சமாதி

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன. பரகேசரிவர்மன் குலோத்துங்க சோழன், ஒரு சமயம் ஆனித் திருவிழாவினைக் காண, இங்கே வந்து இங்குள்ள இராசராசன் திருமண்டபத்தில் தங்கியிருந்தான். இராசகேசரி வர்மன், பங்குனி உத்திர விழாவின் போது வருகை தந்து, சதுரானன பண்டிதர், வாகீசுவர பண்டிதர் முதலியோர், ஆளுடை நம்பிகள் புராணம் படிக்கக் கேட்டு மகிழ்ந்தான். வ அதுன கல்வெட்டு ஒன்றில் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையும், அறுபத்துமூவர் திருவுருவங்களும் குறிப்பிடப்பெற்றுள்ளன. இராசராச சோழனின் மகனுகிய முதலாம் இராசேந்திரன் (கி.பி. 1012—1044) காலத்தில், திருவொற்றியூர்ப் பெரிய கோயிலின் விமானம், வீரசோழன் என்ற இரவி என்னும் சிற்பியால் கட்டப்பெற்றது. மாணிக்கவாசகரின் . திருவெம்பாவையும், அப்பர், சுந்தரர் அருளிய தேவாரத் திருப்பதிகங்களும் ஓதுவதற்கு, முதலாம் இரர்சேந்திரன் (கி.பி. 1063—1070), அறுபது வேலி நிலத்தை நன்கொடையாக வழங்கினுன். மாணக்குடி இராசேந்திர மூவேந்த வேளார் என்ற பசுபதி திருவரங்கத் தேவர், படம்பக்க நாயக தேவரின் கோயிலைக் கற்கோயிலாகக் கட்டினுர் என்பன போன்ற பல செய்திகள், இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன.

இங்குள்ள அம்பிகைக்கு வடிவுடையம்மை என்பது பெயர். மற்றும் இங்கே வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ள வட்டப் பாறையம்மன் சந்நிதியும் மிகவும் புகழ் வாய்ந்தது. திருவொற்றியூரான் அடிமை திரு. டி.பி. இராமசாமிப் பிள்ளை அவர்களால், இக்கோயிலில் தனியே ஒரு சந்நிதி, சிற்பக் கலை நலங்கள் சிறக்க அழகுறக் கட்டப் பெற்றுள்ளது.



கபாலி கோயில் (தெப்பக்குளம்)

**திருமயிலாப்பூர் :**


இது தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவத் தலங்களுள் ஒன்றுய், மிகவும்

புகழ்பெற்றுச் சென்னை நகர்க்கண் திகழ்ந்து வருவது. ஞானசம்பந்தர் அங்கம் பூம்பாவை ஆக்கி அற்புதம் நிகழ்த்திய தலம். புகழ்மிக்க தாலமி (Plotemy) என்னும் பண்டைக் கிரேக்க அறிஞர் (கி.பி. 140) இதனை மயிலார்ப்பா (Mylarpha) எனக் குறித்துள்ளார். இயேசு நாதரின் சீடர்களுள் ஒருவராகிய தூய தாமசு (St. Thomas) என்பவர், இவ்வூர்க்கு வந்து வாழ்ந்திருந்து தம் சமயத்தைப் பரப்பினர் எனவும், சிலர் கூறுவர்.

உலகமே உவந்து போற்றும் திருவள்ளுவர், முதலாழ்வார்களுள் ஒருவராகிய பேயாழ்வார், அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான வாயிலார் நாயனார் முதலிய சான்றோர்களின் திருவவதாரத் தலமும் இதுவே. இங்கு ஜைன சமயத்தைச் சார்ந்த நேமி நாதர் என்னும் தீர்த்தங்கரரின் கோயிலும் இருந்ததாகத் தெரிகின்றது. 'நன்னூல்' என்னும் சிறந்த தமிழ் இலக்கண நூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர் என்பவர், இங்குத் தோன்றியவர் எனக் கூறப்படுகின்றார். 1,300 ஆண்டுகட்கு முன்பு கி.பி. 7-ஆம் நூற்றாண்டில், திருஞானசம்பந்தர் காலத்திலேயே, இத்தலம் மிகவும் சிறப்புற்று, மாட மாளிகைகள் நிறைந்ததாகவும், மலிவிழா வீதிகளைக் கொண்டதாகவும் விளங்கியிருந்தது. ''பல்பெருங்குடி நீடு பரம்பரைச் செல்வம் மல்கிய திருமயிலாபுரி'' என்பது பெரிய புராணம். சிவபெருமானை அம்பிகை இங்கு மயில் வடிவம் கொண்டு பூசித்தார். ஆதலின் மயிலை, மயிலாப்பில், மயிலாப்பு, மயிலாபுரி எனப் பலவகைகளில் நூல்கள் இதனைக் குறிக்கும். சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இது 'நானாதேசிகள்' கூடும் ஒருபெருந் துறைமுகமாக (International Harbour) விளங்கியிருந்தது.

தெள்ளாறெறிந்த நந்தி வர்மன் (கி. பி. 825—850) மீது பாடப் பெற்ற நந்திக் கலம்பகம் என்னும் நூலில், ''மல்லை வேந்தன் மயிலை காவலன் பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி'' என வரும் பகுதியில் இவ்வூர் குறிப்பிடப் பெற்றுள்ளது. தல விருட்சம் புன்னை மரம். இறைவன் கபாலீசுவரர். இறைவி கற்பகாம்பாள். மேற்கு நோக்கிய சந்நிதி. இவ்வூரில் உள்ள மாதவப் பெருமாள் கோயிலும், ஆதி கேசவப் பெருமாள் கோயிலும், சீநிவாசப் பெருமாள் கோயிலும், வெள்ளீசுவரர், வாலீசுவரர் மல்லீசர் விருபாட்சி ஈசுவரர், காரணீசுவரர் முண்டகக் கண்ணியம்மன் முதலிய கோயில்களும் தரிசித்து மகிழத் தக்கவை. கடற்கரைக்கு அருகில் இருந்த பழைய கோயில் போர்ச்சுகீசியராலும், கடற் பெருக்காலும் சிதைந்து போயிற்று. இப்போதுள்ள கபாலீச்சரம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப் பெற்றதாகும் என ஆராய்ச்சியறிஞர்கள் கூறுகின்றனர். அதனாலேயே இக்கோயிலில் பண்டைக் காலத்துக் கல்வெட்டுக்களோ, சிற்பக் கலையுருவங்களோ காணப்படவில்லை. திருஞான சம்பந்தர் அங்கம்பூம்பாவை ஆக்கிய அற்புதச் செயலை நிகழ்த்தியருளி ''மட்டிட்ட புன்னையங் கானல்'' எனத் தொடங்கும் சிறந்த தேவாரப் பதிகம் பாடியதனால், இத்தலம் மிகவும் புகழோங்கித் திகழ்கின்றது.

கபாலீசுவரர் கோயில்






### மயிலைத் திருவள்ளுவர்

உலகம் புகழும் ஒப்புயர்வற்ற நீதிநூல் ஆகிய திருக்குறள் என்னும் செந்தமிழ்ப் பெருநூலை இயற்றியருளிய தெய்வப்புலவர் திருவள்ளுவர் பெருமானுக்கு வேறு எங்கும் இல்லாமல், சென்னைத் திருமயிலையில் திருக்கோயில் ஒன்று அமைந்து திகழ்கின்றது. திருவள்ளுவர் திருமயிலையில் வாழ்ந்திருந்தார் என வரலாறு ஒன்றும் வழங்கி வருகின்றது. இக்கோயில் அதற்குச் சான்று பகர்கின்றது என்பர்.

## திருவான்மியூர் :

இது சென்னையில் திருமயிலைக்குத் தெற்கே 3 கல் தொலைவில் உள்ளது. அப்பர், சம்பந்தர் பாடல் பெற்றது. வான்மீகி முனிவர் பூசித்த தனால் வான்மியூர் என்னும் பெயர் பெற்றது. அகத்திய முனிவர் இத்தலத்தில் சிவபிரானை வழிபட்டு எல்லாப்பொருள்களின்குணங்களையும் அறியவும், இன்ன நோய்க்கு இன்ன பொருள் மருந்தாகும் என்றுணரவும் உபதேசிக்கப் பெற்றார். மருந்துகளைக் குறித்து உபதேசித்த மையால், இறைவன், மருந்தீசர் எனப் பெயர் பெற்றார். இப்பெயர் பெரிய புராணத்தில் சேக்கிழாரால் குறிக்கப் பெற்றுள்ளது. வசிட்ட முனிவரின் சாபம் பெற்ற காமதேனு, இங்கு இறைவனைத் தன் மடியினின்று பால் சுரந்து வழிபட்டது. அதனால் சுவாமிக்குப் பால்வண்ண நாதர் என்றும் பெயர் வழங்கும்.



திருவான்மியூர்

திருவான்மியூர்க் கோயில் பழமையும் பெருமையும் வாய்ந்தது. இராசராச சோழன் (கி.பி. 985—1014), இராசேந்திர சோழன் (கி.பி. 1012—1046), முதலாம் இராதிராசன் (கி.பி. 1018—1054) முதலிய சோழ அரசர் களின் காலத்துக் கல்வெட்டுக்கள் கோயிலில் காணப்படுகின்றன. அவற்றில் ''செயங் கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துக், கோட்டூர் நாட்டுத் திருவான்மி யூர்''என்று இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது. இத்தலத்தில் காமநாசனி, பாபநாசனி, சென்ம நாசனி, ஞானதாயினி, மோட்சதாயினி என ஐந்து தீர்த்தங்கள் உண்டு. தலவிருட்சம் வன்னி மரம். அம்பிகையின் பெயர் திரிபுர சுந்தரி. சொக்கநாயகி. இங்குள்ள உற்சவ மூர்த்தி தியாகராசர் ஆவர். இங்குக் கோயிலுக்கு வடக்கே சிறிது தொலைவில், பாம்பன் குமர குருதாச சுவாமிகள் சமாதிக் கோயில் அமைந் துள்ளது. திருஞான சம்பந்தர், அருணகிரி நாதர், இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

பாம்பன் சுவாமிகள் சமாதி



## வடபழனி ஆண்டவர் திருக்கோயில் :

இது சென்னைக் கோடம்பாக்கத்தில் உள் ளது. இக்கோயில் அமைந்துள்ள இடம், முன் னாளில், சாளக்கிராமம் என வழங்கி வந்தது. முருகன் அடியார்களாக விளங்கியிருந்த திரு. அண்ணுசாமி நாயகர், இரத்தினவேலுச் செட்டி யார், பாக்கியலிங்கத்தம்பிரான்என்பவர்களால், இக்கோயில் தோன்றி வளர்ந்தது. இது தற் போது மிகவும் புகழோங்கி விளங்கிவருகின்றது. அண்மைக் காலத்தில், சுமார் நூறு ஆண்டு களுக்குள்ளாகவே தோன்றியதாயினும், தற் போது இராசகோபுரம், தெப்பத் திருக்குளம், பல்வேறு சந்நிதிகள், மண்டபங்கள் ஆகிய வற்றுடன் பெரிதும் விரிவடைந்து வளர்ந்து ஓங்கிவருகின்றது. தெற்கேயுள்ள பழனி என்னும் தலத்தினை நினைந்து,இதற்கு வட பழனி என்னும் பெயர் ஏற்பட்டு வழங்கி வரு கின்றது.



வடபழநி திருக்குளம்

வடபழனி



கோடம்பாக்கத்திலேயே வேங்கீசுவரர் கோயில், பரத்துவாசேசுவரர் கோயில் என்பனவும் அமைந்துள்ளன. வேங்கீசுவரர் கோயில் மிகவும் பழமைவாய்ந்தது. சோழர் காலத்துத் திருப்பணி. இறைவன் வேங்கீசர், வியாக்கிரபுரீசுவரர். அம்பிகை சாந்த நாயகி. இது வியாக்கிரபுரீசுவரர் கோயில் எனவும் வழங்கும். வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவர் வழிபட்ட தலம். அதனல் இப்பகுதி புலியூர் என்னும் பெயர் பெற்றது. பெரிய புராணம் பாடிய சேக்கிழார் பெருமான், இப்புலியூர்க் கோட்டத்தைச் சேர்ந்த குன்றத்தூரில் அவதரித்தவராவர். அதனல் இக்கோயிலின் பழமையும், சிறப்பும் உணரப்படும். கோடம்பாக்கத்தில் உள்ள மற்ருெரு கோயில் பரத்துவாசேசுவரர் கோயில். பரத்துவாச முனிவர் பூசித்ததினல், இக்கோயில் பரத்துவாசேசுவரர் கோயில் எனப் பெயர் பெற்றது. இதுவும் சோழர் காலத்துத் திருப்பணி. கருவறை விமானம் வட்டமாக யானையின் பின்பாகம் போல் அமைந்துள்ளது. இறைவனுக்குத் திருவாலீசுவரர் என்றும் பெயர் வழங்கும். அம்பிகை சொர்ணும்பிகை.

**கங்காதரேசுவரர் கோயில் :**


இது சென்னைப் புரசைவாக்கத்தில் உள்ள புகழ்மிக்க கோயில். புரசு மரங்கள் நிரம்பியிருந்ததனல் இதற்குப் புரசைவாக்கம் எனப் பெயர் ஏற்பட்டது என்பர். இங்குப் புரசு மரத்தின்கீழ் இறைவன் எழுந்தருளியிருக்கின்ருர். பகீரதனுக்காக ஆகாச கங்கையைச் சடைமுடியில் தாங்கி நிலத்தில் தவழ்ந்து பாயும்படி செய்த நிலையில், இறைவன் இங்கு எழுந்தருளியுள்ளார். அதனல் இவருக்குக் கங்காதரேசுவரர் என்னும் பெயர் அமைந்தது. அம்மையின் பெயர் தாமரைக்கண்ணி (பங்கசாட்சி). கோயிலுக்கு வடபுறம் ஒரு பெரிய அழகிய திருக்குளம் உள்ளது. சைவ சித்தாந்தப் பெரும் சான்ருேராக விளங்கியிருந்த சீலத்திரு சோமசுந்தர நாயகர்அவர்கள், சென்ற நூற்ருண்டின் இறுதியில், இக்கோயிலில் பல சமயச் சொற்பொழிவுகள் தொடர்ந்து நிகழ்த்தி வந்தார் என்பர். புரசைவாக்கத்தில் மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், அட்டாவதானம் சபாபதி முதலியார், சிவத்திரு கலியாண சுந்தரயதீந்திரர் போன்ற பல மாபெரும் தமிழ்ச் சான்ருேர்கள் வாழ்ந்து வந்தனர்.

சென்னைப் பூங்கா நகரில் தேவராச முதலித் தெருவில், இரண்டு கோயில்கள் உள்ளன. அவை முறையே சென்ன மல்லீசுவரர், சென்ன கேசவப் பெருமாள் கோயில்கள் எனப்படும். இவற்றை முறையே பூக்கடைக் கோயில், பட்டினம் கோயில் என்றும் மக்கள் வழங்குவர் இவை சென்ற நூற்ருண்டில், இப்போது சென்னை, உயர் நீதி மன்றம் உள்ள இடத்தில் அதற்குத் தென்புறமாக அமைந்திருந்தன. அவற்றைச் சுமார் கி. பி. 1700-ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஒருபோரில் வெள்ளையர்கள் இடித்துத் தள்ளினர். அதனல் பொது மக்கள் வெகுண்டெழுந்து கிளர்ச்சி செய்தனர். அப்போது மிக்க செல்வமும், செல்வாக்கும் பெற்றிருந்த மணலி முத்துக்கிருட்டிண முதலியார் என்னும் அறப்பெரும் வள்ளல்,



சென்ன மல்லீசுவரர் கோயில்


இடிக்கப்பட்ட கோயிலின் மூர்த்திகளைக் கொணர்ந்து இப்போதுள்ள இக்கோயில்களைச் சிறப்புறக் கட்டியமைத்ததுடன், வழிபாடுகள் நிகழவும், விழாக்கள் நடைபெறவும், பல திற ஏற்பாடுகள் செய்து வைத்தார். அவர் சைவ வைணவ சமரசம் உள்ளம் படைத்த சான்ருேராவார். ஆதலின் இவ்விரு கோயில்களையும் அடுத்தடுத்து அமைத்துதவினர். அவர் தம் பக்தியுணர்வும், அறப்பெருஞ் செயலும் பெரிதும் போற்றி மகிழத் தக்கது.


சென்ன கேசவப் பெருமாள் கோயில்

கச்சியப்ப முனிவர் (18-ஆம் நூற்ருண்டு) இயற்றிய விநாயக புராணம் அரங்கேற்றப் பெற்ற பிரசந்ந விநாயகர் கோயில், இவ்விரு கோயில்களுக்கும் அருகில், ஐயா முதலி தெருவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கந்தசாமி கோயில் :


இத்திருக்கோயில் பூங்கா நகரில் இருசப்பச் செட்டித் தெருவில் உள்ளது. இதனைக் கந்த கோட்டம் என்று அன்பர்கள் சிறப்பித்துப் போற்றுவர். இராமலிங்க அடிகள், இக்கோயி லில் உள்ள முத்துக்குமாரசுவாமி என வழங்கும் முருகன் மீது ''தெய்வ மணி மாலை'' என்னும் திருவருட்பாப் பாடல்களைப் பாடிப் போற்றி யுள்ளனர். அதனால் இக்கோயில் மிகவும் வளர்ந்தோங்கிப் புகழ் பெற்றுத் திகழ்கின்றது. திருப்புகழ்த் தண்டபாணிசுவாமிகளும், பாம்பன் குமரகுருதாச சுவாமிகளும், இக்கோயிலுக்குப் பாமாலைகள் பல சாத்தி வழிபட்டுப் போற்றி யிருக்கின்றனர். சென்னையின் நடுவில் இம் முருகன் கோயில் மிகவும் சிறப்புற்று விளங்கி வருகிறது. இற்றைக்குச் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர், முருகன் அடியவர்க ளாகிய கந்தப்ப ஆசாரி, மாரி செட்டியார் என்னும் இருவரும் திருப்போரூருக்குச் சென்று முருகனை முறையாக வழிபட்டு வந்தனர். அவர் களுக்கு முருகன் கனவில் பணித்தபடி, புற்று ஒன்றிலிருந்து கிடைத்த முத்துக்குமாரப் பெரு மானின் சிலைத் திருமேனி கிடைத்தது. அப் பெருமானுக்கு, அவர்களின் முயற்சியால் அமைந்த திருக்கோயிலே, இன்று கந்தகோட் டம் என மிகவும் சிறந்து விளங்குகின்றது.



கந்த கோட்டம்

## மல்லிகேசுவரர் கோயில் :

சென்னையில் இலிங்கிச் செட்டித் தெருவில் இக்கோயில் அமைந்துள்ளது. இந்த இடம்




மல்லிகைச் செடியின் கீழ் முளைத்தெழுந்ததனால் இங்குள்ள இறைவனுக்கு மல்லிகேசுவரர் என்று பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர். கோயிலை எழுநிலைக் கோபுரமும், பதினறுகால் மண்டபமும் அழகுசெய்கின்றன. கோயிலிலுள்ள மண்டபங்கள், அன்பர்கள் பலரால் அவ்வப் போது கட்டப்பட்டன. யாழ்ப்பாண நல்லூர், சீலத்திரு ஆறுமுக நாவலர் அவர்கள், சென்ற நூற்றாண்டில் இக்கோயிலில் தொடர்ந்து பெரிய புராணம் முதலிய விரிவுரைகள் ஆற்றிவந்தார். கோயிலுக்கு எதிரில் இப்போது மறைமலை அடிகள் நூலகம் உள்ள வீட்டின் முன்புறத்தி லேயே, வடலூர் இராமலிங்க அடிகளார் முதன் முதல் பெரிய புராண விரிவுரை செய் தருளினர் என்பர்.

## காளிகாம்பாள் கமடேசுவரர் கோயில் :

இக்கோயில் தம்புச் செட்டித் தெருவில் உள்ளது. கமடம் என்னும் ஆமை வடிவு

காளிகாம்பாள் கமடேசுவரர் கோயில்



தொடர்ச்சி 41-ம் பக்கம்

# ஓட்டைக் குடம்

செந்தமிழ்ச் செல்வர் உயர்திரு கி. வா. ஜகந்நாதன், M.A.,

உண்மையான அமுதக்கடல் இன்னது என்பது அவர் அறிந்து கொண்டார். தேவர்கள் உண்ட அமுதம் உண்மையான அமுதம் அன்று. அமுதம் என்பது அமிர்தம் என்பதன் திரிபு. தன்னை உண்டாருக்குச் சாவாமையை உண்டாக்குவது அமுதம். தேவர்கள் அமுதத்தை உண்டாலும் அவர்கள் சாவாமல் சிரஞ்சீவியாக இருப்பதில்லை. அவரவர்களுக்கு வரையறுத்த ஆயுள் முழுவதும் வாழ்ந்து பின்பு இழந்து போகிறார்கள். ''நூறு கோடி பிரமர்கள் நுங்கினார்'' என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். அமுதத்தை உண்ணுவதற்கு முன்பு தேவர்கள் வெவ்வேறு காலங்களில் இறந்து போனார்கள். அமுதம் உண்ட பிறகு அவரவர்களுடைய அளவுக்கு ஏற்றபடி நூறு ஆண்டுகள் வாழ்ந்தார்கள் .ஆகவே அவர்கள் உண்ட அமுதம் சாவாமையைத் தருவது என்று சொல்ல இயலாது.

''விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டிருந்தருள் செய்குவாய்''

என்பது சிலப்பதிகாரம்.

உண்மையான அமுதம் நிரம்பிய கடலைப் பற்றி அவர் உணர்ந்தார். அதைத் தம்மிடத்தில் உள்ள குடத்தில் நிரப்பிக் கொள்ளவேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் அவரிடம் இருந்த குடமோ ஓட்டைக் குடம். ஐந்து ஓட்டைகள் உள்ள அந்தக் குடத்தில் சிறிதளவு தண்ணீரைக் கூடச் சேமித்து வைக்க முடியாது. அதை முழுவதும் அமுதத்தால் நிரப்ப வேண்டும் என்று ஆசைப்பட்டால் அது நடக்கிற காரியமா? இருந்தாலும் அவருக்குக் குடம் நிறைய அமுதம் நிரப்ப வேண்டும் என்ற ஆசை மீதூர்ந்து வந்தது. என்ன செய்யலாம் என்று பார்த்தார். பலரிடம் வழியைக் கேட்டார். ''குடத்திலுள்ள ஓட்டைகளை அடைத்துவிட்டால் உங்கள் விருப்பம் கைகூடுமே'' என்று சிலர் சொன்னார்கள். சொல்லுவது எளிதாக இருந்தாலும் அதைச் செய்வது மிகவும் அரிதாக இருந்தது. எளிதிலே அடைபடும் ஓட்டைகள் அல்ல அவை. முயன்று பார்த்தார். எந்த ஓட்டையையும் அடைக்க முடியவில்லை. ஓட்டைக் குடம் ஓட்டைக் குடமாகவே இருந்தது. அவ்வளவு முயன்றும் அடைபடாத குடத்தைக் கண்டு வருந்தினார். ஆனாலும் அவர் ஆசை குறையவில்லை. எப்படியாவது குடத்தில் அமுதத்தை நிரப்ப வேண்டும் என்ற விருப்பம் மிக மிக முறுகி எழுந்தது. பொருமினார் ; புலம்பினார் ; அழுது கரைந்தார். பிறகு அந்த அற்புதம் நிகழ்ந்தது.

ஓட்டைக் குடம் ஓட்டைக் குடமாகவே இருக்க, அதில் அமுதம் நிரம்பிவிட்டது. குடத்தை அடைப்பதற்கு முயற்சிகள் செய்து பயனில்லை என்று அறிந்து வேசாறி நின்ற அவருக்கு இந்த அற்புதம் சொல்லவொண்ணாத இன்பத்தையும் வியப்பையும் உண்டாக்கியது.

இந்த அற்புதத்தை நிகழ்த்தியவன் சிவபெருமான். அவனே அமுதக் கடல். மாணிக்கவாசகரிடத்தில் இந்த அற்புதத்தை நிகழ்த்தினான்.

''கண்ணார் அமுதக் கடலே போற்றி''

என்று அவர் பாடியிருக்கிறார். தம்பால் இணைந்த பொருள்களை மாயாமல் வைக்கும் பெருங்கருணையாளன் சிவபெருமான். தன்னை உண்டவர்களை மாய்த்துத் தானும் மாயும் இயல்புள்ள ஆலகால நஞ்சை இறைவன் உண்டான். அதனால் அவனுக்கு எந்த ஊறும் நேரவில்லை. அது பெரிய வியப்பன்று. அவன் உண்ட நஞ்சும் அவனுடைய திருக்கழுத்தில் சிரஞ்சீவியாக நின்று நிலவுகிறது. இதனால் நஞ்சையும் வாழ வைக்கும் அமுதம் இறைவன் தான் என்பது புலனாகும். இதனை உணர்ந்தாவர் மாணிக்கவாசகர்.

அவரிடம் இருந்த குடம் மனம். ஐந்து பொறிகளின் வழியே எண்ணங்களைச் செலுத்தி ஆசை வலையை விரிக்கும் தன்மையை உடையது மனம். மனம் என்னும் குடத்தில் ஐந்து பொறிகளாகிய ஓட்டைகள் இருக்கின்றன. மனத்தில் எதை வைத்தாலும் தங்குவதில்லை. ஒருமுகப்பட்டு நிற்கும் திறம் மனத்துக்கு இல்லாமையால் எதையும் தொடர்ந்து பற்றிக்கொண்டு அமையும் தகுதி அதற்கு இல்லை. ஐந்து இந்திரியங்களின் வழியாகச் செல்லும் மன ஓட்டத்தை நிறுத்தினால் உள்ளத்தே ஒருமைப்பாடு உண்டாகும். இது மிகவும் அரிய காரியம். ஆதலால் அடைக்க முடியாத ஓட்டைக் குடம் போல மனம் இருக்கிறது.

மாணிக்கவாசகர் தம்முடைய மனத்தில் இறைவனை நிறுத்தப் பார்த்தார். அமுதக் கடலான இறைவனை ஓட்டைக் குடமான மனத்

தில் நிறுத்த இயலாது என்பதை உணர்ந்து வருந்தினர். பொறிகளை அடக்கி மனத்தை நல்ல குடமாக்கி அமுதக் கடலைப் பூரிக்க முயன்றும் முடியவில்லை. இறைவனிடம் முறையிட்டுக் கொண்டார். அவன் அற்புதமான நிகழ்ச்சியை உண்டாக்கினன்.

''நீ ஓட்டைக் குடத்திலுள்ள ஓட்டைகளை அடைத்துச் சிரமப்பட வேண்டாம். குடத்தில் அமுதத்தை இட்டு நிரப்ப முடியாது'' என்று சொல்லி, அந்த ஓட்டைக் குடத்தை அமுதக் கடலிலே அமிழ்த்திக் கொண்டான். குடத்தில் அமுதத்தைப் பெய்யாமல் அமுதக் கடலில் குடத்தைப் போட்டுவிட்டான். அதில் இருந்த ஓட்டைகளின் வழியே அமுதம் உள்ளே புகுந்தது. குடம் அமுதத்தால் நிரம்பியது. எந்த ஓட்டைகளின் வழியே உள்ளே இடும் அமுதம் புறத்தே ஒழுகிவிடும் என்று அஞ்சினரோ அந்த ஓட்டைகளின் வழியே இப்போது அமுதம் உள்ளே புகுந்து நிரம்பிவிட்டது. ஆண்டவன் குடத்தில் அமுதத்தை இடுவதற்கு மாருக அமுதத்தில் குடத்தை இட்டான். துளைகளின் வழியே வெளியே போகும் போக்கின்றி உள்ளே புகும் போக்கே அமைந்தது. இந்த அதிசயத்தை மணிவாசகர் சொல்கிருர்.

இதுவரையில் ஐந்து இந்திரியங்களின் வாயிலாக மனம் உலகப் பொருள்களை அவாவி அநுபவித்து வந்தது. புறத்திலே ஓடி உலவி நிலையாமல் இருந்தது. இறைவனுடைய திருவருள் பெற்ற பிறகு அந்தப் பொறிகள் உண்முகமாகத் திரும்பின. புறப்பொருள்களை எல்லாம் நாடிச் சென்று தடுமாறின. போக்கு மாறி, உண்முகத்தே சென்று இறைவன் அருளில் ஈடுபடலாயின.

முன்பெல்லாம் அவருடைய சிந்தை உலகப் பொருளைப் பற்றியே சிந்தித்தது. அதனுல் ஒருகாலைக்கு ஒருகால் ஆசை மிகுதியாகி வந்தது. அந்த ஆசைக்கு எல்லையே இல்லை என்று தோன்றியது. சிந்தையின் வெளிப்பயணம் முடிவிடம் காணுமல் விரிந்து கொண்டே வந்தது. அதனுல் உண்டான துன்பங்களுக்கு அளவு இல்லை. இப்போதோ சிந்தனையின் வெளிப் பிரயாணம் மாறி உட்பிரயாணம் ஆகிவிட்டது. இறைவன் சிந்தனையைத் தனக்கு ஆக்கிக் கொண்டான்.

அவ்வாறே புறப்பொருள்களில் புகவிட்டுத் துன்பத்தை அடைந்த இரண்டு கண்களையும் தன்னுடைய இரண்டு திருவடி மலர்களைக் காணும்படி செய்தான். உலகப் பொருள்களைக் கண்டு வெம்மையை அடைந்திருந்த அந்தக் கண்கள் இப்போது இறைவனுடைய தாமரைத் தாள்களில் படிந்து குளிர்ச்சியை அடைந்தன. இதற்கு முன் யார் யாரையோ வணங்கியும் செயல் முற்றுப் பெருமையால் தோல்வியுற்றும் வளைந்த தலை, இப்போது இறைவனுடைய திருத்தாளை நோக்கி வணங்கியது. சொல்லில் உண்டாகும் குற்றங்கள் நான்கு என்று சொல்வார்கள். பொய், வன்சொல், பயனில்சொல், புறங்கூறுதல் ஆகியவை அவை. இவற்றிலே ஈடுபட்டு மேலும் மேலும் பிறவிப் பிணிக்கு வழி செய்துவந்த பிணிவாக்காக இருந்தது வாய்மொழி. இப்போது அதுமாறி இறைவனைப் பற்றிய புகழைக் கூறும் மணி வாக்காகிவிட்டது. பொறிகள் யாவும் புறநோக்கிலே சென்று கொண்டிருந்த போக்கு மாறிவிட்டது. அவை தொழிற்படாமல் சும்மா இருந்தால் மனம் அடங்கும் என்று சிலர் கூறுவார்கள். இங்கோ அப்படியில்லை. அவை தத்தமக்குரிய தொழில்களைச் செய்து வந்தன. மடைமாறி இயங்கின. புறப்போக்கு மாறி உண்முகப் போக்கில் ஈடுபட்டன. இத்தகைய அமைப்பை இறைவனே செய்தான். புறத்தில் பொறிகளைச் செலுத்திய தனல் ஆசை நிறைவேறவில்லை. வயிற்றைப் போலப் பொறிகளும் என்றும் தூராக் குழிகளாய் இருந்தன. இப்போது அவை நிரம்பின. எல்லாம் இறை மயமாக நின்று அமைதி பெற்றன. அமுதக் கடல் உள்ளே நிறைந்த பிறகு துளைகளுக்கு வேலை இல்லாமல் ஒழிந்தது. இதை மணிவாசகர் சொல்கிருர் :

''சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள் ஆர
வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே, மலையே, நின்னைத்
தந்தனைசெந் தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே, இரண்டுமிலித் தனியே னேற்கே.''

ஓட்டைக் குடத்தின் உள்ளே புகுந்த அமுதக் கடலைப் போல ஐம்புலன்களும் ஆர இறைவன் உள்ளே புகுந்தான். தன்னையே கொடுத்துவிட்டான். அவனுடைய வடிவம் செக்கச் செவேலென்று இருப்பது. தாமரைக் காடு பூத்தாற்போலே எழில் நிரம்பி விளங்குவது. அந்த மேனியில் ஒளி வீசுகிறது. தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சிவ பரஞ்சுடர் இந்த அற்புதத்தை நிகழ்த்தியது. இந்திரசால மகேந்திரசால வித்தைகள் இதற்குச் சமம் ஆகா. இறைவன் செய்த விச்சை அல்லது வித்தை அவன் ஒருவனுல்தான் செய்ய முடியும். இம்மைக்கு உறுதிபயக்கும் செயல்களையும் மறுமைக்கு உறுதி பயக்கும் செயல்களையும் செய்யாமல் இருவகைப் பயன்களையும் இழந்து நின்ற தமக்கு இத்தகைய பேரின்பஅநுபவத்தை இறைவன் அருள்செய்தான் என்று வியக்கிருர் மணிவாசகர். இப்போது அவருடைய மனம் இறைவன் மயமாக நிற்கிறது.

# சிரிக்கும் திறம்

உயர்திரு. நீதிபதி எஸ். மகராஜ பிள்ளை, B.A., B.L.,

பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குள்ளே போய்க் கவனித்தால், ஒரு சுவையான உண்மை துலங்கும். அங்குள்ள நோயாளிகள் பலர் நம்மைப் பார்த்துப் ''பைத்தியமே'' என்று அழைப்பார்கள். நாம் பைத்தியமில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், அந்தப் பைத்தியக் காரர்களோ நாம் எல்லோரும் பைத்தியம் பிடித்தவர்கள் என்று உறுதியாக நம்புகிறார்கள். அவர்களுடைய உறுதிப்பாட்டை எளிதில் அசைக்க முடியாது. எப்போது அந்த உறுதிப் பாடு தளர்கிறதோ, எப்போது அந்த நோயாளி கள் நமக்கு உள்ளத்தில் நோய் பிடித்திருக்கிறது என்று எண்ணத் தொடங்குகிறார்களோ, அப் போதுதான் அவர்களுடைய நோய் குணப்பட்டு வருகிறது என்று வைத்தியர்கள் சொல்லுவார் கள்.

தலைமயிரைப் பிய்த்துக் கொண்டும், கட்டி யிருக்கும் வேட்டியைக் கிழித்தெறிந்து கொண் டுமிருக்கிற பைத்தியக்காரன், தலையலங்காரம் செய்து, சீருடையணிந்து, காரண காரியத் தொடர்போடு சிந்திக்கும் வல்லமை பெற்ற நம்மைப் பார்த்து, ''அட பைத்தியமே'' என்று அழைக்கும்போது, நமக்குச் சிரிப்பு வருகிறது. பைத்தியம் நமக்கில்லை; அவனுக்குத்தான் என்ற தெளிவிலிருந்து வருகிறது நம்முடைய சிரிப்பு.

நாம் பைத்தியக்காரர்கள் அல்லர் என் பதை யறிந்து பெருமைப்பட வேண்டியதுதான். ஆனாலும், நம்முடைய சிந்தை நோயற்றது என்று சொல்ல முடியாது. அதற்குள்ளே எத் தனையோ திருகல்கள், கோணல்கள், பித்தமயக் கத்தால் ஒன்றை மற்றொன்றாகக் காணுகிறோம். ஆணவ மயக்கத்தால் எல்லாம் நம்முடைய செயல் என்று நாம் நம்புகிறோம் ; உறுதியா கவே நம்புகிறோம். அந்த ஆஸ்பத்திரிக்குள் பார்த்தோமே, அவர்களுடைய உறுதிப்பாடு நமக்கும் இருக்கிறது. இந்த உறுதிப்பாடு எப் போது தளர்கிறதோ, நமக்கும் பித்த மயக்கம் இருக்கிறது என்று எப்போது நாம் உணரத் தொடங்குகிறோமோ, அப்போதுதான் நமக்கு நோய் குணப்பட்டு வருகிறது என்று ஞான வைத்தியர்கள் கருதுகிறார்கள்.

பித்தத்திலிருந்து தெளிந்தவர்கள் ஞானி கள். ''எல்லாம் இறைவன் செயல்'' என்பதை சுயானுபவத்தில் உணர்ந்தவர்கள் அவர்கள். ஆனால், நாம் அவர்களைப் பார்த்து ''நீங்கள் பித்தர்கள்'' என்று சொல்லுகிறோம். பித்தம் இருப்பது நம்மிடத்தில்தான் என்ற தெளிவிலி ருந்து பிறக்கிறது அவர்களது தெய்வீகச் சிரிப்பு.

மாணிக்கவாசகர் சிறந்த ஞானி; பித்த மயக்கத்திலிருந்து விடுபட்டவர் ; இறைவனு டைய திருமேனியைக் கண்டு பேரானந்தம் அடைந்தவர். ஆனந்தக் களிப்பில் அவர் தம் முடைய அனுபவங்களை உலகத்தாருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். என்ன சொன்னார்?

''இறைவன் எனக்குக் காட்சி கொடுக் கிறான்; பாறுங்கல் போன்ற என் இதயத்தைப் பிசைந்து உருக்கிவிட்டான்; 'இதைச் செய், அதைச் செய்' என்று கட்டளையிடுகிறான். அவ னுக்குப் பணி செய்வதிலே எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது'' என்றெல்லாம் சொல்லி வந்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அண்டை வீட்டுக்காரர்கள் அவரைப் பார்த்துச் சிரித்தார் கள். அவர் வாக்கு மூலத்தை அவர்கள் நம்ப வில்லை. ''விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும் தென் படாத கடவுள் இந்த மாணிக்கவாசகனிடத் திலே வந்து வந்து பேசுகிறாராம். இவன் உள் ளத்தை உருக்கிவிட்டாராம், இவனைப் பணி கொள்ளுகிறாராம்! பேஷ்! பேஷ்! பித்தம் தலைக்கேறிவிட்டது இவனுக்கு'' என்று ஊரார் சிரிக்கத் தொடங்கினார்கள்.

இந்தச் சிரிப்பை நினைத்து நினைத்து அனு பவிக்கிறார் மாணிக்கவாசகர். பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே உள்ளவன் நம்மைப் பார்த்து, பைத்தியம் என்று சொல்லிச் சிரித்தானே, அதை எப்படி நாம் அனுபவித்தோம், அதைப் போலவே நம்முடைய அசட்டுச் சிரிப்பைப் பார்த்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர்!

அரிக்கும் பிரமர்க்கும் மற்று
அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி
நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும், பணிகொள்ளும்,
என்பது கேட்டு உலகர் எல்லாம்
சிரிக்கும் திறம்பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ

பித்தர்கள் சூழ்ந்த இவ்வுலகத்திலே, நமக்குப் பித்தம் தெளியும்படி செய்துவிட்டான் அந்த அருளாளன் என்று தெரிந்ததும், ''அடி, முழக்கு, தெள்ளேணம் கொட்டு'' என்று மாணிக் கவாசகர் ஆர்ப்பரிக்கிறார். நன்றியும், பக்தி யும், ஹாஸ்யமும் கலந்த பாடல் இது. அபூர்வ மான பாடல்.

**

# பழந்தமிழ் நாடகச் சிறப்பு

முத்தமிழ்க் காவலர்

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்.

**1. ஆடல் :**

இஃது இருவகை. இவை சாந்தி, விநோதம் என்பன. அகக்கூத்து, புறக்கூத்து எனவும் ஆகும். இவ்விரண்டு வகைக் கூத்தும் 11 தொழிற்பெறும்.

(அ) 'சொர்க்கம்'. இது சுத்த நிருத்தம். அஃதாவது தாள லயத்தை ஆதாரமாக உடையது. (ஆ) 'மெய்த் தொழில்'. இது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப் படும். இஃது உள்ளக் குறிப்பை ஆதாரமாக உடையது. (இ) 'அபிநயம்', இஃது அதைத் தழுவாது பாட்டின் பொருளுக்கு ஏற்பக் கைகாட்டி உணர்த்துவது. (ஈ) 'நாடகம்', இது கதை தழுவி வருகின்ற கூத்து.

இவை நான்கும் நாயகன் சாந்தமாக ஆடும் கூத்தாதலின் 'சாந்திக் கூத்து' எனப் பெறும். பின்வரும் ஏழும் 'விநோதக் கூத்து'களாம். (உ) இது காமமும், வென்றியும் பொருளாகக் கொண்டும் குரவைச் செய்யுளைப் பாட்டாகக் கொண்டும் ஏழு அல்லது ஒன்பது பேர் கை பிணைந்தாடுவது. (ஊ) 'கவிநடம்'. இது கழாய்க் கூத்து என்னப்பெறும். (எ) 'குடக் கூத்து'. தலையில் கும்பம் வைத்து ஆடுவது. (ஏ) 'கரணம்'. வீழ்ந்து ஆடுதல். (ஐ) நோக்கு பாரமும், நுண்மையும் மாயமும் ஆகும். (ஒ) 'தோற்பாவை' தோலால் பாவை செய்து ஆட்டுவது. இது பொம்மலாட்டம் எனப் பெறும். (ஓ) 'நகைக் கூத்து' நகைப்பிற்குரிய வேடிக்கைக் கூத்துக்களாம்.

**2. பலவகைக் கூத்து :**

இது வென்றி, வசை என இரு வகைப் படும். மாற்றான் ஒடுக்கமும் மன்னன் உயர்ச்சியும் வென்றியாகும். பலவகை உருவமும் பழித்துக் காட்டுவது 'வசை'யாகும்.

**3. கூத்தின் இலக்கணம் :**

இது நிலை, பாதம், அங்கம், வருத்தனை, திருத்தக்கை என ஐவகைப்படும். இதில் நிலை அறுவகை; பாதம் ஐவகை; அங்கம் பதினாறு வகை; வருத்தனை நான்கு வகை; திருத்தக்கை முப்பது வகை. ஆக வகை 61.

**4. விலக்கு உறுப்பு :**

இது வேந்து விலக்கு, படை விலக்கு, ஊர் விலக்கு என்னும் விலக்குகளாகிய பாட்டுகளுக்கு உறுப்பாய் வருவது. இது 14 வகையாகும். 1. பொருள், 2. சாதி, 3. யோனி, 4 விருத்தி—இந்நான்கும் ஒரு வகை. 5. அவை, 6. குறிப்பு, 7. சத்துவம், 8. அபிநயம்—இந்நான்கும் மற்றொரு வகை. 9. சொல், 10. சொல் வகை, 11. வண்ணம், 12. வரி—இந்நான்கும் வேறொரு வகை. 13. சந்தி, 14. சேதம்—இவ்விரண்டும் பிறிதொரு வகை.

இப்பதினான்கு துறைகளுக்கும் விளக்கங்கள் உள. நான்காவதாக உள்ள விதிக்கு ஒரு விளக்கத்தை இதன் அடியிற் காண்க. 'விருத்தி' என்பது நாடகத்தின் இயல்பு என்பதாகும். இவ்வியல்பு நால்வகைப்படும் : (அ) 'சாத்துவதி' அறம் பொருளாகக் கொண்டு தெய்வ மானிடர் தலைவராக வருவது. (ஆ) 'ஆரபடி' பொருளைப் பொருளாகக் கொண்டு வீரமகன் தலைவனாக வருவது. (இ) 'கைசிகை' இன்பம் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வருவது. (ஈ) 'பாரதி' என்பது கூத்தன் தலைவனாக நடன், நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது என்றாகும்.

**5. சுவை :**

சுவை ஒன்பது வகைப்படும். அவை : வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, இன்பம், துன்பம், வெகுளி, நகை, சமநிலை என்பன. இதனை நவரசம் என வடமொழியாளர் கூறுவர்.

**6. நடிப்பு :**

இது 24 வகைப்படும். இதனை அபிநயம் எனக் கூறுவதும் உண்டு.

1. வெகுண்டோன், 2. ஐயமுற்றோன், 3. சோம்பினோன், 4. குடித்தோன், 5. மகிழ்ந்தோன், 6. அழுக்காறுடையோன், 7. இன்பமுற்றோன், 8. தெய்வமுற்றோன், 9. மயக்கமுற்றோன், 10. உடன்பட்டோன், 11. உறங்கினோன், 12. உறங்கி விழித்தோன், 13. செத்தோன், 14. மழையில் நனைந்தோன், 15. பனியில் நனைந்தோன், 16. வெயிலில் காய்ந்தோன், 17. வெட்கமுற்றோன், 18. வருத்தமுற்றோன், 19. கண்ணோவுற்றோன், 20. தலைநோவுற்றோன், 21. நெருப்புப் பட்டோன், 22. சீதமுற்றோன், 23. வெப்பமுற்றோன், 24. நஞ்சு உண்டோன் என்பனவாம்.

இவை 24-க்கும் சுவை 9-க்கும் சிலப்பதிகாரத்தில் உள்ள அரங்கேற்று காதைக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் காட்டிய பாடல்கள் 33-ம் நல்விளக்கமாகும். அவை ஒவ்வொன்றும் நடிப்புக் கலையின் திறத்தைக் கூறி நம்மை வியப்படையச் செய்

கின்றன. இன்றைய நடிப்புக் கலையின் திறத்தைக் கூறி நம்மை வியப்படையச் செய்கின்றன. இன்றைய நடிப்புப் புலவர்களும் நடிப்பைச் சுவைப்பவர்களும் இக்கலையின் திறத்தை அறிய வேண்டுமென்பது எனது ஆசை.

இவற்றுள் 25இவதாகிய நஞ்சுண்டோன் நடிப்புக்கு உரிய இலக்கணப் பாடலை மட்டும் இங்கு எடுத்துக் காட்டாகக் காட்டுகிறேன்.

''கொஞ்சிய மொழியும் கூரெயிறு மடித்தலும் பஞ்சின் வாயிற் பனிநுரை கூம்பலும் தஞ்ச மாந்தர்தம் முகம் நோக்கி ஓர் இன்சொல் இயம்புவான்போல் இயம்பாமையும் நஞ்சுண்டோன்தன் அபிநயம் என்ப''. பிறவற்றிற்கும் இவ்வாறு இலக்கணங்கள் உள.

**7. சொல் :**

சொல் என்பது ஓர் உறுப்பு. அஃது உட்சொல், புறச்சொல், ஆகாயச் சொல் என மூவகைப்படும். (அ) உட்சொல் என்பது நெஞ்சோடு கூறுவது. (ஆ) புறச்சொல் என்பது கேட்பார்க்கு உரைப்பது. (இ) ஆகாயச் சொல் என்பது தானே கூறுவது என்பனவாம்.

**8. சொல் வகை :**

சொல் வகையாவது சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என நால்வகைப்படும். (அ) சுண்ணம் நான்கடியால் வருவது. (ஆ) சுரிதகம் எட்டடியால் வருவது. (இ) வண்ணம் பதினாறு அடியால் வருவது. (ஈ) வரிதகம் முப்பத்திரண்டு அடிகளால் வருவது. இந்நான்கின் விளக்கமும் வரியும் ஆதலின் வண்ணத்தின் விளக்கத்தை மட்டும் அடியிற் காண்க.


(அ) பெருவண்ணம். இது 6 வகை. (ஆ) இடை வண்ணம். இது 21 வகை. (இ) வனப்பு வண்ணம். இது 41 வகை. ஆக வகை 3-க்கும் வண்ணம் 68-ஆம். தொல்காப்பியர் 20 வண்ணம் கூறியுள்ளார். 100 வண்ணம் கூறினாரும் உளர்.

**9. வரி :**

வரி என்பது வரிக்கூத்துக்கு உரிய பாடல். இது, பண், திறம், செயல், பாணி என நால் வகைப்படும். வரிப் பாடல்கள் திணை நிலைவரி, கிணை நிலைவரி, முகமுடைவரி, முகமில் வரி, படைப்பு வரி எனப் பலபடப் பாகுபாடு எய்தும்.

இவற்றின் இயல்புகள் அனைத்தையும் சிலப்பதிகாரத்தின் கானல் வரியுள்ளும், வேனிற் காதையுள்ளும் விளங்கக் காணுங்கள்.

''கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்
செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று''
—திருவள்ளுவர்.



காட்பாடி நகரியம், காந்தி நகர், வேலூர்-6 அருள்மிகு வரசித்தி விநாயகர் கோவில் திருப்பணிக்குழுவினர், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ.,பி.எல்., ஐ.ஏ.எஸ். அவர்களையும், துணையாணையர் திரு. எம். சூர்யராஜ், பி.ஏ.,பி.எல். அவர்களையும் வரவேற்றல் (2-11-75).

# ஸ்ரீகிருஷ்ண அந்தாதி

கவிஞர் கண்ணதாசன்

### காப்பு

பாடிய கல்வியும் பற்றிய ஞானமும்
படர்ந்து கற்க
சூடிய மாலையும் தோற்றிய வன்மையும்
தொடர்ந்து நிற்க
நாடிய பாதமே நல்வினைக் காரர்கள்
நண்பனே நான்
தேடிய திருமுகம் தேவனே நின்முகம்
திருக்கண்ணனே!

—o—

கண்ணனை வண்ணக் கமலனை நெஞ்சினில்
கலந்த பேர்க்கு
விண்ணனை செல்வமும் வியத்தகும் பெற்றியும்
விளையக் கண்டால்
கண்ணனை யார்களின் காதலும் எள்முனைக்
கடுகு போலும்
பண்ணனை யானவன் பாதாம்பு யத்தையாம்
பணிகின் றோமே!

பணிவதே நங்கடன் பகர்வதே நங்கடன்
பாடிப் பாடி
அணிவதே நங்கடன் அணைவதே நங்கடன்
அணைத் தணைத்துத்
தணிவதே நங்கடன் தாமரைக் கால்களில்
தலைக விழ்த்து
மணியதே போலும்இம் மானிடப் பேற்றினை
மலர்கின் றோமே!

மலரெலாம் மலர்களோ மணியெலாம் மணிகளோ
மன்றி லாடும்
கலையெலாம் கலைகளோ கனியெலாம் கனிகளோ
கண்ட கோயிற்
சிலையெலாம் சிலைகளோ தேவெலாம் தெய்வமோ
திருக் கண்ணன்
விலையிலா வரங்களை வேறெவர் நல்குவார்
விடைசொல் வாயே!

சொல்வதே சொர்க்கமாய்த் தோன்றினாற் கண்ணநின்
தோளி ரண்டை
வெல்வதச் சொர்க்கமும் வெல்வதோர் வெற்றியே
வேத கீதை
நல்கினான் பேரருள் நல்குவார் யாரருள்
நாளும் நாளும்
பல்குவோம் பல்குவோம் பார்த்தனின் தோழனின்
பதம் பணிந்தே!

பணிந்தாரைத் தன்னைப் பணிவோடு பற்றுவார்
பாலுள் ளத்தை
அணிந்தாரைத் தன்னை அன்போடு பற்றுவார்
அறிவுள் ளத்தைத்
துணிந்தாரை என்றும் தூய்மையே எண்ணுவார்
துயர நெஞ்சைப்
பிணைந்தானை கண்ண பெருமானைப் பாடினாற்
பிணிகள் போமே!

போமெனும் வார்த்தையைத் துரியனார் சொன்னதும்
போர்க் களத்தில்
ஓமெனும் சங்கினை ஊதினான் தேரினை
ஓட்டி வந்தான்
நாமெனும் ஆணவக் கௌரவர் நூற்றுவர்
நடை யழித்துத்
தேமெனத் திறமெனச் செயலெனத் தேர்ந்தவன்
திருக் கண்ணனே!

கண்ணெலாம் அவன்முகம் காணலாம் அதிலுமோர்
காதல் தோன்றும்
பண்ணெலாம் அவன்புகழ் பாடலாம் மொழியிலோர்
பசுமை தோன்றும்
எண்ணெலாம் அவன்பதம் எண்ணலாம் அதனிலோர்
இனிமை தோன்றும்
விண்ணெலாம் அவனெனில் வீடெலாம் அவன்வர
விளக்கம் ஏனோ!

விளக்கவோர் உட்பொருள் வியக்கவோர் அற்புதம்
மேலும் கீழும்
அளக்கவோர் நாயகன் அருளவோர் மாதவன்
அன்றும் இன்றும்
களக்கமும் நீக்குவான் காலத்தில் தோற்றுவான்
கண்ண னன்றி
விளக்கிலே நெய்யிலை வீட்டிலே ஒளியிலை
விரைக மாதோ!

மாதவன், மகனவன், மழலையின் மொழியவன்
மண்ணி லார்ந்த
ஆதவன் அரியவன் அறிவினுக் கரியவன்
அன்பு ளோர்க்குத்
தூதவன் துணையவன் சூதவன் ஜெயமவன்
தோற்றத் தாலே
யாதவன் ஆயினும் யாதவன் திறமென
அறிக நீரே!

நீரவன் நிலமவன் நிழலவன் நெருப்பவன்
நினைந்து கொஞ்சி
நீரவன் கால்களை நெஞ்சினைத் தோள்களை
நெருங்கி நின்றால்
நேரவன் தோன்றுவான் நிழலவன் காட்டுவான்
நேரம் பார்த்துத்
தேரவன் ஓட்டுவான் சீரவன் கூட்டுவான்
திருத் தெய்வமே!

தொடரும்

தொலைபேசி: 421676

# அருள்மிகு
# வடபழநி ஆண்டவர்
# திருக்கோயில்

## வடபழநி. சென்னை. 26.

திருமுருகன் தலங்களுள் தொன்மை வாய்ந்த தென்பழநியில் பழநி யாண்டியாகவும், சென்னை, வடபழநியில் வேண்டுவோர்க்கு வேண்டும் வரமளித்துக்கொண்டும் கலியுக வரதனாய் எழுந்தருளியிருப்பவர் வடபழநி ஆண்டவர். வைகாசி விசாகப் பெருவிழா, கந்த சஷ்டிப்பெருவிழா, பங்குனி உத்திரப் பெருவிழா முதலியவை இவ்வாலயத்தின் முக்கிய விழாக்களாகும். கந்த சஷ்டி, பங்குனி உத்திரப்பெருவிழாக்களில் இலட்சார்ச்சனைகள் மிக விமரிசையாக நடைபெறும். மாதாந்திரக் கிருத்திகைக்கும், ஆடிக் கார்த்திகை தை மாதங்களிற் விசேடக் கிருத்திகைக்கும் பெருவாரியான பக்தர்கள் தரிசனத்திற்காக வருகிறார்கள். பிரதி தினமும் ஆண்டவனுக்குச் சந்தனக்காப்பு, விபூதி, பஞ்சாமிர்தம் மற்றும் பால் அபிஷேகங்கள் முறையே ரூ. 151/-, ரூ. 51/-, ரூ. 21/- கட்டணங்களில் செய்யப்படுகின்றன. திருமணங்கள் அதிக அளவில் நடைபெறுகின்றன. திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணிக்கு நிதி உதவி அளிப்பவர்கள் ''நிர்வாக அலுவலர்'' முகவரிக்கு அனுப்பி வடபழநி ஆண்டவர் அருளுக்குப் பாத்திரராகுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**திரு. ஏ. எஸ். இராமன்,**
''தலைவர்''
அறங்காவலர் குழு

**திரு. ஐ. ஆறுமுகம்**, பி.ஏ., பி.எல்.,
நிர்வாக அலுவலர்

அறங்காவலர்கள்

**திரு. வி. பாலகிருஷ்ணன்** **திரு. சே. கண்ணப்பன்**
**திரு. எச். ராஜரத்தினம்** **திருமதி. ஜோதிவெங்கடாசலம்,**

# வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறி

*பேராசிரியர்* திரு. அ. கி. பரந்தாமனர், எம். ஏ.

தெய்வத் தமிழ் நாடு செய்த நற்றவப் பயனுல் இன்று உலகம் பேரற்றும் வள்ளுவர் இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில் தோன்றி, நாம் மட்டுமின்றி உலக மக்களும் உய்யும் பொருட்டு எய்துதற்கு அரிய ஒரு நூலை, எக்காலத்தவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய திருமறையை, உலகப் பொது நூலை, இம்மைக்கும் மறுமைக்கும் வழி காட்டும் திருக் குறளை, உடல் நோய்க்கும் ஆன்மநோய்க்கும் ஒரு மருந்தாக அளித்துச் சென்முர். நிலவு லகிலிருந்து இரண்டரை இலட்சம் கல் தொலை விலிருக்கும் நிலாவுலகில் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட மணி நேரத்தில் கால்வைத்து நடந்து இம்மண்ணுலகுக்குத் திரும்பும் அளவு அறிவியற் சிறப்புப் பெருமை அறவே நமக்கு இல்லையெனினும், வள்ளுவரை உலகுக்கு ஈந்து வான் புகழ் கொண்ட பெரும் பெருமை, இன்று நமக்குண்டு. திருவள்ளுவர் அளித்த திருக்குறள் 20 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு நில வுலகில் இன்று மக்கள் உள்ளத்தில் உலவி வரு கின்றது. நிலாவுலகில் மக்கள் குடியேறினும் அங்கும் திருக்குறள் போய் உலவினும் உலாவும்.

திருக்குறளைப் படித்த ஐரோப்பிய அறிஞர் பலரும், இந்நாட்டுப் பெரியோர்கள் பலரும் பாராட்டிப் புகழ்ந்திருப்பதைக் காண்கிறோம். மாஸ்கோ பல்கலைக் கழகத்தின் கீழ்நாட்டுமொழி கள் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணி புரிந்துவரும் ருசிய அறிஞர் வி. மகரெங்கோ என்பவர் திருக்குறளைப் படித்து ஆராய்ந்து அண்மையில் எழுதியிருக்கும் கட்டுரை வெளி வந்துள்ளது. அதில் அவர் திருக்குறளின் சிறப்பைப் பற்றிக் கூறியிருக்கும் சில பகுதிகளை மட்டும் இங்கே தருகின்றேன். அப்பகுதிகள் வருமாறு :

''இம் மொழி பெயர்ப்பு (திருக்குறள் மொழி பெயர்ப்பு) வந்த பின்னரே நாங்கள் (ருசியர்கள்) தமிழ் இலக்கியத்தைப் பற்றிய சிறப்பை நன்குணர்ந்தோம் எனலாம். அந் நூலின் தொன்மை, தத்துவார்த்தச் செறிவு, ஞான விரிவு, மேலும் பிற உலகமொழிகளுக்கு இணையாகப் போட்டியிட்டு நிற்கக்கூடிய செந் தமிழின் அழகு ஆகியவற்றை அறிந்து கொண் டோம்.

''திருக்குறளைத் தமிழ் மறை என்று குறிப் பிடுவதிலும் பொருள் உண்டு. இந்நூல் தனது காலத்திய சமூக வாழ்வின் எல்லாக் கூறுபாடு களையும், மானிட வாழ்வின் மதிப்பு, குறிக்கோள் கள் அனைத்தையும், அறம், பொருள், இன்பம் வீடு ஆகியவற்றையும் பிரதிபலிக்கிறது. திரு வள்ளுவர் தமது சமயக் கருத்துகளிலும் தத்துவ நோக்கிலும் அறநெறிக் கோட்பாடுகளிலும் உண்மையான ஞானியாகவும் மாபெரும் மனி தாபிமானியாகவும் திகழ்கின்முர். அவர் எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக் கூடியனவும் தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் ஏற்புடையனவாகிய சர்வ ஜன சமய அடிப் படைகளையும் ஒழுக்க நெறிகளையும் வகுத்து உரைக்க முயன்றிருக்கிமுர். இந்த மெய்ந் நூற் கவிஞர் ஒழுக்க நெறி, சமயம், சமுதாயம், அரசாங்கம், காதல், குடும்ப வாழ்க்கை, அனைத்தையும் பற்றிய தமது சொந்தமான தனிச் சிறப்பு மிக்க கருத்துக்களை வழங்கியிருக் கிமுர்!''

இது திருக்குறளுக்கு இக்கால ருசிய அறிஞர் அளித்திருக்கும் பாராட்டு.

இனி, இந்திய நாட்டு அறிஞரும், இசுலாம் சமயத்தவரும், பாரத நாட்டு ஜனதிபதியும் ஆகிய காலஞ்சென்ற டாக்டர் ஜாகீர் உசேன் திருக்குறளைப் பற்றி என்ன கூறியிருக்கிமுர் என்பதைக் காண்போம். 1968-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் எட்டாம் நாள் அண்ணு மலைப் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் ஆராய்ச்சித் துறையைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் அவர்,

''இன்றைய நாகரிக மக்களைச் சிக்கித் தவிக்க வைக்கும் மனவிருளை இந்த அறிவுச் சுடர்—திருக்குறள்—அகற்றிவிடும். இத்திருக் குறள்—நன்னெறி காட்டும் நன்னூல் ; ஆன் மீக ஞானத் திறவுகோல், தூய வாழ்க்கை உயர்ந்த சிந்தனை—இவையே குறள் காட்டும் நெறிகள்''.

என்று நடுவு நிலையில் நின்று கூறியிருக்கிமுர்.

இசை, இலக்கியம், தத்துவம், மருத்துவம் ஆகிய இந்நான்கு கலைகளிலும் பெறுதற்கு அரிய நான்கு டாக்டர் பட்டங்களைப் பெற்ற ஜெர்மனி நாட்டுப் பேரறிஞர் ஆல்பர்ட் சுவிட்சர் என் பார், ஜெர்மன் மொழியில் திருக்குறளைப் படித்துவிட்டுத் தமது ''இந்திய தத்துவக் கருத்து வளர்ச்சி'' என்னும் நூலில்,

''திருக்குறள் எளிதாகக் கைக்கொள்ளக் கூடிய நல்வாழ்வுக்குரிய குறிக்கோளுக்கான

அறங்களைக் கூறுகிறது ; மானிடருடைய தனி வாழ்விற்கு வேண்டிய தனி ஒழுக்கத்திற்கும் உலகத்தோடு ஒட்ட நடந்துகொள்ள வேண்டிய பொது வாழ்விற்குத் தேவையான பொது ஒழுக்கத்திற்கும் பல வகையான அறங்களை இயம்புகிறது. அவை பெருந்தன்மையுடையன வாகவும் அறிவுக்குப் பொருத்தமுள்ளனவாக வும் இருக்கின்றன'' என்று குறிப்பிட்டிருக் கிறார்.

இவ்வாறு மேலை நாட்டு அறிஞர் பெரு மக்களால் பாராட்டப் பெறுபவர் வள்ளுவர். இத்தகைய பேரறிஞரின் உண்மை வடிவமும் நமக்குத் தெரியாது; உண்மை வரலாறும் நமக்குத் தெரியாது. இன்று நாம் காணும் அப்பெருமானது திருவுருவம் கற்பனையானது ; வரலாறும் கட்டுக்கதையே. திருக்குறள் நூலா லேதான் அவரை நாம் நன்கு கண்டறியலாம். அவர் அக்கால அரசாங்கத்தில் பெரிய அலுவல ராக இருந்து அரசியல் துறையும், போர் முறை யும், மருத்துவக்கலையும், இன்ன பிறவும் நன்கு அறிந்தவர் ; காதல் தன்மையும் தெரிந்தவர். அவருக்குத் தாயின் இடமும், குழந்தையின் இடமும் பேரன்பு இருந்தது. நீண்ட காலம் குழந்தை இல்லாமல் அவர் குழந்தைச் செல் வத்தை அடைந்தவர் போலும். இக்கவிஞர் தம் இளமைப் பருவத்திலிருந்தே மக்களை நன்கு அறிந்து அவர்களுக்கு இருக்கக் கூடிய குறை களை நிறைய அறிந்து தமக்கு ஓய்வு கிடைத்த போதெல்லாம் உள்ளத்தில் தோன்றிய எண் ணங்களை ஏறக்குறைய முப்பதாண்டுகளாக எழுதி வைத்திருந்து பின்பு அவைகளைத் தொகுத்து அதிகாரங்களாய் அடைவு செய்து முப்பாலாக வகுத்து உலகுக்குத் திருக்குறள் நூலை என்றும் நின்று நிலவுமாறு ஈந்திருக்கிறார் என்பதைத் திருக்குறளாலே அறிகிறோம்.

''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க் குத்
துப்பாய தூஉம் மழை''
(வான் சிறப்பு—2வது அதிகாரம்)

என்னும் குறட்பா, சொல்லின்பத்தை இயற்கை யாக விரும்பும் இளமைப் பருவத்தில் ஏறக் குறைய 25 வயதில் பாடப் பட்டிருத்தல் வேண் டும். மருந்து என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் உணவு சீரணமாவதில் இன்பம் காண்பதைப் பல முறை வற்புறுத்திக் கூறியிருப்பதோடல்லா மல் 133 வது அதிகாரத்திலும்,

''உணலினும் உண்ட(து)அறல் இனிது; காமம்
புணர்தலின் ஊடல் இனிது''

என்றும் பாடியிருக்கிறார். ''உண்பதைக் காட்டி லும் உண்டது சீரணமாவதில் இன்பம் உண்டு. புணர்தலைப் பார்க்கிலும் ஊடல் நடத்திப்பின்பு கூடலில் இன்பம் உண்டு'' என்பது இக் குறட் பாவின் திரண்ட கருத்து. இக் குறட்பாவைப் பாடியபோது வள்ளுவருக்கு வயது 55 இருக்கும் என்று உய்த்துணரலாம். இப்படி கூறுவது வள்ளுவருக்கு இழுக்காகாது, சிறப்பாகும். பெருமையுமாகும். மில்ட்டன் என்ற ஆங்கிலப் பெருங் கவிஞர் தமது உலகப் பெருங் காப்பி யத்தை 1638-இல் தொடங்கி 1664-இல் 26 ஆண்டுகளுக்குப் பின் முடித்ததாய் அவர் வர லாறு கூறுவது அறிக.

இப்படி நீண்ட காலம் சிந்தித்துச் சிந்தித்து இயற்றிய நூலாதலின் திருக்குறள் எக்காலத் தும் வாழ்க்கைக் கடலைக் கடந்து இன்ப விளக்காக 2000 ஆண்டுகளாக வழிகாட்டிக் கொண்டு வந்திருக்கிறது. அப்படி என்ன வழி காட்டுகிறார் வள்ளுவர் என்று வினவலாம். எத்தனையோ அறிஞர்களும் கவிஞர்களும் ''வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண் ணம்'' என்று கூறியுள்ளார்கள். ஆனால் வள்ளு வரோ ''உலகம் நிலையற்றது, செல்வம், நிலை யற்றது'' என்றும் ''நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை, என்னும், பெருமை உடைத்து இவ்வுலகு'' என்றும் குறிப்பிடினும், 'வாழ்வு வாழ்வதற்குரியது', 'வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துள் வைக்கப்படும்' என்றும்; உடம்பு பெற்றான் நெடிது உய்க்குமாறு, உண்ட உணவு சீரணமானது அறிந்து, நல்ல உணவு உண்டு பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளைத் தேடிப் பேராசை கொள்ளாமல், திருமணம் செய்து கொண்டு, மக்களைப் பெற்று, சமுதாயத்துக்குத் தேடிய பொருளைப் பயன் படுத்தி, அறவழியில் வாழ்ந்த பின்பு, அக்கால நிலையில் நாற்பது வயதுக்கு மேல் விரும்பினால் உண்மையான உள்ளத் துறவு கொண்டு வாழ்க என்றும், பிறரினும் வேறுபட்டுக் கூறியிருப்பது தான் அவருக்குரிய தனிச் சிறப்பாகும். வள்ளு வர் கூறுவதை மூன்று சொல்லாலே சொல்ல வேண்டுமாயின் அறம், அன்பு, அறிவு என்று குறிப்பிடலாம். 'காதலனாயிருப்பினும் சரி, காதலியாயிருப்பினும் சரி, கணவனாயிருப்பினும் சரி, மனைவியாயிருப்பினும் சரி, அரசனாய் இருப் பினும் சரி, ஆன்ற துறவியாயிருப்பினும் சரி, தூதனாயிருப்பினும் சரி, எவரும் அறவழியில் நின்று அன்பு காட்டி அறிவோடு நடந்து கொள் ளவேண்டும் என்பதே வள்ளுவர் நோக்கமாகும்.

எவரையும் இளமையிலேயே வள்ளுவர் துறந்துவிடச் சொல்லவில்லை. ஏறக்குறைய எல்லாருமே சமுதாயத்தில் பயனுள்ளவர் களாய் இருக்கும் பொருட்டு மணஞ் செய்து கொள்ள வேண்டும் என்று வாழ்க்கைத் துணை நலம் என்னும் அதிகாரத்தில் கூறியிருப்பதோடு நில்லாது, நன்றியில் செல்வம் என்னும் 101வது அதிகாரத்திலும் உவமை வாயிலாக,

''அற்றார்க்(கு) ஒன்று ஆற்றாதான் செல்வம் மிக நலம்
பெற்றாள் தமியள் மூத்தற்று''

என்று குறிப்பிட்டுள்ளதைக் காண்கிறோம். ஒன்றுமற்ற வறியவனுக்குப் பயன்படாத ஒருவ னது செல்வம், மிகுந்த அழகுள்ள ஒரு நங்கை மணந்து கொள்ளாது கிழவியாய்ப் போனது போலாகும் என்று, இங்கு வள்ளுவர் குறிப்பிட் டிருப்பதைக் காண்க. இதனால் சமுதாயத்தில் பெரும்பாலோர்க்கு மண வாழ்வு பயனுடையது என்பது வள்ளுவர் கருத்தாகும்.

அப்படி ஒருவன் மணஞ்செய்து வாழுங்கால் மனைவியிடம் அன்பு காட்டி, பேராசைக்கு இரையாகாமல், ஒழுக்கத்தை மறவாமல், மக்களைப் பெற்று அவர்களுக்குக் கல்வி புகட்டும் கடமையை ஆற்றி, பிறர் ஆக்கத்தில் பொருமை கொள்ளாது, பிறரைப் பின்னல் பழித்துக் கூருது, பயனில் சொற்களைக் கூருமல், தீய செயல் செய்வதற்கு அஞ்சிப் பிறர்க்கு உதவி செய்யும் பண்புடையவனுய் வாழ வேண்டும். கற்பு என்பது இருபாலார்க்கும் பொது. ஆண் மகனுக்குப் பிறர் மனை நோக்காத பேராண்மை வேண்டும். பெண் மகளுக்கோ கற்பு என்னும் மனத் திண்மையாகிய உறுதி வேண்டும். பெண்ணுக்குக் கற்பு வேண்டுமென்று அவளை வீட்டுக்குள் வைத்து வெளியே போக விடாமல் செய்வது கூடாது. சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர் நிறை காக்கும் காப்பே தலையாகும். கணவன் மனைவியிடம் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும். மனைவியும் ஊடலை அளவு கடந்து செய்தல் கூடாது. மனைவி கணவனது வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்பவளாக இருக்க வேண்டும். வருவாய் சிறியதாயிருக்கச் செலவினத்தைப் பெருக்கி விட்டால் குடும்பம் அழிந்து விடும். ஆகாறு அளவு இட்டிதாயினும் கேடில்லை, போகாறு அகலாக் கடை. பொருளை அறவழியிலே தேடிச் சிக்கனமாகச் செலவு செய்து வாழ வேண்டும். வணிகனுக இருந்தாலும் முறையற்ற வழியில் பிறர் அழும்படியாக வாணிகம் செய்து பொருள் தேடினுல் அப்பொருள் அழிந்துவிடும். அழக் கொண்டது அழப்போம். இப்படியெல்லாம் வள்ளுவர் வாழும் நெறிகளைக் கூறியிருப்பது காண்க.

அறம் என்பது ஒருவர்க்குப் பிச்சையிடுவது மட்டும் ஆகாது. உள்ளத்தில் மாசு இல்லாமல் இருப்பதே அறமாகும். பொருமை, பேராசை, கடுஞ்சினம், கடுஞ்சொல் இவற்றைக் கொள்ளாமல் வாழ்க்கை நடத்துவதும் அறமாகும். துன்பம் வந்தால் நடுநடுங்கி உள்ளம் உடைந்து விடுவது கூடாது. துன்பத்தைக் கண்டு சிரித்துவிட வேண்டும். இடுக்கண் வருங்கால் நகுக. சிரிப்பே அந்தத் துன்பத்தைச் சிதறடித்துவிடும். 'விதி விதி' என்று விதியின் மேல் பழி போட்டுச் சோம்பியிருத்தலாகாது. விதி என்று ஒன்று உண்டு. இதனை ஊழ் என்பர். இவ்வூழ் இருவகைப்படும். ஆகூழ் என்பது ஒன்று; போகூழ் என்பது மற்ருென்று. ஆகூழ் நன்மை செய்வது, போகூழ் தீமை செய்வது. போகூழாயிருப்பினும் அதனை எதிர்த்துப் போராடினுல் உறுதியாக ஒருவன் வெற்றி காண முடியும். முடியாதென்பதில்லை; தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும். முயற்சி திருவினையாக்கும். முயற்சி இல்லாமை வறுமையில் புகுத்திவிடும். ஊழ்வினை இல்லையென்பது பழியன்று. அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாதிருப்பதே பழி.

''பொறியின்மை யார்க்கும் பழியன்(று) அறி(வு)
அறிந்(து)
ஆள்வினை இன்மை பழி''

என்றறிந்து ஊக்கம் கொண்டு ஆக்கவழியில் ஈடுபட்டு முயற்சி செய்து, இடர்களைக் கடந்து இன்பமாக வாழ வேண்டும்.

இக்காலத்தில் வணிகர் பலர் தீயவழிகளைப் பின்பற்றி மக்களை ஏமாற்றிப் பணந்தேடி வாழ முயல்கின்றனர். அரிசியில் வேண்டுமென்றே அரிசி போலவே கல்லை உடைத்து வைத்திருந்து கலத்தல், உளுந்தில் களிமண் உருண்டை செய்து கலத்தல், மட்டமான காப்பிக் கொட்டைக்கு நல்ல நிறம் பூசி முதல்வகைக் காப்பிக் கொட்டை என்று சொல்லி விற்றல், தேயிலையில் மஞ்சணத்தி இலையை வறுத்துக் கலத்தல், நல்ல மிளகில் பருத்திக் கொட்டையைக் கலத்தல், நல்லெண்ணெயில் ரப்பர்க் கொட்டை எண்ணெயைக் கலத்தல், மஞ்சள் பொடியில் ஈயத் தூளைக் கலத்தல், வெண்ணெயிலும் நெய்யிலும் ஆட்டுக் கொழுப்பைக் கலத்தல், வனஸ்பதி டின்னின் அடிப்பாகத்தை எடுத்து விட்டு அந்த டின்னிலிருந்து ஒரு பகுதி வனஸ்பதியை வெளியே எடுத்துவிட்டுக் கொழுப்புக் கலந்த வனஸ்பதியைப் போட்டு அடைத்து முன்போல அடிப்பாகத்தைப் பற்றவைத்து நல்ல வனஸ்பதி யென்று விற்றல், வேர்க்கடலைப் பருப்பால் 'அல்வா' செய்து பாதம் கொட்டை 'எஸன்சை' தெளித்துப் பாதம் அல்வா என்று விற்றல், லிட்டர், கிலோ முதலிய அளவுகளைத் தேய்த்து எடை போடல், தரமற்ற மருந்துகளைச் செய்து விற்றல், சுண்ணும்பு கலந்து செய்த பொருளை விட்டமின் மாத்திரைகள் என்று விற்றல் ஆகிய படுமோசங்கள் வாணிக உலகில் நடைபெறுகின்றன. இப்படிச் செய்து தேடும் பணம் நிற்குமா? இவர்கள் செய்வது அறமாகுமா? மேலை நாடுகளில் இத்தகைய படுமோசங்கள் நடைபெறுவதில்லை. இப்படி மோசம் செய்யாமல் வாழ வேண்டுமென்ருல் இத்தகையோரிடமும் திருவள்ளுவர் கூறிய அறவுரைகள் நடமாட வேண்டும். வள்ளுவர் கருத்துக்கள் இந்தத் தீய உலகில் நடமாடுமானுல் ஒரு சிலராவது திருந்தக் கூடும்.

ஒரு காலத்தில் சிற்றூர்கள் நல்ல நிலையில் இருந்தன. திருடுகள் இச்சிற்றூர்களில் நடந்ததில்லை. இச்சிற்றூர்களில் பண்புள்ள மக்கள் வாழ்ந்திருந்தார்கள். அந்நிலை இன்று மறைந்து விட்டது. வடமொழி வேதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த அறிஞர் மாக்ஸ்முல்லர் கி.பி. 18-ஆம் நூற்ருண்டில் மாவட்ட ஆட்சியாளர்களாக வந்த கலெக்டர்களுக்கு இந்திய நாட்டைப் பற்றி ஆற்றிய சொற்பொழிவுகளில் 'மண்ணுலகில் ஒரு விண்ணுலகம்' உண்டு என்ருல் இதோ! இதோ! இந்தியாவைக் காட்டுவேன். அந்நாட்டில் உள்ள கிராமங்களில் வீடுகளுக்குப் பூட்டுப் போடுவதில்லை. ஆனுல் ஒரு பொருளும் களவு போவதில்லை'' என்று கி.பி. 18-ஆம் நூற்ருண்டில் நம் சிற்றூர்களில் இருந்த செம்மை நிலையைக் கூறியிருப்பதைக் காணும் போது அந்த நிலை இன்று வருமா என்று ஏங்குகிருேம். திருவள்ளுவரின் திருக்குறட் கருத்துக்களை மக்கள் அறிந்து கடைப்பிடிக்க முற்படுவார்களாயின், உலகம் ஓரளவேனும் திருந்தும் என்பது திண்ணம்.

*



# பரத நாட்டியக் கலை



பத்மபூஷண்
டாக்டர் த. பாலசரஸ்வதி

மாண்புமிகு திரு. இராஜாராம் அவர்களே!

தமிழிசைச் சங்க நிர்வாகிகளே,

சபையோர்களே!

இவ் வருட மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் கௌரவத்தைஎனக்குநல்கியதற்காகத் தமிழிசைச் சங்கத்துக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் செல்லக் கடவுளான அறுமுகனைப் பாடிய அருணகிரிநாதரின் அறுநூறும் பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது, இத்தலைமை வாய்த்திருப்பதைப் பெரும் பேறுகக் கருதுகின்றேன்.

தமிழிசைக்கும் பரத நாட்டியத்துக்கும் உள்ள தொடர்பு சிறப்பானது. முத்துத் தாண்டவர், கனம் கிருஷ்ணையர், சுப்பராம அய்யர் போன்றவர்கள் தந்துள்ள தீந்தமிழ்ப் பதங்கள் மனம் கனிந்து, அபிநயம் செய்ய அற்புதமான வாய்ப்பளிப்பனவாகும். இது மட்டுமன்றிச் சமீப காலப் பாவாணர்கள் தொடங்கி, கோபாலகிருஷ்ண பாரதியின் வழியாக, ஆழ்வார் நாயன்மார்கள் உள்ளிட்டோரின் பாடல்களிலும் அபிநயத்துக்கு உகந்த ரச பாவங்கள் மிளிருவது தமிழ்ப் பண்புக்கே அலாதியானது.

## தெய்வ மாக்கலை

நான் அறிந்த அளவில் பரதக் கலை என்பது பக்திதான்; தமிழ் என்பதும் பக்தியன்றி வேறு இல்லை. எனவே தமிழ் மரபும் பரத மரபும் ஒன்றே என உணர்கிறேன்.

சிலப்பதிகாரத்தில் பேசப்படும் கொடு கொட்டி முதல், கடையம் ஈறுன பதினெரு வகைக் கூத்துக்களும் சிவபெருமான், திருமால், முருகன், காமன், கொற்றவை எனப்படும் பராசக்தி, திருமகள், இந்திராணி ஆகிய தெய்வங்கள் புரிந்த ஆடல்களாகும். தீமையை வென்று நன்மையை நிலைநாட்டும் முகமாக ஒவ்வொரு தெய்வமும் அசுர சம்ஹாரம் செய்து வெற்றி கண்டதையே இப்பதினேரு ஆடல் வகைகளும் விளக்குகின்றன. தீய சக்திகளைத் தீய்த்து, தூய ஆன்ம நெறியைத் தழைக்கச் செய்யும் தெய்வ மாக்கலையாகவே தமிழரால் நாட்டியம் கொள்ளப்பட்டிருப்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமா?

## சிருங்காரம் பக்தியே

மேற்சொன்ன கூத்து வகைகளில் வீரம் ரௌத்திரம் முதலிய ரஸங்களே முக்கியமாக இருக்கும். ஆயினும் பிற்காலத்தில் அபிநயத்தின் அதி முக்கியமான ரஸமாக ஆகிவிட்ட சிருங்காரமும், ஆதியிலிருந்தே தமிழ் நாட்டு ஆடல் மரபில் பிரதானமாக இருக்கத்தான் இருந்திருக்கிறது. வேத்தியல் பொதுவியல், என்ற இரு முக்கியமான ஆடல் வகைகள் முறையே அகம், புறம் என்ற இரு துறைகளைச் சார்ந்தவை என்றும், இவற்றுள் வேத்தியல் என்பது அகத்துறையைச் சார்ந்தது ; ஆதலால் சிருங்கார ரஸம் பிரதானமானது என்றும் தெரிகிறது. ஆய்ச்சியர் குரவை போன்ற கூத்துக்களில் இதே சிருங்காரம் தெய்வத்திடம் செலுத்தப்பட்டுப் பக்திக் காதலாகிறது.

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி!

என்றும்,

தையல் கலையும் வளையும் இழந்தே
கையில் ஒளித்தாள் முகமென்கோயாம்?
கையில் ஒளித்தாள் முகம் கண்டழுங்கி
மையல்உழந்தான் வடிவென்கோயாம்?

என்றும் சிலப்பதிகாரம் கூறும் வரிகளில் எப்படிப்பட்ட பக்திக் காதல் தளும்புகிறது!

இந்த சிருங்கார ரஸதாரைதான் பிற்பாடு ஆழ்வார், நாயன்மார் ஆகியோரின் நாயக—நாயிகா பாவப் பாடல்களிலும், ஜயதேவர்

---

தென்னுற்காடு மாவட்டம், மேல்மலையனூர் கிராமத்தில் இருக்கும் அருள்திரு அங்காளம்மன் கோயில் திருவிழாவின்போது வெடிவிபத்தில் மரணமடைந்த திருமதி தனலட்சுமியின் குடும்பத்திற்கு ரூ. 2000/- வழங்க ஆணையரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

---

அஷ்டபதிகளிலும், க்ஷேத்ரக்ஞர் பதங்களிலும் மகாநதிகளாகப் பெருக்கெடுத்தோடின. பரத நாட்டியத்திலும் பாவ அபிநயம் என்று வரும்போது சிருங்காரம்தான் பிரதானமாக இருந்து வந்திருக்கிறது.

### நாட்டியோபாசனை

இதை இங்கே வலியுறுத்துவதற்குக் காரணம், தற்காலத்தில் பரத நாட்டியத்தில் சிருங்காரத்தைக் குறைத்துப் பதங்களுக்குப் பதில் பக்தி, கிருதிகளை அபிநயித்து அதைத் தெய்வீகமாக்க வேண்டும் என்று கருதுவதுதான். இவர்களுக்கு முதலில் பணிவுடன் தெரிவிக்க வேண்டியது பரத நாட்டியத்தில் புதிதாகத் தெய்வீகம் ஆக்குவதற்கு எதுவுமே இல்லை என்பதுதான். அது உள்ளவாறே, தன்னில்தானே தெய்வீகமாகத்தான் இருக்கிறது. அதிலே வருகிற சிருங்காரம் ஒருபோதும் சிற்றின்பத்தைச் சேர்ந்ததல்ல ; அல்லவே அல்ல. இதயத்தைக் கொடுத்து இந்தக் கலையை அப்யசித்து அதில் தோய்ந்தவர்களுக்கு இதுவும் நாதோபாஸனை போல் நாட்டியோபாஸனையாகத்தான் இருக்குமே அன்றி, இது வெறும் சரீர சுவையோடு நின்று விடாது.

துச்சமானது என்று கருதப்படும் சரீரத்தையே தெய்வீகமாக்குவதுதான் பரதக் கலை. யோகிகள் மூச்சை அடக்கியும் காயக்கிலேசம் செய்தும் தங்கள் மேனியையே தெய்வீகத் திருமூர்த்தம் ஆக்கிக்கொள்கின்றனர் எனில் ஒரு நடியானவள் லயத்தாலும் பண்ணாலுமே அவற்றில் எந்த அளவுக்கு ஊறிக் கரைந்து ஐக்கியப்பட்டிருக்கிறாளோ அந்த அளவுக்கு ஆடல் புரிகிற அந்தக் காலத்தில் மட்டுமாவது தன் உடலையே தெய்வீக ரஸாநுபவங்களின்கருவியாக்கிக் கொள்கிறோம்.

சம்பிரதாயமாக நமக்கு வந்துள்ள பரதக் கச்சேரிக் கிரமமான அலாரிப்பு—ஜதிஸ்வரம்—சப்தம்—வர்ணம்—பதங்கள்—தில்லானா—பதிகம், பாசுரம் அல்லது சுலோகம் என்றஅமைப்பு முறையே மேற்சொன்னவாறு தேகத்தால் தெய்வீகத்தை மலர்த்தும் கலா யோக ஸாதனையின் ஒழுங்கான படிவரிசை என்றே கருதுகிறேன்.

இந்த அமைப்பைக் கலைக்கண் நோக்கிலேயே பார்த்தாலும் அதன் சிறப்பு தெரியும். முதலில் லயம் மட்டும் கொண்ட அலாரிப்பில் சுத்த நிருத்தத்தின் தனி எழில், அதன் அடவுகள் 'அலாரிப்பு' என்ற பெயருக்கேற்ப நடியின் உடலையும் அதன் மூலமே உள்ளத்தையும் அலர்த்தி ஆடலுக்கான நெகிழ்ச்சியை அங்கங்களுக்கு ஊட்டுவிக்கிறது. ஒருமுகப்பட வைப்பதில் லயத்துக்கு ஒரு தனி ஆற்றல் உண்டு. லயிக்க வைப்பதால்தான் அதற்குப் பெயரே லயம். நடியின் சித்தம் பலவாறாகச் சிதறாமல் ஒருமுகப்பட அலாரிப்பு பேருதவி புரிகிறது.

முதலில் தனியான லய இன்பம். பிறகு அதனோடு பண் இன்பமும் கலந்த ஜதிஸ்வரம். மொழியும் சொல்லும் இல்லாத வெறும் இசைக்கே நம்மைத் தன்னோடு இசைத்துக் கொள்ளும் சக்தி உண்டு. அது ஜதிஸ்வரத்தில் ஆடலோடு கலந்து வருகிறது. பிறகு சப்தம். இங்கேதான் பரத நாட்டியத்துக்கே உரித்தான பலவித ரஸங்களைக் காட்ட, சொல்லும் பொருளும் கொண்ட சாகித்யமும் வந்து சேருகிறது.

### ஆலயத்துள் நுழைவது போல

மகத்தானதோர் ஆலயம் போல் நிர்மாணிக்கப்பட்ட பரதக் கச்சேரிக் கிரமத்தில் அலாரிப்பு என்ற கோபுர வாயில் வழியே பிரவேசித்து ஜதிஸ்வரம் என்ற அர்த்த மண்டபத்தையும், சப்தம் என்ற மகா மண்டபத்தையும் கடந்து வந்தால் புனிதத்திலும் புனிதமான தெய்வ சந்நிதானத்தில் வர்ணம் வருகிறது. லய ஜதிகளைக் கொட்டவும், பாவ அபிநயங்களைப் பொழியவும் விஸ்தாரமாக இடம் கொடுக்கும் சந்நிதானம் அது. நடியானவள் தன் மனோதர்மத்துக்கும் நாட்டிய தர்மத்துக்கும் பூரணமாக இடம் கொடுத்துத் தன்னில் தானே நிறைந்து திளைப்பதற்கு வர்ணமே விரிந்து விரிந்து இடமளிக்கிறது.

இதன் பின் பதங்கள். சந்நிதியிலிருந்து கர்ப்பக் கிருகத்துக்குள்ளேயே புகுந்தவுடன் ஏற்படும் ஓர் அடக்கம், குளிர்ச்சி, அமைதி இந்தப் பதங்களுக்கு அபிநயம் புரியும்போது ஏற்படுகிறது. சந்நிதானத்தின் வெளிச்சுற்றிலே இருந்த விஸ்தாரமும் ஜாஜ்வல்யமும் கருவறைக்குள் அடங்கி விடுவதுபோல், வர்ணத்தின் லயக் கொழிப்புகளும் அடங்கி நெஞ்சைக் கவ்வும் இசைப் பாடலோடு அபிநயம் இங்கே இழைந்து வருகிறது. அடுக்குத் தீபாராதனைகளும் மேளதாளங்களும் நின்று, ஆண்டவன் பக்கத்தில் வெறும் மறை மந்திரங்கள் மட்டும் ஓதப்படுவது போன்ற ஒரு கட்டம் பதங்கள் ஆடும் பகுதி. பிறகு இறுதியாக இறைவனுக்கு நேர் முன்னரே ஒரளவு கோலாகலத்துடன் கர்ப்பூர ஆரத்தி காட்டுவதுபோல், லய நயம் மிக்க தில்லானா வருகிறது. முடிவாக, புறத்தில் இவ்வளவு வழிபாடும் பெற்ற இறைவனை அகத்துள் இறக்கிக் கொள்வதுபோல், விருத்தமாக அமைந்த பக்திப் பாடல் ஒன்றை அபிநயிப்பது பத்ததி.

### கிரமத்தை மாற்ற வேண்டாம்

முதலில் வெறும் சொற்கட்டு; அடுத்து சங்கீதத்தோடு சொற்கட்டு; தொடர்ந்து சங்கீத சாகித்யத்தோடு சொற்கட்டு; அதன் விரிவான வர்ணம் என்ற இதய ஸ்தானம் ; பிறகு சொற்கட்டு இல்லாத சங்கீத சாகித்யம்; இதன் மாற்றாக சாகித்யமில்லாத சங்கீதமும் சொற்கட்டும்; பண்ணில்லாத வெறும் லயத்தோடு கச்சேரியை ஆரம்பித்ததற்கு எதிர்வெட்டாக முடிவில் லயமில்லாத (அதாவது வெளி லயமில்லா) இசைப் பாடலோடு பூர்த்தி செய்வது என்பதில் கலாரீதியில் ஓர் அற்புத பரிணாமத்தையும், சீர்மையையும் (Symmetry) காண

கிறோம். எனவே இந்தக் கிரமத்தை ஒருகாலும் மாற்ற வேண்டாம் என்பதே நாத, லய உபாசகர்களின் உபதேசம்.

### தெய்விகத்தை மலர்த்துவது

அழகுணர்ச்சி நோக்கில் மேற்சொன்னபடி கண்டதையே கலாயோகம் என்ற முறையிலும் பார்க்கும் போதுதான், பரத நாட்டியத்தில் சிருங்காரத்துக்குள்ள புனித கௌரவத்தை உணர முடிகிறது. பரதம் எப்படி தேகத்தையே தெய்வீகமாக்குவது என்று இப்போது உணர்கிறோம். யோக சாஸ்திரத்தில் சில விதமான ஆசனங்களும் சுவாச கதிகளுமே நாடிகளில் உண்டாக்கும் சலனங்களால் தேகத்தில் தெய்விகத்தை மலர்த்துவதாகக் கண்டிருக்கிறார்கள். ஒரு விதத்தில் பரதமும் யோக சாஸ்திர, மந்திர சாஸ்திரக் கலவைதான். மந்திர சாஸ்திர முத்திரைகளேதான் பரத நாட்டியத்தில் வரும் ஹஸ்த முத்திரைகளுமாகும் என்பதிலிருந்தே இதன் புனிதத்துவத்தை உணரலாம். லய கதிக்கு ஏற்ப ஜதி போட்டு ஆடுகையில் இதுவும் யோக அப்யாஸங்களைப் போலவே, உடலின் கேவலமான நரத் தன்மைகளைப்போக்கி அதைத் தெய்வீகத்தின் வடிகாலாகவும், கலை எழில் மிளிர உண்டாக்கி நடியின் உடலைத் தூய்மைப் படுத்துகிறது. ஆயினும் கலாநுபவம் பூர்த்தியாக வேண்டுமாயின் நானாவித பாவ பேதங்கள், உணர்ச்சிச் சாயல்கள் இருந்தே ஆக வேண்டும். கலையின் உயிரே (Variety) தானே? ஆனால் இந்த உணர்ச்சிகளை ஓர் அற்ப ஜீவனின் சிறு அநுபவங்களாக அன்றி, விசுவத்தை வியாபிக்கும் தெய்வீக அநுபவமாக மாற்றித் தர வேண்டும். ஒரு பாடலின் சொல்லிலுள்ள பாவம் அநேகமாக ஒரு சிறிய ஜீவனின் தனி மனத்துக்குள்ள உணர்ச்சியாகவே அபிநயத்தில் வெளியாகக் கூடும். ஆனால் இவ்விதமாகாமல், அதனை விசுவ வியாபகமாக்கிக் காட்டுவதே மெய்யான கலை. அந்தக் கலையில் நடியைப் பயிலுவிப்பதற்கு இரண்டாவது படியே, சொல்லற்ற இசையின் விரிந்த பாவத்தோடு லயத்தைச் சேர்த்த ஜதிஸ்வரம். அலாரிப்பில் சொந்த உணர்ச்சியிலிருந்து விலகியவள் ஜதிஸ்வரத்தில் சங்கீதம் என்ற விசுவ உணர்ச்சியோடு சேருகிறாள். இனித்தான் இவளுக்கு நவரஸங்களையும் அவற்றில் கவடுவிடும் நூதன நூதனமான நுண்ணுணர்ச்சிகளையும் தனதுசிற்றுணர்வாக இன்றி, அவற்றின் தெய்வீக உன்னதம் புலப்படுமாறு வெளிப்படுத்தத் தகுதி ஏற்படுகிறது.

### சிருங்காரம் தலையானது

இந்த உணர்ச்சிகளில் சிருங்காரம் தலையான இடத்தைப் பெறுகிறது. ஏனென்றால் ஜீவாத்மா பரமாத்மாவுடன் சேருவதற்கு சிருங்காரத்தை விடச் சிறந்த உருவகம் இல்லை. சிருங்காரம் கலவாத உருக்கமான பக்தி ததும்பும் ''எந்நேரமும் உன்றன் சந்நிதி'', ''வருகலாமோ?'', காந்திமதி பிள்ளைத் தமிழ், தாயுமானவர் பாடல்கள், ''க்ருஷ்ணா நீ பகேனே பாரோ'' முதலிய பாடல்களில் கரைந்து அபிநயிப்பதில் உள்ள ஆழ்ந்த அநுபவத்தை அறிந்த நானேதான் இப்படிச் சொல்கிறேன். இது போன்ற பக்திக் கனிவு கொண்ட பாடல்களும் வேண்டியதுதான். என்றாலும் கூடக் 'கலைஞர்' என்ற முறையில் பார்க்கும்போது, மற்ற ரஸங்களையெல்லாம் விட சிருங்காரத்தில்தான் ஸஞ்சாரீ பாவங்கள் என்பதாக, முக்கியமான ரஸத்திலிருந்து கிளை கிளையாக விட்டுப் படர்ந்து கொண்டே செல்லும் நவ நவமான சூட்சுமமான பாவங்களை வெளிப்படுத்த மிக நிறைய இடம் (Scope) இருக்கிறது.

பரத நாட்டியத்தை மட்டும் விநயத்துடன் அணுகி, சிரத்தையுடன் பயின்று, பக்தியுடன் உள்ளுக்குள் அநுபவிக்கத்தொடங்கினோமாயின், அதிலே உள்ள பேரழகுகளைச் சிறப்பாக வெளியிடும் சிருங்காரத்தைப் பரம புனிதமாகவே உணர்ந்து அபிநயிக்க முடியும். ஆத்மிகத்துக்குப் பெரும் பகையாகக் கருதப்படும் சரீரத்தையே நிருத்த கான யோகத்தால் ஆத்மாவின் உருவகமாக்கிக் கொண்டபின், பரமாத்ம நாட்டத்துக்குப் பரம விரோதியாகக் கருதப்படும் சிருங்காரமே நடியைப் பரமாத்மாவில் ஐக்கியப்படுத்தும் சாதனமாகிவிடுவதை உணரலாம்.

(நடி என்பவள் விசுவ உணர்ச்சிகளோடு இழைந்து விடுவதால், அவளுக்கு ஏற்படுவதாக நான் சொல்லும் அநுபவங்கள் யாவும் அவளது ஆடலைக் காணும் ரசிகர்களுக்கும்ஏற்படுவனவே ஆகும்.).

### நிருத்த யோகம்

அலாரிப்பிலும், ஜதிஸ்வரத்திலும் சுத்தீகரிக்கப்பட்ட நடி, சப்தத்தில் சாகித்யங்களின் பாவங்களையும் தெய்வீகம் குன்றாமல் அபிநயிக்கத் தொடங்குகிறாள். முதலில் பாவங்களையே இவளிடம் காட்டாமல், இவளைப் பக்குவப்படுத்தி, பிறகும் எடுத்த எடுப்பில், காட்டாறாக அவற்றை இவளுக்குக் கொடுத்து விடாமல், ஓரளவில் கட்டுப்படுத்திக் கொடுப்பதே சப்தம். அந்தக் கட்டுப்பாட்டில் இவள் தேர்ச்சி பெற்ற பிறகே, நிருத்தம் அபிநயம் இரண்டிலும் கொள்ளக் கொள்ளக் குறையாத ஜீவ நதிப் பிரவாகமான வர்ணம் வருகிறது.

ஒரு சப்தத்தையோ வர்ணத்தையோ இயற்றிய பாடலாசிரியர் அவற்றின் நாயகனாக ஒரு மன்னனையோ, பிரபுவையோ கூட வைத்திருக்கலாம். ஆயினும் நடியைப் பொறுத்த மட்டில் மன்னர் மன்னனான அகிலாண்டப் பிரபுவான இறைவன்தான் நாயகனாக இருக்க முடியும். அவளது உடலில் ஒரு புனிதத்துவத்தையும், உள்ளத்தில் ஒரு தெய்வீக ஒழுக்கத்தையும் ஒளிர வைத்த ஆடற்கலையை மானுடருக்கு அர்ப்பிப்பது அவளால் முடியாத காரியமாகவே இருக்கும். லௌகிகம் என்று தோன்றுவதிலேயே அவரால் தெய்வீகத்தைப் புரிந்து கொள்ளவும், மற்றவர்களுக்குப் புலர்த்திக் காட்டவும் முடியும். பாடல் இயற்றியவர்களும் நம் பக்தி மரபில் ஊறியவர்கள்தானே? எனவே பாட்டுடைத் தலைவனைப் புகழும்போதே, அவனுக்குத் தஞ்சைப் பிருகதீச்வரனிடமோ, திருவாரூர்த் தியாகேசனிடமோ, திருவனந்தைப்

பத்மநாபனிடமோ உள்ள பக்தியை விளக்கத் தொடங்கி விடுவார்கள். உடனே நடியும் நேராகவே பக்தி சாம்ராஜ்யத்தில் புகுந்து, அந்தந்தத் தெய்வத்தின் லீலா விநோதங்களை அநுபவித்து அபிநயிக்கத் தொடங்குவாள். இது வரை வந்த தெய்வீகம் கலந்த லௌகிகமே, இப்போது அசலான தெய்வீகத்தை ஸ்வச்சமாக எடுத்துக் காட்டி உள்ளத்தில் ஆழப் பதிவிக்க உதவும். நடு நடுவே தீர்மானங்கள், சிட்ட ஸ்வரம், எத்துக்கடை ஸ்வரங்கள், தட்டி மெட்டு என்பன கோத்துக் கோத்து வந்து, இவளது அபிநயம் மானுடமாகிவிடாமல், இவளை நிருத்த யோகத்தால் சுத்தீகரித்துக் கொண்டே யிருக்கும்.

## தங்கத்துக்கு முலாமா?

இப்படி இவள் அக்கினிப் பரீட்சையில் பூரணமாகத் தேர்ந்து வந்தபின், அபிநயப் பகுதி மட்டுமே ஆன பதங்களை ஆட முழு யோக்கியதை பெறுகிறாள். அவள் மட்டும் கலைக்கு ஆத்ம சமர்ப்பணம் செய்தவளாக இருந்தால், இந்நிலையில் அவளது அபிநயம் ஒரு விதமான மனோவிகாரத்தையும் ஏற்படுத்தவே முடியாது. கலை, எழில் என்ற புனிதமான ஆத்மிக நிலையில் இருந்து கொண்டு, அவள் எல்லாவிதமான ரஸ பாவங்களாலும் பாவன மான ஆனந்தத்தையே உண்டாக்குவாள். அவ ளுக்குப் புதிதாக நம் கச்சேரிக் கிரமத்தில் ''தெய்வீகமாக்குவதற்கு'' எந்த அவசியமுமே இருப்பதாகத் தோன்றுது.

பரதக் கலையைப் புதுக் கண்டுபிடிப்புக் களால் தெய்வீகமாக்க நினைப்பது சொக்கத் தங்கத்துக்கு முலாம் கொடுப்பது போலவும், தாமரைக்கு வர்ணம் தீட்டுவது போலவும்தான்!

இந்தக் கலையில் இருப்பதாகத் தோன்றும் குறை, உண்மையில் நடியிடம் உள்ளகுறையால் தான். பக்தி சிரத்தையோடு, நிதானமாக, அக்கு அக்காகப் பரதநாட்டியத்தைப் பயின்று விட்டால், அது இப்போது உள்ளபடியே பரி பூரணத்துவம் வாய்ந்தது என்று நன்றாகத் தெரியும். தற்போதைய கச்சேரியமைப்பு இந்தப் பரிபூரணத்துவத்தைக் கட்டுக் கோப்புக் குலையாமல் அடைகாத்துத் தருவதேயாகும். எனவே, ஏற்கனவே பூரணமாக உள்ளதைப் புதிதாகப் பூரணமாக்குவதற்காக, கச்சேரிக் கிரமத்தில் மாறுதல், கூட்டல், கழித்தல் எதுவுமே செய்யத் தேவையும் இல்லை.

## இடைச்செருகல் கூடாது

சம்பிரதாயமான கச்சேரிக் கிரமமே இவ் விதமாகக் கலை ரீதியிலும் மனோதத்வ ரீதியிலும் ஒன்றுக்கொன்று மாறுபாடுள்ள இனங்களை ருசி கரமாக அடுக்கித் தந்து, நிறைந்த நிறைவான இன்பத்தைத் தரும்போது, இந்த முறை (Bore) அடிப்பதாக நினைத்துப் புதிய மாறுதல்கள் செய்வது, உண்மையில் கலையின்பத்தின் முழு மைக்கு ஊறு உண்டாக்குவதேயாகும். புதுப்புது நாட்டிய முறைகளைச் சிருஷ்டி செய்பவர்கள் அவற்றைத் தனி நிகழ்ச்சியாக வேண்டுமானல் வைத்துக் கொள்ளலாம்; பரத நாட்டியக் கச்சேரியில் இடைச் செருகலாகச் சேர்த்து அவியல் செய்ய வேண்டியதில்லை. ஓர் ஆட்ட இனத்துக்குரியதை இன்னொன்றில் கலக்காம லிருக்க வேண்டியதன் அவசியம் பற்றிச் சிலப் பதிகாரம் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

> கூடை செய்தகை வாரத்துக் களைதலும்
> பிண்டி செய்தகை ஆடலிற் களைதலும்
> ஆடல் செய்தகை பிண்டியிற் களைதலும்
> குரவையும் வரியும் விரவல செலுத்தி.

தைலதாரையாக நம் கச்சேரிக் கிரமத்தை ஒன்றன் பின் ஒன்றாக, அதிக இடையீடு இல்லா மல் நடத்திக் கொண்டே போனுல், தானுக இது நடிக்குள் யோகாநுபவமாக ஊறும்; தன் முழுமையை அவளுக்குக் காட்டும். இப்படி நாட்டியாநுபவம் ஒரு தாரையாகச் சீருடன் பாய்வதற்கு அடிக்கடி உடையை மாற்றிக் கொள்வது சித்த ஒருமைப்பாட்டிற்கு (Concentration) குந்தகமாக இருக்கிறது என்பது என்னுடைய அநுபவம்.

## அழகு எது?

ஆடலும் பாடலும் அழகும் என்பதாகக் கூறும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், நாட் டிய மகளின் அழகை மூன்ருவது இடத்தில்தான் வைத்துள்ளன. ஆனல் இன்று துர்ப்பாக்கிய வசமாக அதுதான் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது! சரீர சௌந்தரியத்தையே நினைக்கும்போது நாட்டியமும் சரீர சம்பந்த மாகவே தோன்றுவதும், சிருங்காரம் என்பது ரஸாபாஸமாகத் தோன்றுவதும், இயற்கை தானே? மாருக, ஒரு நடியானவள் ஆடலும் பாடலுமேதான் தனக்கு அழகு என்று உணர வேண்டும்.

''மாளவிகை ஆடி, வியர்த்து, ஓய்ந்து நிற்பதே அபிநயத்துக்கெல்லாம் மேலான அபி நயமாக இருந்தது'' என்று காளிதாஸன் சொன் னது வெறும் கவிநயம் மட்டுமல்ல. உண்மை யாகவே ஆடலில் வண்ணச் சாந்தமும், மையும் சற்றுக் கலைந்தாலும் அதுவும் கூடி, நடிக்குக் கர்மயோகம் பூட்டின நகையாகவே இருக்கும்.

நாட்டிய தாரையை நிறுத்தி நிறுத்தி உடைமாற்றம், அதனிடையே பலவிதப் பேச்சு என்று ஏற்படும்போது, ஒரு சீராக உருப்பெற வேண்டிய உள்ரஸ பாவமே தடைப்படுகிறது. சித்தம் ஓர் ஒழுங்கில் அடர்ந்து நிற்கும் (Concentration) யோகத்துக்கே இது உலைவைக் கிறது.

## ஒருமுகப்பட

பரதம் அருளும் தலைசிறந்த வரப்பிரசா தமே சித்தத்தை இப்படி நெறிப்படுத்துவது தான். தியான யோகத்தின் மூலம், காரியங் களை எல்லாம் அடக்கி ஒரே லட்சியத்தில் சித்தத்தை ஊன்றுவது பெரும்பாலாருக்கு இய லாததாகவே உள்ளது. பரத நாட்டியத்திலோ காரியம் இல்லாதபடி செய்யாமல், பற்பல காரி யங்களைக் கொடுத்து, அவற்றை ஒன்ருக இசை

விக்கச் செய்வதாலேயே இப்பேர்ப்பட்ட சித்த ஒருமைப்பாடு சித்தித்துவிடுகிறது. 'காரியம்' என்ற சுமை தெரியாமல், 'கலை' என்பதன் லலிதம் சாதிக்கப்படுகிறது. காலிலே தாளம், கையிலே முத்திரை, அந்தக் கைவழியே செல்லும் கண்ணிலே பாவம், காதிலே நட்டுவனரின் இசை, வாயிலே தானகப் பாடுதல் என்பதாக ஐந்தையும் தப்பிப் போகாமல் ஒன்றேடொன்று இசைவிப்பதனல் சித்தம் ஆழ்ந்த கவனம் கொண்டு, இவ்வீடுபாட்டின் அடர்த்தியினலேயே தெளிகிறது. மேற்சொன்ன ஐந்து தொழில்களையும் எது இவை சித்து, தொழில் என்பதன் இயந்திர கதியை எழில் ரஸாநுபவமாக்குகிறதோ அதுதான், கலைஞரின் (Sixth Sense) எனும் அதீதமான உள்ளுணர்ச்சி. பல விதமான கட்டுப்பாடுகளிலேயே ஆத்ம சுதந்திரத்தின் ஆனந்தத்தைக் கண்டுகொள்ளும் தெய்வீகப் பொறி அதுதான். கட்டுப்பாட்டால் ஒருமுகப்படும் யோகி அமைதிகாண்கிறன் எனில், கை, கால், கண், காது, வாய் என்பவை பலமுகப் பட்டும்கூட இவற்றை ஒன்றிசைத்துக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நடியோ, யோகியின் அமைதியையே அழகுப் பிரவாகமாக்கி வெளியிடுகிறள். இந்தச் சாதனையைக் கூர்ந்து கவனிக்கும் ஈடுபாட்டினலேயே ரசிகனது சிதறும் சித்தமும் இறுகி ஒருமுகப்பட்டுத் தெளிந்த தெளிவாகிவிடுகிறது. மனத்தைக் கொடுத்து ஆடும் நடியும், மனத்தைக்கொடுத்து அதைக் காணும் ரசிகரும் உலக வாழ்வின் சஞ்சலங்களிலிருந்தெல்லாம் விடுபட்டு, பரம பவித்திரமான உள்ளத் தெளிவின் மூலம் தெய்வீக கலானந்தத்தை அநுபவிக்கிறர்கள்.

### கட்டுப்படுக !

இந்தக் கிடைத்தற்கரிய பேரின்ப அநுபவத்துக்காக ஒரு நடியானவள் செய்ய வேண்டியது, மனமொப்பிக் கட்டுப்படுவதுதான். சுருதி லயக் கட்டுப்பாடுகள், பத்ததியின் ஒழுக்க விதிகள் இவற்றுக்கு அடங்குவது ஆரம்ப காலத்தில் தான் சிரமமாக இருக்கும். இக்கலையின் மகிமைக்குத் தலைவணங்கி எளிமையோடு கட்டுப்பட ஆரம்பித்தால், விரைவில் அந்தக் கட்டுப்பாடும் இன்ப மயமாகவே தெரியும். கலா லோகத்தின் பேரின்ப சுதந்திரத்தில் நம்மை விடுவிப்பதே கட்டுப்பாடுகள் எனக்காண்போம்.

மகா பெரியவர்களான நாட்டியக் கலைஞர்களும் சம்பிரதாயக் கட்டுப்பாடே மனேதர்மத்தின் விஸ்தரிப்பு முழுவதற்கும் பக்குவமாக இடம் கொடுத்துக் கொண்டு போகிறது என்று தீர்மானமாகக் கண்டிருக்கிறர்கள்.

### என் முறையீடு

குழந்தைகள் நூதன நூதனமான பாணிகளில் இறங்கினல் தற்காலிகக் கிளுகிளுப்போடு நின்று பிற்பாடு பிசுபிசுத்துப் போய்விடுமே ; இப்படியின்றி அவர்கள் அறுகுபோல் வேரோடி ஆல்போல் விழுதுவிட்ட சம்பிரதாயத்தையே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தமக்கும் ரசிகருக்கும் நிலைத்தகௌரவமான பேரின்பத்தைத் தேடிக் கொள்ள வேண்டுமே என்ற விசாரத்தில் தான் இதையெல்லாம் முறையிட்டுக் கொள்கிறேன். குழந்தைகள் ஆழ்ந்து, நுணுகி, அவசரமே படாமல் பரத வித்தையைப் பயின்றல் நிச்சயம் அதன் மாண்பை உணர்வார்கள்.

இளமையில் தொடங்கி நீண்ட காலம் பயின்றலே இக் கலையின் உள்ளார்ந்த பெருமையைப் பக்தி சிரத்தையுடன் உணர முடியும். தனக்கு இவ் வித்தையைக் கையாளும் பாக்கியம் வந்ததே என்று அதனிடம் சரணகதி செய்ய முடியும். சரணகதி செய்தால் அது தானகத் தன் தெய்வீகத்தையும் பரிபூரணத்துவத்தையும் நமக்கு உணர்த்தி விடும். இப்போது பரதத்தைத் தெய்வீகமாக்குவதற்காகச் செய்கிற நூதன உத்திகளோ, பூரணமாக்குவதற்காகச் செய்கிற உடைமாற்றம்—ஜோடனை — புதுப் புது இன ஆட்டங்களின் இடைச்செருகல் இவையோ இன்றி, இந்தக் கலை இனியும் தழைத்து வளரும். அதுதான் நான் வேண்டுவது.

### நன்றி

நாட்டிய நங்கைக்குத் ''தலைக்கோல்'' சூட்டி வெகுமானிப்பது தமிழ் மரபு. தமிழிசைச் சங்கத்தினர் எனக்குச் சூட்டியுள்ள தலைமைப் பதவியை, அண்ட சராசரங்களையும் ஆட்டுவிக்கும் நடராஜப் பெருமான் எனக்கு அளித்த தலைக்கோலாகவே ஏற்றுக் கொள்கிறேன்.

வணக்கம்.

---

சென்னை இராஜா அண்ணுமலை மன்றத்தில், 33-ஆம் தமிழிசை விழாவுக்குத் தலைமை வகித்து, பத்மபூஷண் டாக்டர் த. **பாலசரசுவதி** அவர்கள் ஆற்றிய தலைமையுரை, இங்கு மிகவும் போற்றி எடுத்து வெளியிடப்பெறுகின்றது (21-12-'75)

—ஆசிரியர்

---

திருப்பரங்குன்றம் சீர் பாதம் தாங்கி, திரு. திரவியம், சகடைவண்டி ஏறிக் காலமானதையொட்டி, அன்னரது குடும்பத்திற்கு ரூ. 5,000/- உதவி செய்ய அறங்காவலர்கள் முடிவு எடுத்துள்ளனர்.

# சமயமும் சமுதாயமும்

சீலத்திரு அருணகிரிநாத தேசிகர்

உலக மக்கள் அனைவரும், சமய நெறியில் ஈடுபட்டு இன்ப வாழ்வினைப் பெற்றுய்ய வேண்டும் என்னும் பெருநோக்கம் கொண்டே, நம் முன்னோர்கள் வாழ்ந்து வந்தனர். அதனாலேயே, தாங்கள் படைத்த சாத்திர, தோத்திர இதிகாச, புராண இலக்கியங்களில் எல்லாம், கடவுள் வாழ்த்துக் கூறும்போது, உலகத்தை மனத்திற் கொண்டே பாடியிருப்பதை, நாம் காணமுடிகிறது!

எடுத்துக் காட்டாக, ''உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்'', ''உலகம் யாவையும் தாமுளவாக்கலும்'', ''உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர்புகழ்ஞாயிறு'', ''ஆதி பகவன் முதற்றே உலகு'' என்பனவாகும்.

பழங்காலம் முதலே, நமது சான்றோர்களுக்குத் தங்களது வாழ்வில் ஒழுங்கு, அமைதி, நீதி, இன்பம், அன்பு ஆகியவை இருத்தல் வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வத்தின் தூண்டுதலே, சமயமாக மலர்ந்தது.

சமயம் என்பது, மனிதனின் மனத்தைச் சமைத்துப் பக்குவப்படுத்துவது! அவனுடைய வாழ்வில் நிகழும் ஆவேச உணர்வு, பரபரப்பு உணர்வு, பிறருக்குத் துன்பம் இழைக்கும் தீய உணர்வு, ஆகியவற்றை அடக்கி, அவனை, நல்வாழ்க்கைக்குப் பக்குவப்படுத்துவது! மேலும், சமயம் என்பது, சமுதாயத்தை ஒட்டியதே! சமயம் வேறல்ல; சமுதாயம் வேறல்ல; சமுதாயமானது; சமயத்தை ஏற்றுவாழ்வது தான், சமய வளர்ச்சி என்று கொள்ளல் வேண்டும். சமயமின்றிச் சமுதாயமோ, சமுதாயமின்றிச் சமயமோ இல்லை என்று கூறிவிடலாம்.

நம்முடைய சமய வாழ்க்கைக்காக, கடந்த 2,000 ஆண்டுகளுக்கு முன்பே, திருக்குறள் தோன்றியது. திருமுறைகளும் தோன்றின. அவை வாழ்க்கைக்கு வேண்டியவை அனைத்தும், தந்துள்ளன.

எங்கும் நிறைந்தவன் இறைவன். ''பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தம்'' என்றும், ''அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது'' என்றும் தாயுமான சுவாமிகள் பேசுவார்.

நம்முடைய உடம்பிலே உயிரும், உயிரிலே இறையும் தங்கியிருக்கின்றன. உதைபந்து, பந்துக்குள் பிளாடர், பிளாடருக்குள் காற்று என்பதுபோல், எல்லாப் பொருள்களையும், எல்லா உயிர்களையும் உள்ளிருந்து இயக்குகின்ற காரணத்தினால், அப்பரம்பொருள் ''இயவுள்'' எனப் பெயர் பெற்றது. ''பெரும்பெயர் இயவுள்'' என்பார் நக்கீரர். எல்லாவற்றையும் கடந்து நிற்பதனாலும், உள்நின்று வியாபித்து நிற்பதனாலும், கடவுள் என்று பெயர் பெற்றது.

ஒரு மருத்துவமனையில், மருத்துவர் தங்கியிருப்பதற்குக் காரணம், அம்மருத்துவமனையில் உள்ள பிணியாளர்களின் பிணிகளைப் போக்குவதற்கேயாகும். அதுபோல இறைவன் எல்லா உயிர்களிலும் தங்கி, அவ்வுயிர்களின் பிறவிப் பிணியைப் போக்குகின்றான்.

''உள்ளொடு புறங்கீழ் மேலாய்
உயிர்தொறும் ஒளித்துநின்ற கள்வன்''

என்பார் பரஞ்சோதி முனிவர்.

இறைவன் எங்கும் இருப்பினும், ஞானிகள் திருவுள்ளத்திலும், திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகிறான். மற்ற இடங்களில் இறைவன் மறைந்திருக்கின்றான்.

''ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும்
ஒளியானே''

என்று மாணிக்கவாசகர் கூறுவார்.

பாலில் நெய் மறைந்திருப்பது போல, பிற இடங்களில் அவன் நிறைந்து, மறைந்திருக்கிறான். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு, உருண்டு வெளிப்பட்டிருப்பது போல், ஞானிகளின் உள்ளத்திலும், திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சியளிக்கிறான்.

''மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே''

என்பது சிவஞான போதம். எனவே, திருக்கோயில் வழிபாடு இன்றியமையாத ஒன்றாகும்.

திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப்

158610
-600 008.

பெற்றகாரணத்தினுல், அவைமேன்மை பெற்று, வழிபடுவோர்களின் வல்வினைகளை அகற்றி, வேண்டிய வரங்களை வழங்கி அருள் புரிகின்றன்.

பசுவின் உடல் முழுவதும், பால் பரவி யிருப்பினும் மடியின் மூலமாக அதனைப் பெறுவது போல், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனின், திருவருளைத் திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் மூலமாக, நாம் பெறுதல் வேண்டும்.

எங்கும் நிறைந்திருக்கும் ஆற்றல்கொண்ட இறைவனை, எங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய பூவினுலும், நீரினுலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு, அன்பும் ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

''அன்புடன் ஆசாரபூசை செய்து
உயர்ந்திட வீணுள்படாது அருள்புரிவாயே''

என்று அருணகிரிநாதர் கூறுவார்.

நாம் சென்று வழிபடுகின்ற, திருக்கோயில்கள் அனைத்தும், மனித உடலை அடிப்படையாக வைத்தே அமைக்கப்பட்டுள்ளன, என்ற உண்மையை, நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

பொதுவாக, திருக்கோயில்கள் ஐந்து பிராகாரங்களோடு கூடியவையாகும். நம் உடம்பும் அன்னமயகோசம், பிராணமய கோசம், மனேமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ற பஞ்ச கோசங்களை உடையதாகும். இதை வைத்துத்தான், ஐந்து பிராகாரங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதே போல, நமது உடம்பில் முப்பத்திரண்டு கட்டுக்களோடு கூடிய, முதுகுத் தண்டே, திருக்கோயில்களில் கொடிமரமாகக் காட்சியளிக்கின்றது. அடுத்து, நமது உடம்பில் உள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் கொண்டே, திருக்கோயில்களில், யாக மண்டபம், அலங்கார மண்டபம், கல்யாண மண்டபம், அர்த்த மண்டபம், நிருத்த மண்டபம், மகா மண்டபம் ஆகியனவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திருக்கோயில்களில், சிவலிங்கம், தட்சிணமூர்த்தி, நடராசர், சந்திரசேகரர், அம்பிகை, விநாயகர், முருகன், திருமால் என்ற பல மூர்த்திகள் இருப்பினும், அவை அனைத்தும் ஒரே மூர்த்திதான். திருக்கோயில்களில் காட்சி அளிக்கும் துவார பாலகர்களில் ஒருவர், ஆள் காட்டு விரலைக் காட்டி நிற்பது, உள்ளே வழிபடச் செல்வோருக்கு, கடவுள் ஒருவரே என்பதை அறிவுறுத்துவதற்காகத்தான். மற்ெருரு துவார பாலகர், ஒரு கையை விரித்துக் காட்டுவது, கடவுள் ஒன்றைத் தவிர வேறென்றில்லை என்பதை உணர்த்தவே. இதையே, ''ஏகம் ஏவ அத்விதீயம் ப்ரம்மம்'' என்று வேதம் கூறுகிறது. கடவுள் ஒன்றேதான் ; இரண்டாவது இல்லை! என்பது, இதன் பொருள்.

எனவே, தெய்வ வழிபாடு செய்வோர், தெய்வ பேதம், மூர்த்தி பேதம் குறித்து மாறுபட்டு மலையாது, நிலையாய அன்புடன், ஒரு பொருளைத் தியானித்து வழிபட வேண்டும்.

''யாதொரு தெய்வங்கொண்டீர்
அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனுர்தாம் வருவர்''

என்பது சிவஞான சித்தியார்.

எனவே, கருணையே வடிவான எம்பெருமான், நம்மீதுள்ள இரக்கத்தினுல், இந்த உடம்பை வழங்கியுள்ளான். அவன் தந்த உடம்பினுல், அவனை வழிப்டுவது கடமையேயாகும். இன்றேல், கடமையை மறந்த மடமையாகும்.

காவிரியில் ஒருவன் நீராடுவது காவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று. தன் உடம்பில் உள்ள வெப்பம் தணியும் பொருட்டுக் காவிரியில் நீராடுகின்றுன்! அது போல, அருட்கடலாயிருக்கிற ஆண்டவனை வழிபட்டால், நம்முடைய ''பிறவி வெப்பம்'' தணிகின்றது!

''ஆர்த்த பிறவித் துயர்கெட
நாம் ஆர்த் தாடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே
தீயாடும் கூத்தன்''

என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவார். அந்த வகையிலே, நாம் எல்லோரும், காதலாகிக் கசிந்து வழிபட்டு, இகபர நலன்களை எளிதில் பெற்று, பிறவிப் பிணி நீங்கிப் பேரின்பப் பெரு வாழ்வு வாழ்வோமாக!

◆—◆oOo◆—◆

சென்னை வடபழனி ஆண்டவர் திருக்கோயிலின் சிப்பந்தி திரு. கோதண்டராமன் காலமானதையொட்டி அன்னரது குடும்பத்திற்கு ரூ. 5000/- வழங்க அறங்காவலர் குழு முடிவு செய்துள்ளது.

# காதல் செய் கோயில் கழுக்குன்றே!

—: பி. வி. கிரி :—

நம் தமிழகத்தில் எத்தனையோ பலப்பல சிவத்தலங்களும் சிவாலயங்களும் இருக்கின்றன. அவைகளிலெல்லாம் 'எந்நாட்டிற்கும் இறைவனும்' தென்னாடுடையவன் ஆகிய நமது சிவபெருமான் எழுந்தருளி அன்புடன் தன்னை வழிபடும் அடியார்களுக்கு எல்லாம் அருள் புரிந்து வருகின்றார். அங்ஙனம் தன்பால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் தன்னை வழிபடும் அடியார்களுக்கெல்லாம் அருள்புரிந்து வரும் சிவபெருமான், தானே பெரிதும் விரும்பிக் காதலித்து நீங்காது நிலைபெற்று எழுந்தருளி விளங்குகின்ற திருக்கோயில் ஒன்று உண்டு. அதுதான் நமது சென்னைக்கு அணித்தேயுள்ள திருக்கழுக்குன்றம் என்னும் சிவத்தலத்திலுள்ள திருக்கோயில் ஆகும்.

> தோடுடையான் ஒருகாதில்
> தூயகுழை தாழ
> ஏடுடையான் தலை கலனாக
> இரந்துண்ணும்
> நாடுடையான் நள்ளிருள் ஏம
> நடமாடும்
> காடுடையான் காதல் செய்
> கோயில் கழுக்குன்றே''

எனத் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்துள்ள தேவாரத் திருப்பதிகத்தால், எத்தனையோ பலப்பல கோயில்கள் இருப்பினும் 'கண்ணுதலான் காதல் செய் கோயில் கழுக்குன்றே'' என்னும் உண்மை தெளியப்படும்.

> ''கழுகுதொழு வேதகிரி சிகரி வீறு
> கதிர் உலவு வாசல் நிறைவானோர்
> கடல்ஒலிய தான தமிழ்மறைகள் ஓது
> கதலிவனம் மேவு பெருமாளே''

என்று திருப்புகழில் அருணகிரிநாதர் இந்தத் தலத்தினைப் பெரிதும் புகழ்ந்து போற்றியுள்ளார்.

திருக்கழுக்குன்றம் எனும் திருப்பதி செங்கற்பட்டு மாவட்டத்தில், சென்னையிலிருந்து 53 மைல் தொலைவில் உள்ளது. இங்கே பன்னெடுங் காலமாய்க் காட்சியளிக்கும் திருமலையில் அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயில் ஒன்று இருந்து வருவது, இவ்வூர்க்கே பெருமை சேர்க்கின்றது.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ், பட்டினத்தார் பாடல், திருக்கழுக்குன்றப் புராணம் கழுகாசல சதகம், திருக்கழுக்குன்ற மாலை முதலான நூல்கள், இத்தலம் பற்றிய பெருமையினைப் பாடுகின்றன. இவையன்றித் தனிப் பாடல்களும், வடமொழியிலுள்ள தலபுராணம் ஒன்றும், வேறுசில நூல்களும் இத்திருப்பதியைப் பாடியுள்ளன.

திருக்கழுக்குன்றம் என்று பெயர் எப்படி வந்தது.

இம்மலையில் இரண்டு கழுகுகள் நாள்தோறும் இறைவனை வழிபடுகின்றமையால் திருக்கழுக்குன்றமெனும் பெயர் வந்தது. ''கழுகு தொழு வேதகிரி'' என்று அருணகிரி நாதர் பாடியிருப்பது நினைவு கூரத்தக்கது. இப்பெயர் கங்காசலம், கழுகாசலம், கிருத்திரகிரி எனவும் வழங்கும். இம்மலை 500 அடி உயரமுள்ளது.

வேதகிரி என்ற பெயர், வேதங்கள் நான்கும் மலையாக உருவானதால் வந்தது. மலை அடிவாரம் வேதபுரி என வழங்கும். வேதாசலம் என்ற பெயரும் இதற்கு உண்டு.

இவையன்றி இத்திருத்தலத்திற்குத்தான் எத்தனை எத்தனை பெயர்கள் வழங்குகின்றன!

* இந்திரனுக்குச் சாபத்தைப் போக்கிய தலமாதலின் இந்திரபுரியெனவும், கோடிருத்திரர்கள் பூசித்தமையின் உருத்திரகோடியெனவும், வாழையைத் தலவிருட்சமாகப் பெற்றமையின் கதலிவனமெனவும், சிவபெருமான் வீற்றிருக்கப் பெறுதலின் சிவபுரமெனவும், தன்பாற் செய்யப்பெற்ற தருமங்கள் ஒன்று கோடியாகிப் பயனளித்தலின் தருமகோடியெனவும், மலைகளுட் சிறந்தமையின் திருமலையெனவும், பன்னிரு சூரியர்களாலும் பூசிக்கப் பெற்றமையின் தினகரபுரி, பரிதிபுரி எனவும், கயிலை மலையின் ஒரு சிகரமாதலின் தென்கயிலை, தட்சிண கைலாசமெனவும், நந்தி வழிபட்டமையின் நந்திபுரி யெனவும், திருமால் நலம் பெற்றமையின் நாராயணபுரமெனவும், பிரமதேவன் சாப விமோசனம் அடைந்தமையின் பிரமபுரியெனவும், வசுக்கள் குறை நீங்கியமையின் வசுபுரியெனவும் வழங்கும், உருத்திரகிரி நந்திகிரி யெனத் திருமலைக்குத் தனிப் பெயர்களும் உண்டு.''

மாமல்லபுரத்தை ஆண்ட சுரகுரு என்னும் சோழ மன்னன், மலையில் எழுந்தருளியுள்ள மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்தான் என்று கூறுவர். மலையடிவாரத்தில் உள்ள மண்டபத்தில், இச்சோழனைப் பற்றிய சிற்பங்கள் இதனை மெய்ப்பிக்கும் வகையில் காட்சி தருகின்றன.

---

* திருக்கழுக்குன்றத்து உலா—பக்கம்-8,9.
அந்தகக்கவி வீரராகவ முதலியார்

இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவனுக்கு மலைமருந்தென்ற திருப்பெயரும் உண்டு. இத்தலத்தில் வந்து தங்கி இருப்பவர்களின் பிணியைப் போக்குவதால் இப்பெயர் வந்தது எனப் பாடல்கள் கூறுகின்றன.

பொன்னும் பொருளும் மன்னர்கள் மட்டுமா வழங்கினார்கள்? இறைவனும் பொன் வழங்கிய வரலாறு உண்டு.

இவ்வாறு பொன் வழங்கியவர் வேதகிரீசுவரர். பொன் பெறப் பேறு பெற்றவர் சுந்தரமூர்த்தி நாயனார்.

இவர் இறைவனிடம் பொன் வேண்டி வந்தபோது, இறைவன் பொன் தராமல் மேற்குக்கோபுர வாயில் வழியாகச் சென்று மறைந்து கொண்டாராம். சுந்தரரோ தெற்குக் கோபுர வாயில் வழியாகச் சென்று இறைவனிடம் பொன் பெற்றாராம். இவ்வரலாற்றை 'பொன்னிட்ட நாதர்' என்று கூறுகின்றனர்.

மலைவாழ் இறைவனை மனதாரப் பாடி மனமுருகி மகிழ்ந்தவருள் மாணிக்கவாசகரும் ஒருவர். அவர் திருவாய் மலர்ந்தருளிய அந்த மணிவாசகங்கள் நம் மனத்திலே என்றும் வாசம் செய்யுமன்றோ?

''பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மானுன் னாமங்கள் பேசுவார்க்கு
இணக்கி லாததோ ரின்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லென்வினை யொத்த பின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே''

மலைமீது ஒரே கல்லாலான குகைக்கோயில் ஒன்று காட்சியளிக்கிறது. பல்லவர் காலத்திய இக்கோயில், குகைக் கோயில்களில் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் டச்சுக்காரர்கள் இத்திருக்கோயில் பற்றிக் குறிப்புகள் எழுதியிருக்கின்றனர். இக்கோயில் பற்றிய சில கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. இப்பகுதி வடமொழியில் பட்சி தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது.

வடமொழி என்றதும், தனித்தமிழ் நடையின் தந்தை மறைமலை அடிகளாருடைய பெயர் நம் நினைவுக்கு வருகின்றன. அடிகளாரின் தந்தையார் பெயர் சொக்கநாதப் பிள்ளை. தாயார் சின்னம்மையார்.

* ''சொக்கநாதருக்கு வயது அறுபதுக்கு மேலும் ஆயிற்று. சின்னமைக்கு நாற்பதுக்கு மேலும் ஆயிற்று. 'இவர்க்கினிப் புதல்வர்ப் பேறு அரிதே' என்று பலருங் கருதினர். 'இல்லை என்றே' உறுதியும் செய்துவிட்டனர். ஆனால் சின்னம்மை மட்டும் நம்பிக்கையுடனிருந்தார். அவர் சிறிது கற்றவர். தொண்டை நாட்டுத் தலமானதும், சைவ சமயக் குரவர்கள் நால்வர்களாலும் பாடப் பெற்றதும் ஆன திருக்கழுக்குன்றத்தில் மலைமேல் அமர்ந்துள்ள வேதாசலரை வழிபட்டு நோன்பிருந்தால் மகப்பேறு வாய்க்கும் என்று அறிந்தோர் கூறக்கேட்டார், சின்னம்மை. உடனே அவர், செங்கற்பட்டு நகருக்கு ஒன்பது கல் தொலைவிலுள்ள திருக்கழுக்குன்றத்தை அடைந்தார். ''குறிஞ்சி அழகும், கோவில் அழகும், குளவழகும் நிறைந்து தெய்வப் பொலிவுடன் விளங்கும், அத்திருநகரில் முறைப்படி நோன்பு பூண்டு சங்கு தீர்த்தத் தடம்படிந்து அடிவாரத்திலுள்ள மலையை வலம் வந்து மலை மீதேறி எல்லா உலகங்கட்கும், உயிர்கட்கும் முழுமுதற் பெரும் பொருளாகிய சிவபெருமானையும், (வேதாசலர், அல்லது வேதகிரீசுவரர்) சொக்கம்மையையும் வழிபட்டார். தமக்கோர் அருந்தவப் புதல்வர் வேண்டுமென மனமுருக வேண்டி இறைஞ்சி நின்றார். இவ்வாறு நாற்பது நாட்கள் வழிபட்டு வேண்டி நாகை மீண்டனர். சின்னம்மையின் தவப் பயனாய் அடுத்த ஆண்டில் மறைமலையடிகள் தோன்றினார்.

''முன்னொரு காலத்தில் வேதங்கள் யாவும் ஒரு மலையாகத் திரண்டு தம் முடிமீது சிவபிரானை இருத்தி வழிபட்டனவாம். ஆதலால் திருக்கழுக் குன்றத்திலுள்ள அம்மலை வேத அசலம் — வேதாசலம் எனப் பெயர் பெற்றதாம். அசலம்—மலை. அம்மலை வழிபாட்டால் தோன்றியபடியால் மறைமலையார்க்கு வேதாசலம் என்னும் பெயர் பெற்றோர்களால் இடப்பெற்றது. தனித்தமிழ் இயக்கங்கண்ட பிற்காலத்தில் அடிகள் வேதாசலம் என்னும் தம் வடமொழிப் பெயரைத் தனித் தமிழில் வேதம்—மறை, அசலம்—மலை, ஆக மறைமலை என்று மாற்றிக் கொண்டார்கள். சுவாமி என்ற வட சொல்லுக்கு இணையாக, அடிகள் என்பதும் சேர்க்க அடிகளின் பெயர் மறைமலையடிகள் என வழங்கலாயிற்று.''

மலைமேலுள்ள அம்பிகையின் திருப்பெயர் திருமலைச் சொக்கநாயகி, திருமலைச் சொக்கி, பெண்ணினல்லாள், அணியாதழகியவம்மை என்று வழங்குகின்றன. கீழுள்ள பக்தவத்சலர் கோயிலில் உள்ள அம்பிகையின் திருப்பெயர் திரிபுரசுந்தரி.

இத்தலத்தில் பல மண்டபங்களும், குகைகளும் காணப்படுகின்றன. அவற்றுள் அடிவாரத்திலுள்ள ஒரு மண்டபத்தின் பெயர் ஆமை மண்டபம்.

கீழே சங்க தீர்த்தம் என்னும் அழகிய குளம் ஒன்று இருக்கிறது. அங்கே அழகிய நீராழி மண்டபமும் உண்டு. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி மலரைப் போல, இங்கே பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கு பிறக்கின்றது. சில தினங்களுக்கு முன் இங்கு சங்கு பிறந்த செய்தி, பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது.

இவ்வாறு பழம் பெரும் திருக்கோயிலும், பாடல் பெற்ற தலமுமான திருக்கழுக்குன்றத்துக்குச் சுற்று வட்டாரத்திலுள்ளவர்கள்மட்டும் இன்றிச் சுற்றுலாப் பயணிகளும் நாள்தோறும் திரளாக வந்த வண்ணமிருக்கின்றனர். சித்திரைத்திங்களில்நடைபெறும் திருவிழாவுக்கோ, ஆயிரக்கணக்கானவர்கள் ஆலய தரிசனம் பெற வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். செங்கற்பட்டு, காஞ்சி, மாமல்லபுரம் செல்வோர், வழியில் உள்ள திருக்காளத்தி என்னும் தென் கயிலைக்கும்—திருக்கழுக்குன்றத்துக்கும் சென்று மகிழலாமே!

* மறை மலையடிகள் வரலாறு—பக்கம்-2,3.
திரு. மறைதிருநாவுக்கரசு அவர்கள்.

# பொய்கை இடத்தழுத புகலியர்கோன்

ச. சாம்பசிவன், எம்.ஏ.,

''தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச் சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே, தனித்த நறுந்தேன் பெய்து பசும் பாலும் தேங்கனி தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி, இனித்த நறு நெய்யளைந்தே இளஞ் சூட்டில் இறக்கி எடுத்த சுவைக் கட்டியினும் இனித்திடுந் தெள்ளமுதாக'' இலங்கும் சிவபெருமானை, பகலும் இரவும் பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து, தொழுதகை தலைமேல் ஏறத் துளும்பு கண்ணீருள் மூழ்கி அழுது அடியடைந்த அன்பர் பலராவர். அவருள், சைவத்தின் தனித் தலைவர்களாய்ச்—சைவ சமய குரவர்களாய்ப் போற்றப்படுஞ் சிறப்புக்குரியோர் நால்வராவர். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும்இந்நால்வரும் தமிழ்ச் சமுதாயம் என்னும் நன்னிலத்தில், சைவம் எனும் உரமிட்டுப் பத்தி எனும் கொடி வளர்த்துத் தேவார திருவாசகமெனும் தீஞ் சுவைக் கனிகளை உண்ணச் செய்தனர்.

''சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலும்நம்
சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்
எந்தைபிரானைந் தெழுந்தெங் கே'' [கே

என்ற பாடல், நால்வரின் திருவவதாரச் சிறப்பைக் காட்ட எழுந்தது. அளவிலாத பெருமை பெற்ற இவ் அடியார் நால்வரையும் போற்றிப் புகழ்ந்துரைக்கும் நூல்கள் பலப்பல. அவற்றுள் ஒன்றே ''நால்வர் நான்மணிமாலை''. இதனைப் பாடி அருளியவர் ''கற்பனைக் களஞ்சியம்'' எனக் கற்றுவல்லாரால் போற்றப்படும் சிவப்பிரகாச அடிகளாராவர். செல்வச் சிறப்புடைய தாய் ஒருத்தி, தன் அருமைப்பிள்ளைகட்கு மாணிக்கங்களால் ஆகிய மாலையினைச் சூட்டி மனமகிழ்வது போலச் சிவப்பிரகாசம் என்னும் செந்தமிழ்ப் புலவராகிய அன்னையாரும், தம்மால் பெரிதும் விரும்பப்படுகிற ஞானசம்பந்தப் பிள்ளையார் முதலான நான்கு பேருக்கு மாணிக்க மாலையினைச் சூட்டி மனமகிழ்கின்றார். முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்ற நால்வகை மணிகள் முறையே கோக்கப் பெற்ற மாலை போன்று வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்ற நால்வகைப் பாக்களை நிரலே நிறுத்தி, அந்தாதித் தொடை அமையுமாறு பாடப்பட்ட செந்தமிழ்ப் பனுவலே நால்வர்நான்மணிமாலை!

இம்மணி மாலையில் முந்தி நிற்பது ''முத்து' என்னும் நன்மணியாம். முத்துச் சிவிகையும், முத்துப் பந்தரும் பெற்ற முத்தமிழ் விரகராகிய திருஞான சம்பந்தப் பெருமானுக்கு ''முத்து'' மாலையைச் சூட்டி மகிழ்கிறார் சிவப்பிரகாசர். சம்பந்தரை ''வெண்பா'' எனும் ஒண்பாப் பத்திற் பக்தியுடன் பாடிப் பரவுகின்றார் அடிகளார். வேற்றோசையும் வேற்றுத் தளையும் விரவாமல், தனக்கே உரிய செப்பலோசையும், இயற்சீர் வெண்சீர் வெண்டளைகளும் கொண்டு ஏறு போல் பீடு நடைபோடும் இயல்பினது வெண்பா. களங்கமில்லாப் பிள்ளை உள்ளம் கொண்டவர் —மறந்தும் பிற சிந்தனை கொள்ளாதவர் — நாளும் தமக்கே உரிய இன்னிசையால் தமிழ் பரப்பும் பான்மையர் ஆகிய திருஞான சம்பந்தரை ''வெண்பா'' எனும் ஒண்பா யாப்பால் பாடிப் பரவும் சிவப்பிரகாசரை எப்பாவால் ஏத்த இயலும்.

மாதவத்தோர் வாழவும், வையகத்தோர் உய்யவும், மேதக்க வானோர் வியப்பவும், செந்தமிழ் செழிக்கவும் சிவனடியார் ஓங்கவும், துன்றியபன்னுதமிழ்ப் பதினுயிர நூற்பனுவல் மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும் முன்னிய சிந்தனையாற் சீரார் கவுணியர்க்கோர் சேய் என்ன வந்தங்கவதரித்த வள்ளலே ஞான சம்பந்தர். இத்தகைய வள்ளல்பால் தம் உள்ளத்தைப் பறிகொடுத்த சிவப்பிரகாசர் பத்துப் பாடல்களால், அவர் செய்த சிந்தைக்கினிய விந்தை நிகழ்ச்சிகளையும் சிவனருளால் பெற்ற பேறுகளையும் இனிதே எடுத்து மொழிகின்றார்.

ஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய தேவாரம், வெறும் பாக்கள் அல்ல. தெய்வத் திருப்பாக்கள். அப்பாக்கள் மந்திரங்கள் எனப்படும் மறைமொழிகள். ஆதலால் அவற்றிற்கு, இறந்தாரையும் எழுப்புதல்முதலான தெய்வீக ஆற்றல்கள் உண்டு. பிள்ளைப் பெருமான் செய்த செயற்கருஞ் செயல்கள் பலப்பல. அவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவற்றைச் சிவப்பிரகாசர் தம் பாவாற் போற்றுகின்றார்.

''பயனாகும் நல்லாண் பனைக்கு, விடத்திற்கு
மயலாகும் நோய்க்கு மருந்தாம்—உயிராகும்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்தன் இயம்புதிருப் பாட்டு'' (17)

''சம்பந்தன் இயம்பும் திருப்பாட்டானது, மாண் புகழ் எம்பெருமான் மன்னு திருவோத்தூரில் ஆண் பனைகளைப் பெண் பனைகளாக மாற்றியது; திருமருகல் நகரின்கண், மின்னூர் வெள் எயிற் றரவு கவ்வியதால் தன்னுவி நீங்கிய வணிக மணாளனை உயிர்ப்பித்து வாழ்வளித்தது. கோதை வேல் தென்னன்றன்கூடற் குலநகரில், வேந்தன் கூன்பாண்டியனின் வெதுப்புறு வெப்பு நோயினைப் போக்கியது ; பன்னு தொல்புகழ்த் திருமயி லாபுரிப் பதியில், அரவு தீண்டி இறந்து போன பூம்பாவை என்னும் பெண்ணின் நல் லாளின் எலும்புதனை மீண்டும் அப்புண்ணியப் பாவையாகவே ஆக்கியது'' என்னே விந்தை என உருகி உருகி உரைக்கின்றார் சிவப்பிரகாசர்

''ஞானசம்பந்தப் பெருமானே! உனது அருள் இம்மட்டோ? நினது திருமணக் காட் சியைக் காண வந்த ''வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்புகாணாது அழுந்தி, உருவெனும் துயரக் கூட்டில் உணர்வின்றி மயங்கிய அத் துணைப்பேரும், மருவிய பிறவி நீங்கி முத்தி யின்பம் கிடைக்கச் செய்த பேரருளாளன் நீ அன்றோ? உன் திருவருளின் அருமை தெரியா மல், அனல் வாதமும் புனல் வாதமும் இட்டுத் தம் வாணாளை வீழ் நாளாக்கிக் கழிந்தனரே சிலர், அவர்களின் அறியாமையை என்னென் பது?

''கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர் பிடித்துத்
தள்ளும் திருஞான சம்பந்தா-வெள்ளமிடும்
ஏடேறப் பால்குறைந்த தென்றமுவ ரேகமுவின்
காடேறப் புக்கவரு கர்'' (21)

என்று ஏத்துகின்றார் சிவப்பிரகாசர். ஞான சம்பந்தர் திருமணத்தின்போது அதனைக் காணும் பேறு பெறுமற் போயினமே. கண் டிருந்தால், அனைவர்க்கும் கிடைத்த அம்முத்தி யின்பம் நமக்கும் கிடைத்திருக்குமன்றோ எனச் சிவப்பிரகாசர் ஏங்கும் ஏக்கம், இப்பாடலில் எதிரொலிக்கிறது.

திருநெல்வாயில் அரத்துறை ஈசன் ''ஞான சம்பந்தன் நம்பால் அணைகின்றான்'' எனக் கருதி மானமுத்தின் சிவிகை, மணிக்குடை முதலாயின தந்தருளினன் என்பது வரலாறு. இதனைச் சிவப்பிரகாசர், வஞ்சப் புகழ்ச்சி அணியாக வாழ்த்துகிறார்.

''சிவபெருமானே, வீடுதோறும் இரந்து திரியும் பிச்சாண்டி. அவன் ஏறிவரும் ஊர் தியோ காளை. அவன் எப்படி ஞானசம்பந் தருக்கு முத்துச் சிவிகையும் முத்துக் குடையும் தந்திருக்க இயலும்? ஒரு கால் வேறு யாரிட மிருந்தேனும் இரந்து இப்பிள்ளைக்குத் தந்திருப் பானோ? சரி சரி. ஞானசம்பந்தர் வரட்டும், அவரிடமே இந்தக் கேள்வியைக் கேட்டு உண்மை தெரிந்து கொள்வோம் என்கின்றார் அடிகளார் :

''தேனே றலர்சூடிச் சில்பலிக்கென்றூர்திரியும்
ஆனேறி யாண்டுப்பெற்றான்கொல்நீ—தானேறு
வெள்ளைமணி யென்று வினவுவோம் வாங்கியஅப்
பிள்ளையையாங் காணப் பெறின்'' (29)

இப்பாடலை நகைச்சுவை பயப்பதாகப் பாடி யிருப்பினும், தான் எப்படியிருப்பினும் தன் பிள்ளை நன்றாக இருக்க வேண்டும் என்று கருதும் ஒரு தந்தைபோலத் தன் அடியார்கள் சிறக்க இருக்க வேண்டும் என்று எண்ணும் கருணையுள்ளம் கொண்டவனே எம்பெருமான் என்பதைத் தானே காட்டுகின்றார் அடிகளார்.

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை''

என்பது பொய்யில் புலவர் அருளிய பொரு ளுரை. ''அறத்தின் பயன் இதுவெனவிளக்கித் தரவேண்டா. பல்லக்கைச் சுமப்பவனுக்கும், அதன் மீது அமர்ந்துசெல்பவனுக்கும் இடையே உள்ள தன்மையினைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். பல்லக்கைச் சுமப்பவன் முற் பிறவியில் பாவம் செய்தவன் ; அதில் அமர்ந் திருப்பவன் முற்பிறவியில் அறம் செய்தவன்'' —என்று இக்குறட்பாவுக்கு ஓர் உரை (விளக் கம்) கூறுவதுண்டு. அம்முறையிற் பார்த்தால்: சம்பந்தப் பெருமானின் பல்லக்கைச் சுமந்த அனைவருமே பாவம் செய்தவர்களாவர். அங்ங னமாயின், சம்பந்தரது சிவிகை தாங்கி வந்த நாவரசரும் பாவஞ் செய்தவரா என்ற வினு எழக்கூடும். இதற்கு ஏற்ற விடையாக,

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையை—
மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார், திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து'' (33)

என்னும் பாடலைச் சிவப்பிரகாசர் பாடினாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஈண்டு ''மறுத்தார்'' என்ற சொல்லிற்குக் ''குறளை மறுத்தார்'' என்று பொருள் கொள்வதற்கு மாறாகக் ''குறளுக்குச் சொல்லப்பட்டுவரும் உரையை மறுத்தார்'' என்று பொருள் கொள் ளுதல் பொருத்தமாகத் தோன்றுகிறது.

ஞானசம்பந்தரது வரலாற்றில் சிறப்பாகக் கொள்ளத் தக்கது, அவர் பொய்கை யிடத் தழுத புண்ணியச் செயலேயாகும். சீகாழிப் பதியிலே, அந்தணர் தம் குடிமுதல்வராய் விளங்கிய சிவபாத இருதயர் நீராடப் போகும் போது, தாம் பெற்ற ஞானக் கன்றாகிய சம்பந் தரையும் உடன் தாங்கிச் சென்றார். குழந் தையைக் குளக்கரையில் இருத்திவிட்டுப் பெரும் பொழுது நீர்க்குள் மூழ்கித் திளைத்தார். தந்தையைக் காணாது குழந்தை அழுதது. ஆம்! உலகங்கட்கெல்லாம் ஒப்பிலா அப்பனாக விளங் கும் சிவபெருமானாகிய தந்தையைக் காணாமல் தான் அழுதது.

அழுகையிலே பிறப்பது அவலம் என்பர் அறிஞர். ஆனால், சம்பந்தர் அழுகையினால் அவலம் பிறக்கவில்லை. மாறாக, ஆன்ற சைவம் மலர்ந்தது; இனிய தமிழிசை ஏற்றம் பெற்றது.

'' கண்மலர்கள் நீர்ததும்பக்
கைம்மலர்களாற் பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய்
மணிஅதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை ஒலிபெருக
எவ்வுயிரும் குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம்
பொருமிஅழு தருளினர் ''

எனச் சேக்கிழார் அழுத குழந்தையின் அழகுறு செய்கைகளை வண்ணத் தமிழால் வரைந்து காட்டுவார்.

அழுகின்ற பிள்ளையார் தமை நோக்கி அருட்கருணை, எழுகின்ற திருவுள்ளத் திறைய வர்தாம் எவ்வுலகும் தொழுகின்ற மலைக் கொடியைப் பார்த்தருளித் துணைமுலைகள் பொழிகின்ற பால் அடிசில்பொன்வள்ளத்தூட் டுக என்றான். உமையம்மையும் எண்ணரிய சிவ ஞானத் தின்னமுதம் குழைத்தருளி ''உண் அடிசில்'' என ஊட்டினாள். தவமுதல்வர் சம் பந்தர், சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தை உணர்ந்தார். இவ்வரிய நிகழ்ச் சியினை நம் செந்தமிழ்ச் சிவப்பிரகாசர், அகம் குழைந்து உணர்கின்றார்; ஞானப்பால் உண்ட செய்தியைத் தனி வெண்பாவால் உணர்த்து கின்றார் :

'' பூவான்மலி மணிநீர்ப்
பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப்
பாலுண்டு — நாவான்
மறித்தெஞ் செவியமுதாய்
வார்த்தபிரான் தண்டை
வெறித்தண் கமலமே வீடு '' (1)

''பூக்கள் மலிந்த மணிநீர்ப் பொய்கைக் கரை யில் இயற்பாவால் மொழிவதற்காக ஞானப் பால் உண்ட ஞானசம்பந்தர், அதனை அப்படியே விழுங்கிவிடாமல், தம் நாவினால் மீட்டும் திரளு மாறு செய்து, எளியோமாயிருக்கும் எமது செவியில் அமிழ்தமாக வார்த்தார். அத்தகைய தலைவனுடைய, தண்டை அணிந்த—தாமரை போன்ற நறுமணங் கமழும் தண்ணிய திருவடி களே எமக்கு முத்தி'' எனக் கூறுவதன் வாயி லாகச் சம்பந்தப் பெருமானையே தம் கடவு ளாகக் கொண்டு விட்டார் சிவப்பிரகாசர் என்பது புலனாகின்றது.

சீகாழியில், இலைபடர்ந்த பொய்கைக் கரையிடத்து அழுது நின்றார் ஞானசம்பந்தர். அவ் வழுகுரலைச் செவியாற் கேட்டுப், பின்பு அக் குழந்தையைக் கண்ணுற் கண்ட பிறகே பால் சுரந்தாள் அன்னை உமையாள். ஆனால் அவர், அங்ஙனம் பாலுக்காக அழுதார் என்ற நிகழ்ச்சியைத் தன் முன்னிலையில் நின்ற சிலர் சொல்லக் கேட்ட அவ்வளவிலே, தாய்மை உணர்வு மேலீட்டால், பால் சுரந்தாள், வளவர் கோன் பாவையாம் மங்கையர்க்கரசியார். அழு குரல் கேட்டுக் கண்ணுற் கண்ட பிறகு பால் சுரந்த உமையன்னை உயர்ந்தவளா? நெடுந் தொலைவிலிருந்த போதும், குழந்தையைக் கண் ணுற்கூடக் காணமல், குழந்தை அழுதது எனச் செவியிற்பட்ட மாத்திரத்திலேயே பால் சுரந்த மங்கையர்க்கரசி அன்னை உயர்ந்தவளா? இவ் விருவரில் உயர்ந்தவர் யார் என்பதை நீயே சொல்லு!'' எனச் சம்பந்தரையே இதில் சம் பந்தப்படுத்துகின்றார் சிவப்பிரகாசர்.

'' இலைபடர்ந்த பொய்கை
யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ
முன்னின் — நிலைவிளம்பக்
கொங்கைசுரந்தவருட்
கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தாள் ஆர்சொல் எனக்கு (5)

இக்கேள்வி, சிலப்பதிகாரத்தில், மலை வளங் காணச் சென்ற மன்னவனும் சேரன் செங்குட் டுவன் தன் மாண்புமிகு மனையாளை நோக்கி, ''உயிருடன் சென்ற ஒரு மகள் தன்னினும், செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும் நன்னுதல்! வியக்கும் நலத்தோர் யார்?'' எனக் கேட்ட கேள்விக்குச் சமத்காரமாகக் கூறிய பதிலை நினைவூட்டுகின்றதன்றோ? **

## பதி — பசு — பாசம்

'' அறியாமை வயப்பட்டு மயங்கும் ஆருயிர்களை, அதனினின்றும் விடுவித்து அறிவுறுத்துதற் பொருட்டு, அவை தமக்குப் பல்வேறு உடம்புகளையும், பல்வேறு உலகங் களையும் படைத்துக் கொடுப்பவன் ஆகிய இறைவன் ஒருவன் உளன் என்பதூஉம், இவ்வாறு அவ்வுயிர்கள் உடம்புகளின் வழியாய் உலகங்களிலிருந்து தம் அறியாமை தேய இன்பதுன்பங்களை நுகருமிடத்து ஆண்டுத் தோன்றுவது வினையாம் என்பதூஉம், இவ்வினை நுகர்ச்சியால் அறியாமை முற்றும் தேய்ந்து ஒழிந்த வழி, ஆண்டு அவ் வுயிர்கள் மாட்டு முன்னர்ச் சுருங்கிக் கிடந்த இயற்கையறிவு விரிந்து விளங்க, அதன்கண் முதல்வனின் திருவருட் பேரொளி ஒற்றித்துநின்று துளும்புமாகலின், அதுவே வீடுபேறாகும் என்பதூஉம், அரிய பொருள்களாம். எனவே இவையெல்லாம் பதி பசு பாசம் (இறை-உயிர்-தளை) என்னும் மூன்று சொற்கண்ணே அடங்கும்''.

—அருட்டிரு. மறைமலையடிகளார்.

# சென்ன மல்லீசுவரர்,
# சென்ன கேசவப்பெருமாள்
# திருக்கோயில்கள்.

தேவராச முதலி தெரு, சென்னை-600 003.

## தேவத்தான வெளியீடுகள்

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| மேற்படி தேவத்தானத் தலபுராணம் | ... | 0 | 50 |
| சேக்கிழாரும் சேயிழையார்களும் | ... | 0 | 50 |
| மாணிக்கவாசகர் வரலாறு | ... | 1 | 50 |

திருமதி எம். எல். வசந்தகுமாரி அவர்கள் பாடிய திருப்பாவை
எல். பி. இசைத்தட்டுகள் அறநிலையங்களுக்கு மட்டும்
மலிவான விலையில் கிடைக்கும்.

அசல் மஞ்சளால் செய்த குங்குமம் விற்பனைக்குக் கிடைக்கும்.

மணலி இராமகிருஷ்ண முதலியார், பி.ஏ.,
பரம்பரை தர்மகர்த்தர்.

# கந்த புராணம்

திருமுருக கிருபானந்தவாரியார்.



(முற்றொடர்ச்சி)

### கயமுகன் தேவர்களை ஏவல் கொள்ளல்

கயமுகாசுரனிடம் காமதேனு, கற்பகம், சங்க நிதி, பதும நிதி, சிந்தாமணியும் வந்து ஏவல் செய்தன. சுக்கிரர் அவனுக்கு அமைச்சராக இருந்தார். பிரமனும் தேவரும் தேவமாதர்களும் அவனிடம் வந்து அவன் இட்ட பணியைச் செய்தார்கள்.

### புதிய பணி

இந்திராதி இமையவரை அழைத்து ''தேவர்களே! இன்று முதல் என் முன் நீங்கள் மூன்று முறை குட்டிக் கொண்டு, இரு செவிகளைக் கரங்களால் மாறிப் பற்றி, இருந்து எழுந்து தோப்புக்கரணம் போட வேண்டும் என்றான். அதுபடியே அமரர்கள் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டு, உடலும் உள்ளமும் வருந்தினார்கள். இவ்வாறு காலம் பல கடந்தன. ஞாலம் முழுவதும் கயமுகனுடைய கொடுமை மிகுந்தது. ஓலமிட்டு உம்பர் உலைந்தார்கள்.

### சிவனிடம் முறையீடு

மாலயனாதி வானவர்கள் காலகாலனும் கரைமிடற்றுக் கடவுளிடம் போய், தொழுது அழுது கயமுகாசுரனால் தாம் படும் அல்லலைக் கூறிக் கருணை புரிய வேண்டும் என்று முறையிட்டார்கள். சிவபெருமான் வருந்தாதீர்கள். ''நாம் ஒரு புதல்வனைத் தந்து உங்கள் துயரினைக் களைவோம்'' என்று கூறி அருள் புரிந்தார். விடையவனிடம் விடைபெற்று விபுதர்கள் தத்தம் இருக்கை சேர்ந்தார்கள்.

### விநாயகர் திருஅவதாரம்

கயிலாய மலையில் உள்ள ஓர் அழகிய நறுமலர்ச்சோலைக்குப் பரமனும் பராசக்தியும் எழுந்தருளினார்கள். அதன் நடுவேயுள்ள மந்திரச் சித்திர மண்டபத்துக்குள் சென்றார்கள். அங்கே மந்திர ஓவியங்கட்கு இடையே சமஷ்டிப் பிரணவம் வியஷ்டிப் பிரணவம் என்ற இரு பிரணவ மந்திரங்கள் இருந்தன. அந்த இரு பிரணவ மந்திரங்களையும் அம்மையும் அப்பனும் திருக்கண் சாத்தினார்கள். அவை யானை வடிவுடன் கூடின. அப்பிரணவத்தில் இருந்து பிரணவ வடிவுடன் விநாயகப் பெருமான் அவதரித்தார்.

ஒருமையால் உணருவோர்
உணர்வினுக் குணர்வதாம்
பெருமையான் ; எங்கணும்
பிரிவரும் பெற்றியான்;
அருமையான்; எவரும்
அடிதொழும் தன்மையான்
இருமையும் ஈசனே
என்ன நின்றருளுவான்.

ஒரு புறம் இருசெவியும், மூன்றுகண்களும், நான்கு தோள்களும், ஐந்து திருக்கரங்களும், பவளமேனியும் யானை முகமும் உடைய அவர் மீது மலர் மழை சிந்தியது.

விநாயகர் தாய் தந்தையரது தாள் மலரில் தாழ்ந்து வணங்கினார். பரமசிவமும், பராபரியும் மைந்தனைத் தழுவி மகிழ்ந்து,

''ஒருவர் ஒரு கருமம் தொடங்கும்போது உன்னை வணங்குவரேல் அவருடைய கருமத்தை முடித்து வைப்பாயாக. உன்னை வணங்கிலாதார்க்கு விக்கினம் விளைவதாக'' என்று கூறி அருள் புரிந்தார்கள்.

என்னரேயாயினும் யாவதொன்றெண்ணுதல்
முன்னரே உனது தாள் முடியுறப்பணிவரேல்
அன்னர்தம் சிந்தைபோல் ஆக்குதி; அலதுணை
உன்னலார் செய்கையை ஊறுசெய்திடுதி நீ.

விநாயகர் கயிலையில் வீற்றிருந்தருளினார்.

### சூது செய்த நீது

ஒரு நாள் உமையம்மையும், தேவதேவரும் சூது விளையாடினார்கள். தோலையுடுத்த ஈசன் தோல்வியுற்றார். நாம் வென்றோம் என்றார். இந்த ஆட்டத்திற்குச் சாட்சியாயிருந்த திருமால் ''சிவபிரான்தான் வென்றார்'' என்றார். அதனால் அம்பிகை வெகுண்டு ''மாயனே நீ பாம்பாகுக'' என்று சபித்தார்.

சிவபெருமான் திருமாலுக்கு இரங்கி, ''நீ தென்னாட்டில் ஆலங்காட்டில் ஓர் ஆலமரப் பொந்தில் தவஞ் செய்து கொண்டிரு. அங்கே கணபதி வருவான். சாபந் தவிரும்'' என்று வரமளித்தார். அதுபடியே அரவமாகி ஆலங் காட்டில் ஓர் ஆலமரப் பொந்தில் திருமால் தவம் புரிந்திருந்தார்.

### கயமுகன் சங்காரம்

விநாயகப் பெருமானுடைய திருவவதாரத் தால் மகிழ்வெய்திய இந்திராதி தேவர்கள் கய முகாசுரனால் மிகவும் நொந்து திருக்கயிலாய மலையை யடைந்து விநாயகப் பெருமானுடைய திருவடிகளில் வணங்கி, ''எம்பெருமானே, சிவபெருமானிடம் எல்லையில்லாத வரம் பெற்ற கயமுகாசுரன் பெருந் துன்பம் செய்கின்றான். புதுமையாக ஒரு செயலைச் சொல்லியிருக்கின் றான். நாங்கள் அவனிடம் போய்த் தலையில் குட்டிக் கொண்டு காதுகளைக் கைகளால் பற்றிக் கொண்டு தோப்புக் கரணம் போட்டு, அவனைக் கும்பிட வேண்டும். அண்ணலே! அவனை வதைத்து எம் அல்லலைச் சிதைத்து ஆண்டருள் புரிவீர்'' என்று குறைகூறி முறையிட்டு, மோத கங்கள் வைத்துப் போற்றினார்கள்.

விநாயகப் பெருமான் எழுந்து அசலன் என்ற பூதத்தின் மீது ஏறிக்கொண்டு பூத கணங் கள் புடைசூழப் போருக்குப் புறப்பட்டார். தேவர்கள் குடை பிடித்தார்கள். சாமரை வீசினார்கள். வாத்தியங்கள் முழங்கின. மதங்க புரம் சென்றார்.

கயமுகாசுரன் இதனை அறிந்து ஆயிரம் வெள்ளம் அரக்கர் சேனைகளுடன் போருக்கு வந்தான். கடும் போர் நடந்தது. பூதங்களால் அரக்கர் சேனை அழிந்தது.

கயமுகாசுரன் இதனைக் கண்டு காலாக்கினி போல் கனன்று, வில்லை வளைத்து, கணை மழை பொழிந்தான். பூத சேனைகள் சிதறியோடின. விநாயகப் பெருமான் அவன் முன் சென்றார். ''இவன் யாரென்று கேட்டான்''கயமுகாசுரன். அருகில் இருந்தோர் ''அசுரர் தலைவா! இவன் சிவன் மகன்'' என்றார்கள். கயமுகாசுரன் கணபதியைப் பார்த்து ''சிவகுமாரா! உன் தந்தை எனக்கு எண்ணற்ற வரங்களை வழங்கி யுள்ளார். என்னைக் கொல்ல உன்னால் ஆகாது. நீ திரும்பிப் போ'' என்றான்.

விநாயகர் அசுரனை நோக்கி, ''தீயனே! நீ தேவர்களுக்குத் துன்பம் செய்ததால் உன்னை மாய்க்குமாறு சிவபெருமான் என்னை அனுப்பி உள்ளார். நீ இந்திரனை அவன் நகரில் ஆட்சி செய்யுமாறு செய்து இன்று முதல் இமைய வருக்கு இடர் புரியா யெனில் உனக்கு நாம் கருணை புரிவோம். இல்லையேல் இப்போது நீ அழிவது திண்ணம்'' என்று அருளிச் செய்தார்.

கயமுகாசுரன் வில்லெடுத்துப் பாணங் களையேவினான். விநாயகர் அவன் விட்ட கணை களைத் துண்டித்து அவன் வில்லை முறித்தார். கயமுகாசுரன் தண்டாயுதத்தை ஏந்தி எதிர்த் தான். ஐங்கரக் கடவுள் தண்டை முறித்து, அவனை ஓங்கி அடித்தார். அவன் சோர்ந்து நின்றான். விநாயகர் தமது திருக்கரத்தில் உள்ள பாசத்தை ஏவிச் சேனைகள் முழுவதையும் மாய்த் தார். இதனைக் கண்ட கயமுகன் விநாயகர் அருகே தெய்வப் படைக் கலங்களை யேவினான். அவைகள் வந்து விநாயகரை வலஞ் செய்து வணங்கி நின்றன.

விநாயக மூர்த்தி இவன் எந்த ஆயுதங் களாலும் சாகா வரத்தை எந்தையாரிடம் பெற் றுள்ளான் என்று திருவுளத்தில் சிந்தித்துத் தமது திருமுகத்தில் உள்ள தந்தத்தை முறித்து சில மந்திரத்தைக் கூறியேவினார். அக்கோடா யுதம் அவனுடைய மார்பைப் பிளந்து நன்னீர்க் கடலில் முழுகிக் கணேசருடைய கரத்தில் வந்து அமர்ந்தது.

அவனுடைய உடம்பினின்று வந்த உதிர வெள்ளம் ஒரு கானக முழுவதும் பரவியது. அந்த இடம் திருச்செங்காடு எனப்பேர் பெற்றது. அவன் இறவா வரம் பெற்றவன். ஆதலால் பெருச்சாளி வடிவுடன் எதிர்த்து வந்தான். விநாயகர் அசலனுடைய தோளில் இருந்து இறங்கி அந்த ஆகுவின் மீது ஆரோகணித்து அருள் புரிந்தார். அவன் மெய்ஞ்ஞானம்பெற்று உயர்ந்தான். புத்தேளிர் கணேச மூர்த்தியைப் போற்றிப் புகழ்ந்து பூமாரி பொழிந்தார்கள்.

மயிலுக்குத் தோகையழகு, சேவலுக்குக் கொண்டையழகு. யானைக்குக் கொம்பு அழகு. தமது திருமுகத்தில் அழகாக விளங்கிய ஒரு கொம்பை அமரர்கள் பொருட்டு ஒடித்து அசுரனை மடித்து அருளிய விநாயகருடைய கருணைத் திறத்தைத் தேவர்கள் சிந்தித்து வந் தித்தார்கள்.

சுக்கிராசாரியாரும், அசுரேந்திரனும் பற வையுருக் கொண்டு பறந்து கரந்து வாழ்ந்தார் கள்.

திருச்செங்காட்டில் விநாயகர் சிவலிங்கம் வைத்து வழிபட்டார். அது கணபதீச்சுரம் எனப் பேர் பெற்றது. இறந்த பூதர்களை எழுப்பிக் கணேசர் ஆகுவாகனத்தில் புறப்பட்டு ஆலங் காட்டுக்கு எழுந்தருளினார். அம்மை சாபத்தால் அரவாயிருந்த அச்சுதமூர்த்திக்கு அச்சாபம் அகன்றது.

### விநாயகர் சஷ்டி

விநாயகருடைய கருணையால் திருமால் தம் பழைய வடிவைப் பெற்று விநாயகருக்கு அபி ஷேக ஆராதனை செய்து வழிபாடு புரிந்தார். அப்படி வழிபட்டநாள், ஆவணி மாதம், சுக்ல பட்சத்து சஷ்டியாகும். அன்று விநாயகரை வழிபட்டோர் எல்லா நலன்களும் எய்துமாறு விஷ்ணு விநாயகரிடம் வரம் பெற்றார்.

மாலயனாதி வானவர்கள் விநாயகரை வணங்கி ''இத்தனை காலம் கயமுகனிடத்தில் இட்டதுபோல் உமது சந்நிதியில் நாங்கள் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் இடுவோம்''

என்றனர். விநாயகர் ''அவ்வாறு செய்து நலம் பெறுவீர்கள்'' என்று கூறி கருணை புரிந்தார். இது தான் சிவமூர்த்திக்கு மைந்தன் உண்டாகிய தன்மை'' என்றார் ததீசி.

தட்சன் : சிவனுக்குத் தாமத குணந் தானே!

ததீசி : ஏ பேதையே! சிவமூர்த்தி சத்துவம், இராஜசம் தாமதம் என்ற முக்குணங்கள் இல்லாதவர். அவர் நிர்க்குணர். ஆனால் சிற்குணர். சங்காரத்தைத் தமோகுணத்தால் செய்வதால் ஈசனைத் தமோகுணமுடையவன் என்று கூறுதல் கூடாது.

சிவபெருமான் சாந்தகுணக் குன்று. சத்து உருவம் வெண்மை. அதனால் சிவபெருமான் வெள்ளை நீறு அணிந்து, வெள்ளிய தும்பை சூடி, வெள்ளி மாமலையில் வீற்றிருக்கின்றார். சங்கர மாதேவன் அகிலலோக ஏகநாயகன். உயிர்க்கு உயிராகி எங்கும் இருக்கும் அப்பரமனுடைய தன்மையை வேதங்களும் உணராது. பேதையே! நீ சிவமூர்த்தியைப் போற்றி உய்வாயாக'' என்று இயம்பினார்.

ததீசி முனிவருடைய அறவுரை ஓட்டை ஏனத்தில் விட்ட நீர்போல் ஆயிற்று. தட்சன் கேட்டு ''உங்கள் சிவன் எல்லாஞ் செய்யவல்ல ஈசனே ஆகட்டும். அவனுக்கு நான் அவிர்ப் பாகம் வழங்கமாட்டேன். உன் உபதேசம் போதும். எழுந்து போ.'' என்றான். ததீசி முனிவருக்குச் சீற்றம் பொங்கியது. எம்மலையும் எக்கடலும், எவ்வுலகும் யாவும் யாரும் அழியுமோ என்று எல்லோரும் அஞ்சினார்கள். ததீசி முனிவர் தமது சினத்தைத் தணித்து, தட்சனைப் பார்த்துக் கூறுகின்றார்.

''தட்ச! சிவமூர்த்தியை விலக்குச் செய்யும் இம்மகம் சிதைவதாக. இங்குறையும் தேவரெல்லாம் அழிக'' என்று சபித்தார். அங்குள்ள வேதியர்களைப் பார்த்து ''நீங்கள் சிவபக்தியின்றித் தீ நெறிப்பட்டுத் திரிவீர்களாக

''பேசரிய மறைகளெலாம் பராபரன் நீ
எனவணங்கிப் பெரிது போற்றும்
ஈசனையும் அன்பரையும் நீற்றெடுகண்
டிகையினையும் இகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவராய் எந்நாளும்
பிறந்திறந்து கதியுறாது
பாசமதனினப்பட்டு மறையுரையா
நெறியதனில் படுதிர்''

என்றார்.

இவ்வாறு பல சாபங்களைக் கூறித் தன் மாணவர்கள் சூழத் தன் ஆச்சிரமம் போனார். அவருடைய பின்னே தட்சனுடைய தவமும் தகவும் புகழும் தொடர்ந்து சென்றன.

''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன், திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்,—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்,
என்னாழி வண்ணன்பால் இன்று.''

— பேயாழ்வார்.

''பண்டைநான் மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி யனலும்
பெருகிய புனலொடு நிலனும்
கொண்டல்மா ருதமும் குரைகட லேழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்,
அண்டமும் தானாய் நின்றவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே.''

— திருமங்கையாழ்வார்.




### என் பிரார்த்தனை

நாம் ஏன் பிரார்த்தனை செய்ய வேண்டும்; நமது அறிவு கூர்மை அடைவதற்காகப் பிரார்த்தனை; நமது ஆத்மாவிற்கு ஒளி கிடைப்பதற்காகப் பிரார்த்தனை.

பிரார்த்தனையின் இன்பம் பிராணவாயு கிடைத்த ஆனந்தத்தைத் தரும்; நமது மனத்தில் எவ்வகை நாற்றமும் புக முடியாதபடி கார்க்குப் போல பயன்படும்.

எனவே, பிரார்த்தனை பாதுகாக்கப்படும் தூய பிராண வாயு. பிராணன் இருக்கும் வரை பிரார்த்தனை தேவை.

தீமையிலிருந்து நன்மைக்கு அழைத்துச் செல்வது பிரார்த்தனை.

இருளிலிருந்து ஒளிக்குக் கூட்டிச் செல்வது பிரார்த்தனை.

இறப்பிலிருந்து பிறவாமைக்கு ஏற்றிச் செல்வது பிரார்த்தனை.

பிரார்த்தனை நமது தாய்; பிரார்த்தனை நமது தந்தை.

பிரார்த்தனை நமது நண்பன்; பிரார்த்தனை நமது ஆசான்.

பிரார்த்தனையை விடச் சிறந்த அறிவு வேறு இல்லை. பிரார்த்தனையை விடச் சிறந்த செல்வம் பூமியில் வேறு என்ன இருக்கிறது?

பிரார்த்தனை கடவுளின் செவிக்குக் கேட்கும் நாதம்; பிரார்த்தனை கடவுளின் ஆத்மா விரும்பும் கீதம்.

பிரார்த்தனைக்குள் நாதமும் கீதமும் இணைந்து இருந்தால் அதுவே மந்திரம் ஆகும்.

மந்திரம் என்பது நம்பிக்கையுடன் என்றென்றும் சொல்லப்படுவது; பலர், பல்லாண்டு சொல்லி அதற்குத் தனிப் பொலிவு உண்டாகியுள்ளது.

பொன் வேண்டேன்; பொருள்வேண்டேன். பதவி வேண்டேன்; பண்ணும் வேண்டேன். எனக்கு வேண்டுவது நீ. பிரார்த்தனை வழியாக உன்னைச் சிக்கெனப் பிடிக்க முடியும்.

என் ஆயுளில் உன் நினைவு வேண்டும் இறைவா; நின் அன்பு வேண்டும்; உன் அன்பைப் பெறுவதற்கு எனக்கு அன்பு காட்டுவாயாக.

### இதுவே என் பிரார்த்தனை

சார்ந்தாரை எவ்விடத்தும்
காப்பனவும், சார்ந்தன்பு
கூர்ந்தார்க்கு முத்தி
கொடுப்பனவும்—கூர்ந்துள்ளே
மூளத் தியானிப்பார்
முன்வந்து நிற்பனவும்
காளத்தி யார்தங்
கழல்

—நக்கீரர்.

### தத்துவக் கதை :

#### மனித ஆயுள்

ஆண்டவன் முதன் முதலாக மனிதனைச் சிருஷ்டி செய்தான். மனிதன் கேட்டான் : ''ஆண்டவனே! என்ன அற்புதமான உலகம் இது. எனக்கு எவ்வளவு காலம் இந்தப் பூமியில் வாழ முடியும்?''

''முப்பதாண்டு காலம் நீ வாழலாம். அதுவே உன் ஆயுள்.''

''மிகக் குறைவு. இன்னும் சில ஆண்டுகள் சேர்த்துத் தரக் கூடாதா?''

''அப்பனே! என் கையில் உனக்குத் தர ஆயுள் இல்லை. சில மிருகங்களை அழைக்கிறேன். அவை உனக்குத் தமது ஆயுளைத் தந்தால் நீ சேர்த்துக் கொள்.'' என்றார்.

முதன் முதலாக வந்தது கழுதை. ஆண்டவன் இதனைப் பார்த்து ''உன் வேலை மிகக் கடினமானது. சுமை சுமக்க வேண்டும். உன் எஜமானனின் வீட்டைச் சுற்றிய இடங்களில் நீ மேய்ந்து கொள்ளலாம்'' என்றார்.

''எத்தனை ஆண்டுகள் எனக்கு ஆயுள்?''

நாற்பது ஆண்டுகள்.''

''ஐயோ தொல்லை பிடித்த வாழ்க்கை. எனக்கு இருபது ஆண்டுகள் வாழ்வு போதும்'' என்றது.

மனிதனைப் பார்த்து ஆண்டவன் ''இந்தக் கழுதையின் ஆயுளில் எஞ்சிய இருபது ஆண்டுகளை உன் ஆயுளோடு சேர்த்துத் தருகிறேன். உனக்கு ஐம்பது வயது கிடைத்துவிட்டது'' என்றார். மனிதனுக்குச்சொல்ல முடியாத மகிழ்ச்சி.

அடுத்து நாய் வந்தது. ''இவர் உன் எஜமானன். இவரது செல்வங்களைப் பாது காத்துக் கிடப்பது உன் கடன். உனக்குத் தேவையான கூழ், எலும்பு கிடைக்கும். சமயா சமயத்தில் அடியும் உதையும் கிடைக்கும்'' என்று நிறுத்தினார்.

''நான் எவ்வளவு காலம் உயிர் வாழ்வேன்?''

''நாற்பதாண்டு காலம்.''

''நான் ஏன் அத்தனை ஆண்டுகள் துன்பமடைய வேண்டும்'' என்று ஒரு குரைப்புக் குரைத்தது. ''எனக்குப் பாதி நாள் போதுமே. இருபதாண்டு காலம்'' என்றது.

ஆண்டவன் அதன் இருபதாண்டுக் காலத்தை எடுத்து மனிதனின் ஆயுளுடன் சேர்த்துக் கூட்டினான். இப்போது மனிதனுக்கு எழுபது ஆண்டு ஆயுள் கிடைத்தது. சொல்லுக்குள் அடங்காத பெரு மகிழ்ச்சியில் மனிதன் துள்ளிக் குதித்தான். அடுத்து ஆண்டவன் முன்பு வந்தது என்ன?

குரங்கு. ஆண்டவன் ''நீ மனிதனைப் போலவும், மனிதனாக இல்லாமலும் நடப்பாய். உனக்கு இருப்பது கையா காலா என்று சந்தேகப்படுவார்கள். உனக்கும் ஏதோ தின்னக் கிடைக்கும்'' என்று நிறுத்தினார்.

''என் ஆயுள் எவ்வளவு?''

''அறுபது ஆண்டு''.

''அவ்வளவு காலம் எதற்கு. எனக்குப் பாதி ஆயுள் போதும்'' என்றது குரங்கு. எனவே அதிலுள்ள முப்பது ஆண்டுகளை மனித ஆயுளுடன் கூட்டினார். இப்போது மனித ஆயுள் நூறாண்டு ஆகிவிட்டது. மனிதனுக்கு நாலு பகுதியாக ஆயுள் கிடைத்திருக்கிறது.

முதல் முப்பதாண்டு காலம், அவன் வாழ்க்கையை மனம் போனபடி வலுவான உடலோடு மகிழ்ச்சியாக, பூர்ணமாக அனுபவிக்க வாய்ப்பாக இருக்கும்.

இரண்டாவது பருவத்தில் ஐம்பதாண்டு வரை, அவன் திருமணம் செய்து தந்தையாகி விடுவான். இவனுக்குக் குடும்ப பாரம் அழுத்தும். தன் குழந்தைகள்—மனைவி—இவர்களுடைய தேவைகளுக்காக இவன் கழுதையாகிப் பொதி சுமப்பான். கழுதை படாத பாடு தான் இவன் வாழ்க்கை.

மூன்றாவது பருவத்தில் ஐம்பது முதல் எழுபது வரை. தன் சொத்துக்களைத் தன் குழந்தைகள் நலத்துக்காக நாய் போலக் காத்துக் கிடப்பான். இவனுக்குத் தரப்படும் உணவு குழந்தைகளோடு சேர்ந்த பந்தியில் இருக்காது. அவர்கள் தின்ற மிச்சம் மீதி கிடைக்கும். இது நாய் வாழ்க்கை.

நான்காவது முடிவான பருவம் எழுபது முதல் நூறு வரை. இந்தப் பருவத்தில் பல் போய் முகம் சுருங்கி அவன் நடையும் பழக்க வழக்கமும் உடலும் குன்றி இவனது மக்கள்—பேரர் கேலி செய்யும் அவல நிலைக்கு உள்ளாவான். இவனுக்கும் குடும்பத்திற்கும் சம்பந்தமே இல்லாதபடி, குரங்கைப் போலக் குந்தி வாழ்வான்.

இந்தப் பருவங்களே மனித வாழ்க்கை. பரிபூரண ஆயுள்!

எழுபது ஆண்டுகள் உயிர் வாழ்ந்தவர்கள் செய்யும் காரியங்களைப் பார்த்தால், அவர்கள் வாழ்ந்த ஆண்டுகளை இவ்வாறு பகுத்துக் கொள்ளலாம்:

| | | | |
|---|---|---|---|
| கல்விக்காக | ... | 3 | ஆண்டுகள் |
| விளையாட்டுக்காக | ... | 7 | ,, |
| உணவு உண்டதற்காக | ... | 6 | ,, |
| வேலை செய்தது | ... | 11 | ,, |
| தூங்குவதற்காக | ... | 23 | ,, |
| உடையலங்காரத்துக்காக | | 5½ | ,, |
| நடையும் அலைச்சலும் | ... | 6½ | ,, |
| பேசிய பேச்சு நேரம் | ... | 4½ | ,, |
| பிற நூல் படித்த நேரம் | ... | 3 | ,, |
| ஆண்டவனைப் பிரார்த்தனை செய்த நேரம் | | ½ | ,, |

**ஆண்டவன் அடிமை**

நாளுக்கு நாள் உலகத்தில் பயங்கரங்கள் விருத்தியாகிக் கொண்டிருக்கின்றன. இதன் பொருள் யாது? அறியாமை மிகுதல், துன்பம் மிகுதல். சாவுக்கு வழி வகைகள் மிகுதல் என்றே பொருள்.

ஒவ்வொரு நாளும் நமக்கு ஒளியுடன் பொழுது விடிகிறது. இருளுடன் தூக்கம் வருகிறது. இந்த ஒளி தினமும் நமக்குக் கிடைக்கும் என்று நம்புகிறோம். முடிவில் நமக்குக் கிட்டுவது இருள்.

இருள் நிரம்பிய வாழ்க்கை என்பது சாவின் அறிகுறி.

ஒளிநிரம்பிய வாழ்க்கை என்பது, அமைதி யின் அறிகுறி.

இருள் நிரம்பிய வாழ்க்கை சூழ்ந்த பின்பு நம்மைப் பலர் மறந்துவிடுவார்கள்.

ஒளி நிரம்பியவாழ்க்கை என்பது நம்மோடு பிறர் ஆனந்தமாக இருப்பார்கள்.

அமைதியுடன் வாழ்ந்து ஆனந்தமாகக் காலங்கழிக்கத் தெரிதல் வேண்டும்.

விதி நம்மோடு சதா போர் நடத்திக் கொண்டிருக்கிறது. விதிக்குள் மாட்டிக் கொண்டால் நம் வாழ்வு சிக்கலாகி, சின்ன பின்னமாகிப் போம்.

சந்தர்ப்பங்கள் இருக்குங்கால் அவன் சாந்தமாக, சௌகரியமாக, வாஞ்சையுடன் வாழும் வகையை அறிந்திருக்க வேண்டும்.

எய்ப்பும் இளைப்பும் வந்த பிறகு வாழ்வில் தவறு பண்ணிவிட்டோமே, வாழ்வில் தீமைகள் செய்தோமே என்று வருந்துவதால் நமக்குப் பயன் இல்லை. நம்மை நம்பியவர்களுக்கும் பயன் இல்லை.

மனம் சஞ்சலப்படாமல், சங்கடப்படா மல் வாழ்ந்து பழகிக் கொள்வது அறிவாளிகள் பழக்கம்.

உடலும் உள்ளும் நலியும் முன்னதாக, நாம் அடைய வேண்டிய நற்பேறுகளை அடைவோ மாக. செய்ய வேண்டிய நற்பணிகளைச் செய் வோமாக.

வாலிபமாக இருக்கும் போது புத்திசாலி யாக வாழத் திட்டம் போடத் தெரியாமல் வயோதிக காலத்தில் எந்தத் திட்டங்களும் பயன் தருவதில்லை.

விளையும் பயிரை முளையிலேயே காத்தல் வேண்டும்.

பனி சூழ்ந்து கொண்டால் பொருள் இருந்தும் நமக்குத் தெரியாது. வயோதிகம் வந்து விட்டால் நமக்கு அறிவுத் தெளிவு இருந் தும் செயல் முறை தவறிப் போகும்.

நாம் நினைப்பதை இளமையிற் கற்று, வாலி பத்தில் கடைப்பிடித்தால், வயோதிகம் வந்த போது நாம் மெலியோம். நமது ஆத்மா ஆரோக்கியமாக புஷ்டியாக இருக்கும்.

அல்லல் என் செயும்
    அருவினை என்செயும்
தொல்லை வல் வினைத்
    தொந்தம்தான் என்செயும்
தில்லை மாநகர்ச்
    சிற்றம் பலவனுர்க்கு
எல்லை இல்லதோர்
    அடிமை பூண்டேனுக்கே.

—திருநாவுக்கரசர்.

## திருக்காலி ஈசுவரர் திருக்கோயில்

இத்திருக்கோயில் செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிமாநகரத்துக்குக் கிழக்கே, பதினைந்து கல் தூரத்தில் பாலாறு நதியின் தென்கரையில் அமைந்திருக்கிறது. இக்கோயில் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் ஏழு கோபுரங்களையும், உயர்ந்த திருச்சுற்று மதில்களையும் உடையதாக உள்ளது. இதில் இராசகோபுரம் சுமார் 100 அடி உயரத்தில் ஐந்து நிலைகளை யுடையதாய்க் கம்பீரமாக விளங்குகின்றது. இக்கோயிலின் முன்புறத் தோற்றம் கண் கொள்ளாக் காட்சியாகும்.

இம்மூர்த்தியை ஒருகாலத்தில் பசுக்கள் (கன்று காலிகள்) பூசித்தபடியால், இவர் ஸ்ரீ காலி ஈசுவரர் என்று போற்றப்படுகிறார். இறைவியார் ஸ்ரீ சிவகாமிசுந்தரி என்ற பெயருடன் அழகான தோற்றத்துடன் விளங்குகிறார்.

கோயிலின் உட்புறத்தில் சிவகங்கை யென்னும் ஒரு புண்ணிய தீர்த்தம் இருந்து வருகிறது.

இம்மூர்த்தி, இன்றளவும் வேண்டுவோர்க்கு வேண்டியபடி அருள்பாவித்து வருகிறார்.

இக்கோயில் ஆயிரம் ஆண்டுகட்குமுன் பேரிச்செட்டி மார்களில் ஒரு சிறந்த பக்தரால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. சில கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

பிரதி ஆண்டும் 'சித்திரைப் பெருவிழா' சிறப்புடன் நடைபெறுகிறது. ஒரு சிறந்த பிரார்த்தனைத் தலம். பிரதி திங்கள், வெள்ளி, நாட்களில் மக்கள் திரண்டு வந்து தரி சித்துச் செல்லுகிறார்கள். இத்திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்து, குடமுழுக்கு விழா நடத்த வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது.

இதற்கு மெய்யன்பர்களின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

# மக்கள் தெய்வம் மாகாளி

இரா. நாகசாமி, எம். ஏ.

உலக நாடுகள் அனைத்திலும் கண்கண்ட கடவுளாகப் போற்றப்படுபவள் தாய். நம் நாட்டில் நிலத்தைத் தாயாக வணங்குகிறோம். நீரை—ஆற்றைத் தெய்வமாகப் போற்றுகிறோம். இயற்கைத் தெய்வத்திற்குச் சக்தி எனப் பெயரிட்டு அழைக்கிறோம். இயற்கையில் எவ்வளவு உயிர்கள் உள்ளனவோ, உருவம் உள்ளனவோ அவை அனைத்தும் அவளது தோற்றம்தான் என்பது நமது தத்துவம். ஆதலின் அன்னை அந்தந்த மக்களின் மனநிலைக்கு ஏற்பத் தெய்வமாக உருவாக்கப்படுகிறாள்; வணங்கப்படுகிறாள்; வாழ்த்தப்படுகிறாள். அவளுக்குப் பல பெயர்கள். பல உருவங்கள். சாந்த உருவமும் அவளது தோற்றமே. உக்கிர உருவமும் அவளது எழில் உருவே. இவ்வாறு கருதப்படும் சக்தி வழிபாடு, தமிழகத்தில் பல நிலைகளிலும் மலர்ந்திருக்கிறது. அம்மலர்களில் ஒன்றுதான், காளி வழிபாடு. காளியைக் கிராம தேவதை என்று பலர் கூறுவர். அவளைக் கிராம தேவதை என்பதைவிட, மக்களின் தெய்வம் என்று கூறுவது பொருந்தும். மக்களின் தலைவனும் மன்னனும் போற்றும் மாபெருந் தெய்வம் அவள். அவளை மாகாளி என்றும் அழைக்கிறோம்.

பெண் தெய்வ வழிபாடு என்று கூறினேன். அது இரண்டு பெரும் பிரிவாகத் திகழ்ந்தது. துர்க்கை என்னும் கொற்றவை வழிபாடு ஒன்று; காளி வழிபாடு இரண்டு. இவற்றில் காளி வழிபாடு பல்லவர், சோழர் காலத்தில் எவ்வாறு இருந்தது எனக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

பல்லவர் காலத்தில் அதாவது 7—8-ஆம் நூற்றுண்டுகளில் மகிஷாசுரனை அழித்த துர்க்கை, மிகவும் சிறப்பாகச் சிற்பங்களில் காணப்படுகிறாள். பல்லவர் கோயில்களில் துர்க்கை சிறப்பிடம் பெற்றிருப்பதைக் காணும்போது, மக்களிடத்தில் துர்க்கை வழிபாடு மிகவும் மேலோங்கி இருந்தது என்று கருதத் தோன்றுகிறது. ஊர்ப்புறங்களில் வடக்கே துர்க்கைக்குத் தனிக் கோயில்கள் கட்டி மக்கள் வழிபட்டுள்ளனர். அவளை ''வடவாயில் செல்வி'' என்று அழைத்து மகிழ்ந்தனர். மாமல்லபுரத்தில் துர்க்கையின் உருவம் பல்வேறு உருவங்களில் படைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். திரௌபதி இரதம் என்று கூறப்படும் கோயில், அவளுக்காக எடுக்கப்பட்ட தனிக்கோயில். ஐந்து கோயில்களிலும் வடக்கே அது இருப்பது, அவள் 'வடவாயிற் செல்வி' என்பதை நிலையுறுத்துகிறது. அங்குள்ள அனைத்துத் துர்க்கை உருவங்களிலும் 'மகிஷாசுரமர்த்தினி' என்னும் மாபெரும் சிற்பம், உலகப் புகழ் பெற்றுள்ளது. மாமல்லபுரத்துச் சிற்பங்களிலேயே அதுதான் அற்புதமான படைப்பு. இவ்வுருவமே துர்க்கை வழிபாடு எவ்வளவு சிறப்புப் பெற்றிருந்தது என்பதற்கு எடுத்துக் காட்டு.

பல்லவர் காலத்தில் காளி வழிபாடு இல்லை என்று கருதிவிடக் கூடாது. மாமல்லபுரத்திலேயே மிகவும் சிறந்த ஒரு காளி இருக்கிறது. அதைப்பற்றிக் கூறுவதற்கு முன்னர்ச் சில கருத்துக்களை நினைவிற் கொள்ளுதல் நலம். துர்க்கைக்கும், காளிக்கும் என்ன வேறுபாடு? மகிஷாசுரனை அழித்த தெய்வீக அம்சம் துர்க்கை. சும்பன், நிசும்பன் என்ற அசுரர்களை அழித்த அம்சம் காளி. துர்க்கை, கையில் சங்கும் சக்கரமும் கொண்டு எருமைத் தலையில் நிற்பவள். காளி, பல கரங்களை உடையவள். சூலம், கபாலம், கத்தி, கேடயம் முதலியன தாங்குபவள். காலின் மீது அசுரனைக் கிடத்திச் சூலத்தால் அவன் மார்பில் அழுத்தி, அறம் புரப்பவள். காளி அமர்ந்த கோலம். இதுதான் பெரும்பாலும் நாம் காண்பது. சில வேறுபாடுகளும் உண்டு.

மாமல்லபுரத்தில் ஓர் அற்புதமான காளியின் சிற்பம் இருக்கிறது. அதை அதிகமாக யாரும் சென்று பார்ப்பது கிடையாது. ஊர் நூலகக் கட்டிடத்திற்கு அருகில் அவள் சிற்பம் உள்ளது. தேவி அமர்ந்திருக்கிறாள். அறத்திற்கு அழிவு வரும்போது அவள் சீறுகிறாள். அவளது சீற்றம் அவளது தோற்றத்திலே தெரிகிறது. அவளது தலைமயிர்கள் பரந்து விழுகின்றன. பல்லை நறநற வென்று கடிக்கிறாள். கடைவாய்ப் பற்கள் வெளியே தெரிகின்றன. விழிகள் உருண்டு திரண்டு சீற்றத்தை வெளிப்படுத்துகின்றன. நிமிர்ந்து அமர்ந்திருக்கிறாள். நான்கு கரங்கள். மேல் வலது கரத்தில் மணியைப் பிடித்திருக்கிறாள். அறவொலி எழுப்ப அதைப் பயன்படுத்துவாள். கபாலம் பிடித்திருந்த இடக்கரம் சிதைந்துள்ளது. கீழ் இரு கரங்களையும் இடுப்பில் வைத்து 'ஜிங்' கென்று அமர்ந்திருக்கிறாள். வலக்கரத்தில் குறுவாள் ஒன்றைப் பிடித்திருக்கிறாள். இடது கரத்தில் ஒரு சிறு உருவத்தைப் பிடித்திருக்கிறாள். மூவுலகையும் துன்புறுத்திய மாபெரும் அசுரன் அவன். அவனைப் பூச்சியைப் பிடிப்பது போல்,

இடது கரத்தில் பிடித்திருப்பது, அவளது ஆற்றலைக் காட்டுகிறது. தேவியின் இடது கரத்தில் சிக்கி அவ்வசுரப் பூச்சியின் கரங்களும், கால்களும், தலையும் சக்தியற்றுச் சவம்போல் தொங்குகின்றன. தேவி அசுரனோடு போரிடவே தேவையில்லை. கத்தியாலோ, சூலத்தாலோ தாக்க வேண்டியதேயில்லை. இடது கரத்தால் பிடித்ததே போதும் என்பதுபோல் இருக்கிறது சிற்பம். அசுரனைப் பூச்சி போல் காண்பித்துத் தேவியைப் பெரும் உருவாகக் காண்பித்து, அவளது மாபெரும் ஆற்றலை வெளிப்படுத்தியிருக்கிறான் சிற்பி. மிகவும் கம்பீரமான தோற்றம். இச்சிற்பம் பல்லவர் காலத்தும் காளி வழிபாடு இருந்தது என்பதற்கு எடுத்துக் காட்டு.

இருப்பினும் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்துதான், காளி வழிபாடு தமிழகத்தில் மிகப் பெரும் நிலையை அடைந்தது என்று கூறலாம். கி.பி. 9-ஆம் நூற்றாண்டில், தஞ்சைக்கு அருகில் செந்தலை, நேமம் என்ற பகுதிகளை முத்தரையர் என்ற சிற்றரசர்கள் ஆண்டனர். இவர்கள் பெரும்பிடுகு முத்தரையர் என்ற பட்டம் பெற்றிருந்தார்கள். இவர்களில் சுவரன்மாறன் என்னும் பெரும்பிடுகு முத்தரையன் என்பவன், மிகச் சிறந்த வீரன். பல ஊர்களை வென்றவன். இவன் நியமத்தில் (இன்றைய நேமம்) காளிக்கு ஒரு பெருங் கோயில் எடுத்தான். இவனது புகழைப் பல புலவர்கள் பாடினர். இவன் நியமத்துக் காளிக்குத் தான் வெற்றி கொண்ட ஊர்கள் அனைத்தையும் அளித்தான். தன்னைப் பாடியவர்கள் பெயரையும் கல்லிலே பொறித்தான். இவை அனைத்தையும் கல்லிலே வெட்டி வைத்துள்ளான். அவன் அன்று என்ன நினைத்தான் என்பதை அவனது கல்வெட்டு இன்றும் நமக்குக் கூறுகிறது. செந்தலை என்ற ஊரில் அக்கல்வெட்டு இருக்கிறது. கல்வெட்டு, தேவியை நேமத்து மகாகாளத்துப் பிடாரி என்று கூறுகிறது. இம்மன்னனால் இவ்வளவு சிறப்பாக வழிபடப் பெற்ற காளி, மிகச் சிறப்பைப் பெற்றிருக்க வேண்டும். இவளது சிறப்பை அறிந்து தமிழகத்தை ஆண்ட இரண்டு பேரரசர்கள், இவ்வூருக்கு வந்து இத்தேவியை வணங்கினார்கள். போற்றினார்கள். இவளுக்கு நிலையாக வழிபாடு நடக்கப் பெரும் பொருள்களை வழங்கினார்கள். இவ்வாறு வணங்கிய பேரரசர்கள் யார்?

நந்திக் கலம்பகத்தில் புகழ் பெற்ற தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன், ஒரு அரசன். தெள்ளாற்றெறிந்த நந்தி இத்தேவியின் வழிபாட்டுக்குப் பொன் கழஞ்சுகள் அளித்தான். மற்ற பேரரசன் மாணிக்கவாசகரின் சம காலத்தவன், பாண்டிய மன்னன் மாறஞ்சடையன் என்னும் வரகுணன். அவனது ஆட்சியில் வழிபாட்டுக்குப் பொருள் கொடுக்கப்பட்டது. தமிழகத்தின் பேரரசர்களால் வழிபடப்பட்ட அந்த சிலை எங்கே? அதைக் கண்டுபிடிக்கஎடுத்துக்கொண்ட முயற்சிகள் இதுகாறும் பயனளிக்கவில்லை.

இந்நிலையில்தான் மெலிந்திருந்த சோழப் பேரரசை நிலைநிறுத்த விசயாலய சோழன் தோன்றினான். விசயாலயன் மாபெரும் வீரன். தன் உடல் எல்லாம் விழுப் புண் ஏந்திப் பல போர்களில் வெற்றி கண்டவன்.

"..........மீதெல்லாம்
எண்கொண்ட தொண்ணூற்றின்மேல்
இருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலன்"

என்று உலாக்கள் புகழும் பேராளன். இவன் நிலை நிறுத்திய அரசு சுமார் 400 ஆண்டுகளுக்கு இந்திய நாடே கண்டிராத அளவுக்கு மாபெரும் பேரரசாகத் திகழ்ந்தது. இவ்வெற்றிக்கு அடிகோலாக விசயாலயன் தஞ்சையை முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றினான். தஞ்சையைக் கைப்பற்ற அவன் பெற்றஇப்பெரும் வெற்றிக்கு அருள் பாலித்தவள், தேவி நிசும்பசூதனியாகிய மாகாளி. ஆதலின் தஞ்சையில் விசயாலயன் நிசும்பசூதனியைப் பிரதிட்டை செய்து சோழப் பேரரசைத் தொடங்கி வைத்தான். அத்தேவியின் அருளாலேயே அவன் நானிலத்தை ஆண்டான், எனச் செப்பேடு கூறுகிறது. விசயாலயனால் பிரதிட்டை செய்யப் பெற்றுச் சோழப் பேரரசின் ஆதி சக்தியாகத் திகழ்ந்த அந்த 'நிசும்பசூதனி' இன்றும் உள்ளது.

தஞ்சையில் வட பத்ரகாளி என வழங்கப் பெறும் அத்தேவியை மெலிந்த குடும்பங்கள் இன்னும் வேண்டி வழிபடுகின்றனர். 'நிசும்பசூதனி' என்னும் பெயரே புதுமையான பெயர். அதே போன்று இங்கு உள்ள வட பத்ரகாளியின் சிற்பமும் புதுமையான அமைப்புடையது. பேரசனால் பிரதிட்டை செய்யப் பெற்றது என்பதற்கிணங்க, சுமார் 6 அடி உயரமுள்ளதாக மிகவும் பெரிய சிலை இது. தேவியின் உடலில் சதை என்பதே இன்றி எலும்புக் கூடாகவே காணப்படுகிறாள். அவளது காலின் கீழ் அசுரர்கள் எல்லாம் அடிபட்டு அங்குமிங்கும் ஓடுகின்றனர். தேவியின் முகத்தில் இருக்கும் சீற்றத்தைப் பார்க்கும்போது விசயாலயன் எலும்புக்கூடுபோல் இருந்த சோழ குலத்தை எவ்வாறு மாபெரும் சக்தியாக மாற்றினான் என்று நினைவூட்டுகிறது. வெற்றி வேண்டுபவன் தேவியை வணங்க வேண்டும் என்பது பண்டைய இந்திய மரபு.

அன்று தொட்டுக் காளி வழிபாடு தமிழ் நாட்டில் மக்கள் வழிபாடாக வளர்ந்து வந்து இருக்கிறது.

* *

---

*அன்று நான் பிறந்திலேன்*
*பிறந்த பின் மறந்திலேன்*
*நின்றதும் இருந்ததும்*
*கிடந்ததும் என் நெஞ்சுளே*


—திருமழிசை ஆழ்வார்.

8-ம் பக்கம் தொடர்ச்சி

கொண்ட திருமால், இங்குள்ள இறைவனைப் பூசித்து அருள் பெற்றார். அதனால் இங்குள்ள இறைவனுக்குக் கமடேசுவரர் எனப் பெயர் ஏற்பட்டது. அம்பிகை காளிகாம்பாள். இக் கோயிலை மராட்டிய மன்னராக விளங்கிய சிவாஜி வழிபட்டதாகக் கூறுவர்.

**கச்சாலீசுவரர் கோயில் :**

இது சென்னை முத்தியாலுப்பேட்டையில் அரண்மனைக்காரன் தெருவில் உள்ளது. கிழக் கிந்தியக் கம்பெனியாருக்கு மொழிபெயர்ப்பாளராக இருந்த காஞ்சிபுரம் தளவாய்ச் செட்டியார், கி.பி. 1725-ல் இக்கோயிலைக் கட்டத் தொடங்கி, கி.பி. 1728-ல் சிறப்புறக் கட்டி முடித்தார். இக்கோயிலின் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியன, சிற்ப நூல் முறைப்படி கட்டப்பட்டுள்ளன. அண்மைக்காலத்தில் திரு. சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் முயற்சியினால், கோயிலில் பல திருப்பணிகளும் அழகிய சிற்பச் சுதை வேலைப்பாடுகளும், செவ்விதிற் செய்யப் பெற்றுள்ளன. கச்சியப்பர், அரதத்தர் முதலிய சமயாசிரியர்களின் திருவுருவங்கள் நிறுவப் பெற்றுள்ளன. சுந்தரர், சம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், நம்பியாண்டார் நம்பிகள் முதலியவர்களின் வாழ்க்கை வரலாறுகள், மிகவும் நல்ல முறையில் சுதை வேலைப்பாட்டுடன் செய்தமைக்கப்பெற்றுள்ளன. இவையனைத்தும் நேரில் கண்டு மகிழத் தக்கவை.



கச்சாலீசுவரர் கோயில்

**பிறகோயில்கள் :**

சென்னையில் தேனாம்பேட்டை என்னும் தேவநாயகன் பேட்டையில், பாலசுப்பிரமணியர் கோயில், ஆலையம்மன் கோயில், இராமலிங்கேசுவரர் கோயில் முதலியன உள்ளன. சைதாப்பேட்டையில் திருக்காரணி காரணீசுவரர் கோயில், செங்குந்த கோட்டம் என்னும் சிவ சுப்பிரமணிய சுவாமி கோயில், சுந்தரேசுவரர் கோயில், பிரசன்ன வேங்கடேச நரசிங்கப் பெருமாள் கோயில் என்பவை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன.

மாம்பலம் என வழங்கும் தியாகராய நகரில் சிவவிஷ்ணு கோயில், கோதண்டராம சுவாமி கோயில், காசி விசுவநாதர் கோயில், ஆதி சென்னகேசவப் பெருமாள் கோயில் என்பவைகள் உள்ளன.

நுங்கம்பாக்கத்தில் அகத்தீசுவரர் கோயில், பிரசன்ன வேங்கடேசப் பெருமாள்கோயில் என்பனவும், எழும்பூரில் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில், சிந்தாதிரிப்பேட்டையில் ஆதிபுரீசுவரர் கோயில், ஆதிகேசவப் பெருமாள் கோயில், அங்காளம்மன் கோயில், ஆதி பொன்னியம்மன் கோயில், என்பனவும்,

கோமளேசுவரன் பேட்டையில் கோமளேசுவரர் கோயிலும், அமைந்த கரையில் ஏகாம்பரேசுவரர் கோயில், பிரசன்ன வரதராசப் பெருமாள் கோயில் என்பனவும், அயனாவரம் என்னும் அயன்புரத்தில், பரசுராம லிங்கேசுவரர் கோயில், கரியமாணிக்கப் பெருமாள் கோயில், காசி விசுவநாதர் கோயில், என்பனவும், சூளையில் சிதம்பரேசுவரர்கோயில், சுந்தரராசப் பெருமாள் கோயில் என்பனவும், வியாசர்பாடியில் இரவீசுவரர் கோயிலும், வண்ணாரப் பேட்டையில் அருணாசலேசுவரர் கோயில், பக்தவத்சலப் பெருமாள் கோயில் என்பனவும், இராயபுரத்தில் அங்காள பரமேசுவரி கோயில், பத்ரகாளியம்மன் கோயில், சிவ சுப்பிரமணிய சுவாமி கோயில் என்பனவும், முத்தியாலுப்பேட்டையில் தர்மராசர், தர்ம விநாயகர் கோயில், வேணுகோபால சுவாமி கோயில், நடராசர் கோயில், கிருட்டிணன் கோயில், கச்சாலீசுவரர் கோயில், காளிகாம்பாள் கோயில், மல்லிகேச்சுவரர் கோயில், நடராசர் கோயில், கிருட்டிணர் கோயில், கன்னிகாபரமேசுவரி கோயில் என்பனவும், பெத்து நாய்க்கன் பேட்டையில் ஆதிகேசவப் பெருமாள் கோயில், காசி விசுவநாதர் கோயில், பைராகி மடம் வேங்கடேசப் பெருமாள் கோயில் என்பனவும் உள்ளன.

சென்னை அடையாற்றில் அனந்தபத்மநாப சுவாமி கோயிலும், பெசன்ட் நகரில் இரத்தின கிரீசுவரர் கோயிலும், அண்மைக்காலத்தில் புதியனவாக ஏற்படுத்தப்பட்டுச் சிறந்து விளங்குகின்றன.

சென்னை ஏழுகிணறு என்னும் இடத்திற்கு அருகில் துலுக்காணத்தம்மன் கோயில் ஒன்று உள்ளது. இதனைச் சென்ற நூற்றாண்டில் விளங்கியிருந்த அருட்டிரு, ''பஞ்சரத்தினம்'' என்னும் ஐந்து பாடல்களால் துதித்துப் போற்றியுள்ளார். இங்ஙனம் சென்னையில் எண்ணிறந்த பல கோயில்கள் உள்ளன. அவைகள் அனைத்தும் நேரிற் சென்று தரிசித்து மகிழ்தற்குரியனவாகும்.

# அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில்,
# சங்கரன்கோயில், திருநெல்வேலி.

பிற்கால பாண்டிய மன்னர்களில் ஒருவரான உக்கிரபாண்டியனால் கட்டப்பட்ட இத் திருக்கோயில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு புகழ்பெற்ற பிரார்த்தனைத் தலமாகும். அன்னை கோமதியின் அருந்தவத்துக்கு இரங்கி, மாநிலத்தோர் சிவன் வேறு திருமால் வேறு என்று வேறுபடுத்துவது தவறு என்று உணரும் பொருட்டுச் சிவபிரான் ''பாதி சங்கரனும் பாதி நாராயணனுமாகக்'' காட்சி கொடுத்த தலம் இது ஒன்றே!

ஆண்டுதோறும் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் முறையே 21, 22, 23 ஆகிய தேதிகளில் காலை 6.18 மணிக்குக் கதிரவன் சங்கரலிங்கப் பெருமானை வழிபடும் காட்சியை இன்றும் கண்டு வணங்கலாம். நாடெங்கிலுமிருந்து நோய் வாய்ப்பட்டவரும், மனநோய் உடையவர்களும், கோமதி அம்பிகையை வழிபட்டு நோய் நீக்கம் பெறுகின்றனர். வீடுகளில் நச்சுப் பூச்சிகள் வராமலிருக்கத் தங்கம் அல்லது வெள்ளியிலான பாம்பு, தேள், பூரான் இன்னபிற உருவங்களையும், நோயின்றி வாழத் தங்கம் அல்லது வெள்ளியிலான கை, கால், முகம் இன்னபிற உருவங்களையும் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

இறைவன் : அருள்திரு சங்கரநாராயண சுவாமி.
இறைவி : அருள்தரும் அன்னை கோமதி அம்பிகை.
ஸ்தல விருட்சம் : புன்னை.
தீர்த்தம் : நாகசுனை.
ஆகமம் : காமிகாகமம்.

மேலும் வழிபட வருபவர்களின் வசதிக்காக விடுதிகளும், கல்யாண மண்டபமும், நூல் நிலையமும் இத்திருக்கோயில் பொறுப்பிலுள்ளன. மேலும் இத்திருக்கோயிலாரால் ஓர் இலவசச் சித்த மருத்துவமனையும், ஓர் ஆரம்பப் பள்ளியும் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

திருவாவடுதுறை ஆதீனம் பத்தாவது குருமகா சந்நிதானமவர்களால் பதிக்கப்பட்டுள்ள ஸ்ரீசக்கரம் மீதமர்ந்து நோன்பியற்றினால் வேண்டும் வரம் பெறலாம்.

## முக்கிய திருவிழாக்கள்

1. ஆடித் தபசுத் திருவிழா
2. சித்திரைத் திருநாள்
3. திருவெம்பாவைத் திருநாள்
4. திருக்கல்யாணத் திருநாள்
5. கந்த சஷ்டித் திருநாள்
6. நவராத்திரி இலட்சார்ச்சனை
7. தை மாதத்துத் தெப்ப உற்சவம்

இத்திருக்கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைதோறும் அருள்தரும் கோமதி அம்பிகையின் தங்கப் பாவாடை தரிசனம் உண்டு.

மேலும் இத்திருக்கோயிலில் ரூ. 4.5 லட்சம் செலவில் இராஜகோபுரத் திருப்பணி வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. திருப்பணிக்குப் பக்தர்கள் தாராளமாக நன்கொடை வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விரைவில் இத்திருக்கோயிலில் மகாகும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது.

இத்திருக்கோயிலில் ''பத்தாயிர தீபக் கட்டளை'' என்று ஒரு கட்டளை ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. மேற்படி கட்டளைக்காக அன்பர்களிடமிருந்து வரும் பணத்திலிருந்து கிடைக்கக் கூடிய வட்டியை வைத்து ஒவ்வொரு வருடமும் தை அமாவாசையன்று பத்தாயிரம் தீபங்கள் ஏற்றி வைத்துக் கட்டளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பக்தர்கள் தாராளமாக நன்கொடை வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ''குட்டித் திருவாசகம்'' என வழங்கும் கருவையந்தாதி பாடிய மன்னர் வரதுங்கராம பாண்டியன் வழிபட்ட அருள்மிகு பால்வண்ணநாத சுவாமி திருக்கோயில் இத்திருக்கோயிலின் துணைக்கோயிலாகும். மேற்படி திருக்கோயில் சங்கரன் கோயிலிலிருந்து வடக்கே இராஜபாளையம் ரோட்டில் சுமார் 8 மைல் தொலைவில் உள்ளதாகும். மேற்படி கரிவலம்வந்தநல்லூர் திருக்கோயிலில் 1—7—74-ல் திருக்குட நீராட்டு விழா சிறப்பாக நடந்துள்ளது. இது பாண்டி பஞ்ச ஸ்தலங்களில் ஒன்றாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அபூர்வமான இத்திருக்கோயிலுக்கு அன்பர்கள் ஒரு முறையாவது வந்து வழிபட்டு அருள்பெற வேண்டுகிறோம்.

திரு. பூ. உள்ளமுடையார்துரை
தலைவர் அறங்காவலர் குழு

ச. பிச்சை, பி.ஏ.,
செயல் அலுவலர்

திரு. கி. வெங்கட்ராமன், திரு. க. பழனிச்சாமி,
திருமதி அரு. குருவம்மாள், திரு. வி. கடற்கரை.
அறங்காவலர்கள்.

பெரிய வாச்சான் பிள்ளை

# உரை நயங்கள்

'பத்மவிபூஷண்' திரு. பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.

கண்ணபிரானுடைய திருநட்சத்திரத்திலேயே இப்பேராசிரியரும், திருவவதரித்தருளினார். இவ்வாசிரியருடைய சரித்திர வரலாறுகளைப் பற்றி இங்கு நாம் ஒன்றும் எழுதப் புகுகின்றிலோம். அதுபற்றி நமக்கு விசேடமாகத் தெரியவும் தெரியாது. இவர் தம்மால் உலகுக்கு விளைந்த பேருதவி எல்லையற்றதாதலால், அது பற்றியே சிறிது ஆராய்ந்து மகிழ்வோம்.

''கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருள்தானும், மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும், நீர்மையினால் அருள் செய்து'' என்கிறபடியே, பேரருளாளனாகிய எல்லாம் வல்ல இறைவன், இவ்விருள்தரு மாஞாலத்திற்கு அநேக விதமான நூல்களை உதவியருளினான். அவற்றுள் வேத சாத்திரமே மூலப்மூலப்பிரமாணம். அது வடமொழி வேதமென்றும், தென்மொழி வேதமென்றும் பாகுபாடற்றது. வடமொழி வேதத்திற்கு வித்தியாரண்ய சுவாமிகள் பலப்பல பண்டிதர்களை வைத்துக் கொண்டு பாஷ்யம் அவதரிப்பித்தார். அது ஒரு மகோபகாரம். அந்த வடமொழி வேதத்தைக்காட்டிலும், பல வகையிலும் சிறப்புப் பெற்ற தமிழ் வேதத்திற்குப் பெரிய வாச்சான் பிள்ளை பெரிதும் சுவை முதிர்ந்து நிரம்பிய அரிய விரிவுரை வகுத்தருளினார். அச்செயல், யாவர்க்கும் கைமாறிலாத பேருதவியாகும். இவ்வாசிரியரின் விரிவுரைத் திறன், அனுபவிக்க அனுபவிக்க அனைவரையும் ஆனந்தக் கடலில் அமிழ்த்துவதாகும். மற்றையோர் பத்தெட்டு வாக்கியங்களினால் விரிவாக உரைக்கும் பொருளைச் சிறியதொரு வாக்கியத்தினால், மிகவும் அழகாக அருளிச் செய்து வைக்கும் திறம், இவருக்கே தனிச் சிறப்பாக உரியது.

கரியமாமுகில் படலங்கள் கிடந்தவை
　　முழங்கிட, களிறென்று
பெரிய மாசுணம் வரையெலாம் பெயர்தரு
　　பிருதியெம் பெருமானை,
வரிகொள் வண்டறை பைம்பொழில் மங்கையர்
　　கலியன தொலிமாலை
அரியவின்னிசை பாடுநல் லடியவர்க்
　　கருவினை யடையாவே.

என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில், மலைப் பாம்புகளானவை யானைக்கு அஞ்சிப் புற்றிலே புக்கொளிக்கும் என்று நஞ்சீயர் அருளிச் செய்தார். அதைக் கேட்ட நம்பிள்ளை 'இதுவோ இதற்கு அருளிச் செய்யும்படி?' என்று கேட்க; ''நீர் இப்படிக் கேட்கும்போது ஒன்றை நினைத்தல்லது கேளீர்; அத்தைச் சொல்லும்'' என்று ஜீயர் நியமிக்க, நம்பிள்ளை பணித்தபடி, பெயருகையாகிறது, போக்கு வரத்து இரண்டுக்கும் சாதாரணமாய்த்து இருப்பது. இனித் தான் மலைக்குச் சிறப்புச் சொல்லுபவர்கள் மலைப் பாம்புகள் ஆனையை விழுங்கும் என்னக்கடவர்கள்; ஆகையாலே கரியமாமுகிற் படலங்கள் கிடந்து முழங்க, பெரிய மலைப்பாம்பானது, அவற்றை யானையாக எண்ணி ஆகாரமாகக் கொள்ளக் கருதி மலைபெயர்ந்தாற் போல் கால் வாங்கி வந்து கிட்டா நிற்கும் என்று பொருள் கொள்ளலாம் போல் இருக்கிறதே என்று விண்ணப்பிக்க, ஜீயர் அதுகேட்டு 'இப்படியேதான் பொருள்' என்று போரக் கொண்டாடியருளினார் என்கிற ஐதிகம் உள்ளது.

இதனைச் சிறிது விவரிப்போம்; சில மலைப் பாம்புகள் யானையைப் பார்த்து அஞ்சி நடுங்கி ஓடிப் போய்விடும் என்றும், பல மலைப் பாம்புகள் யானையை அணுகி விழுங்கிவிடும் என்றும், தமிழ் நூல்களால் தெரிகின்றது. திரையன் பாட்டு என்ற ஓர் பழைய நூலில் — ''கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி, திடங்கொண்டறைதல், திண்ணமென்றஞ்சிப், படங்கொள் பாம்பும் விடரகம் புகும், தடங்கொள் உச்சித் தாழ்வரை அடுக்கத்து'' என்றதனால் மாசுணம் களிற்றைக் கண்டு அஞ்சியொளிக்குமென்பது தெரிகின்றது. ''ஞால்வாய்க் களிறு பாந்தட்பட்டெனத், துஞ்சாத் துயரத் தஞ்சு பிடிப்பூசல், நெடுவரை விடரகத்தியம்பும், கடுமான் புல்லிய காடிறந்தோரே'' என்று சங்க நூல்களுள் ஒன்றான நற்றிணையிலும், ''பரிய களிற்றை அரவு விழுங்கி மழுங்கவிருள் கூர்ந்த, கரியமிடற்றர் செய்ய மேனிக் கயிலை மலையாரே'' என்று தேவாரம் திருக்கயிலாயம் முதல் திருமுறையிலும், ''இடிகொள் வேழத்தை எயிற்றொடும் எடுத்துடன் விழுங்கும், கடிய மாசுணம் கற்றறிந்தவரென அடங்கிச் சடை கொள் சென்னியர் தாழ்விலர்தாம் மிதித் தேறப் படிகள் தாமெனத் தாழ்வரை கிடப்பன பாராய்.'' என்று கம்பராமாயணச் சித்திர கூடப் படலத்திலும் உள்ள பாட்டுக்களால், மாசுணம் யானையை விழுங்கும் என்பது தெரிகின்றது. அஞ்சியொளித்தல் சிறுபான்மையும், விழுங்குதல் பெரும்பான்மையுமாயிருத்தலால் ''களிறென்று பெரிய மாசுணம் வரையெனப்

பெயர்தரும்'' என்ற இவ்விடத்திற்கு—மலைப் பாம்புகள் மேகங்களை நோக்கி யானைகளாகப் பிரமித்து அவற்றை விழுங்குவதற்காக மலை பெயருமாப் போலே பெயர்ந்து கிட்ட வரு மிடம் எனப் பொருள் கொள்ளுதல், நன்கு பொருந்துமென்பது நம்பிள்ளை திருவுள்ளமா யிற்று.

முற்ற மூத்துக் கோல்துணையா
முன்னடி நோக்கி வளைந்து
இற்ற கால்போல் தள்ளி
மெள்ள இருந்தங் கிளையாமுன்
பெற்ற தாய்போல் வந்த
பேய்ச்சி பெருமுலை யூடுயிரை
வற்ற வாங்கி யுண்ட
வாயான் வதரி வணங்குதுமே

என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரிய வாச்சான் பிள்ளை ஓர் ஐதிகம் அருளிச் செய் கின்றார் : நஞ்சீயர் சந்நியாச ஆச்சிரமம் மேற் கொள்ளும்போது திரிகண்டம் தரித்துக் கொள் வதற்கான மந்திரம் ''ஸகா மே கோபாய''(ஓ— திரிதண்டமே! நீ எனக்குத் துணையாயிருந்து என்னைக் காக்க வேணும்) என்பதாகக் கேட்டு, ''எல்லாம் அறிந்தவனாகவும் எல்லாம் வல்லவ னாகவும் எல்லார்க்கும் மேலானவனாகவும் இருக் கின்ற எம்பெருமானையே துணையாகப் பற்ற வேண்டி இருக்க, அறிவில்லாப் பொருளான தண்டத்தை நோக்கி இங்ஙனே சொல்லும்படி யே ஓர் ஆச்ரமம் நேருவதே? என்று நஞ்சீயர் சாதித்தருளினார்'' என்னும் ஓர் ஐதிகத்தைப் பெரியவாச்சான்பிள்ளை எடுத்துக் காட்டி யிருப்பது, மிகவும் போற்றத் தக்கது.

கள்ளக் குறளாய் மாவலியை
வஞ்சித் துலகம் கைப்படுத்து,
பொள்ளைக் கரத்த போதகத்தின்
துன்பம் தவிர்த்த புனிதனிடம்,
பள்ளச் செறுவில் கயல்உகளப்
பழனக் கழனி அதனுள்போய்,
புள்ளுப் பிள்ளைக் கிரைதேடும்
புள்ளம் பூதங் குடிதானே.

என்னும் பாசுர விரிவுரையிலும் பெரியவாச் சான் பிள்ளை ஓர் அரிய செய்தியையும் நுண் பொருளையும் எடுத்துரைத்து விளக்கியருள்கின் றார்.

முற்காலத்தில், ஆலவாயுடையான் என் பான் ஒரு தமிழன், பட்டரிடம் வந்து இப்பாட் டில் ஒரு கேள்வி கேட்டான்; ''பள்ளச்செறுவில் கயலுகள என்றபோதே அவ்விடத்து வயல்களில் மீன்கள், அளவற்றுக் கிடக்கின்றமை வெளி வந்துவிட்டது. அப்படியிருக்க ஈற்றடியில் 'இரைதேடும் அன்று எங்ஙனே சொல்லலாம்? மீன் அருமைப்பட்டிருந்தாலன்றோ இரை தேட வேண்டும். கொள்வார்தேட்டமாம்படி குறை யற்றுக் கிடக்கும்போது தேடிப் பிடிப்பதாகச் சொல்லுவது பொருந்துமோ என்று கேட்டான். இதற்குப் பட்டர் அருளிச் செய்ததானது, பிள் ளாய்! நீ கற்றவனுயிலும் சொற்போக்கு அறிந்திலை; பிள்ளைக்கு ''இரைதேடும்'' என்று உள்ளதுகாண்; அங்குள்ள மீன்கள் நில்வளத் தால் தூணும் துலாமும் போலே தடித்திருக்கும்; அவை பறவைக் குஞ்சுகளின் வாய்க்குப் பிடிக்க மாட்டா. ஆகையால் உரிய சிறிய மீன்களைத் தேடிப் பிடிக்க வேண்டியிருக்கும் அத்தனை யன்றோ? என்பதாம். இளஞ் சிறுவராகிய மாணவர்கள் புரிந்துகொள்ளக் கூடியவகையில் சிறிய நல்ல கருத்துக்களைப் பெரு நூல்களாகிய விரிந்த கடலினின்று எடுத்து உபதேசிக்க ஆசாரியர்கள் முயன்று தேடுகின்றமை இவ் விடத்திற்கு உள்ளுறை பொருளாகும் என்பது, பெரிய வாச்சான் பிள்ளை அழகுற விவரிக்கும் நயம் செறிந்த நல்லநுண் பொருளாகும். இம் நன்ம் எண்ணிறந்த எவ்வளவோ பல நுண் ணிய பொருள் நயங்களை விரித்துக் காட்டி விளக்கியருளியுள்ள பெரிய வாச்சான் பிள்ளை யவர்களின் பெருமை எல்லையற்றதாகும். **

## செய்திச் சுருக்கம்

* சென்னை - திருமயிலை அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் திருக்கோயில் திருக்கோபுரத் திருப்பணிக்கு 14·12·75 அன்று அடிக்கல் நாட்டப்பெற்றது. ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ. பி.எல்., ஐ.ஏ.எஸ்., துணை ஆணையர் திரு. எம். சூரியராஜ், ஆணையரின் நேர்முக உதவியாளர் திரு. ஆர். தண்டபாணி, பி.எஸ்.சி., பி.எல்., ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

** சென்னை திருக்காரணி அருள்மிகு சொர்ணும்பிகை உடனுறை திருக்காரணீசுவரர் இராச கோபுரத் திருப்பணியும், கோடி அர்ச்சனையும் 2.2.76 திங்கட்கிழமையன்று காலை 9 மணி அளவில் காஞ்சி காமகோடிபீடாதிபதி சகத்குரு ஸ்ரீஜெயேந்திரசரஸ்வதி சுவாமிகள் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்றன.

*** சென்னை—தியாகராயநகர் (மாம்பலம்) ஸ்ரீ சிவவிஷ்ணு கோயிலின் மகாகும்பாபிஷேகம், 6.2.'76 அன்று காலை 7-9 மணியளவில், காஞ்சி காமகோடிபீடாதிபதி ஸ்ரீஜெயேந்திரசரஸ்வதி சுவாமிகள் அவர்கள் திருமுன்னிலையில் மிகவும் சிறப்புற நிகழ்ந்தது.

உ

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

## கோடி அர்ச்சனை

ஆறு படை வீடுகளிலும் தனிச் சிறப்புற்று விளங்கும் திருச்செந்திலம்பதியில் வீற்றிருக்கும் அருள்மிகு சண்முகப் பெருமானுக்கு உலக நலனை முன்னிட்டுக் கோடி அர்ச்சனை 4-12-75 தேதி முதல் சிறப்புற நடை பெறுகிறது. கோடி அர்ச்சனையில் ஒரு சகஸ்ர நாம அர்ச்சனைக்கு ரூ. 20/- (இருபது) வீதம் மணியார்டர் அல்லது டிராப்ட் மூலமாக

நிர்வாக அதிகாரி,
**ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்,**
திருச்செந்தூர் — 628 215

என்ற முகவரிக்கு அனுப்பிப் பக்தர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டப் படுகிறது. கோடி அர்ச்சனையில் பங்கு பெறுபவர்களுக்கு விபூதி குங்குமப் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

கோடி அர்ச்சனை பூஜையில் வைக்கப்பட்ட டாலர் வேண்டு வோர்கள் சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க டாலர் ஒன்றுக்கு ரூ. 115/- வீதமும் சுமார் 4 கிராம் எடையுள்ள வெள்ளி டாலர் ஒன்றின் விலை ரூ. 7/- வீதமும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே தபால் செலவு முறையே ரூ. 3/-, ரூ. 2/- வீதம் அனுப்ப வேண்டப்படுகிறது. பக்தர்கள் அனைவரும் கலந்து ஸ்ரீ சண்முகப் பெருமான் திருவருள் பெற்று உய்யுமாறு வேண்டப்படுகிறது.

திரு. டி. ஆர். சுப்பிரமணியம்,
திரு. வி. வி. டி. தனபால்,
திரு. ஆர். நல்லகண்ணு,
திரு. வி. பழனிச்சாமி,
அறங்காவலர்கள்.

**எஸ். பி. முனுசாமி,**
செயல் அலுவலர்—உதவி ஆணையர்.

குறிப்பு:— எவ்விதக் கட்டணமும் இன்றிப் பக்தர்கள் அனுப்பும் தொகையைப் பெற்று அனுப்பப் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா முன்வந்திருப்பதால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அருகிலுள்ள ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா கிளையின் மூலம் பணத்தை அனுப்பலாமென அறிவிக்கப்படுகிறது.

# அறிவியலும் இறையியலும்

(மருதவாணன்)

இந்நாளில், அறிவியலுக்கும் இறையியலுக்கும் ஏதோ முரண்பாடு இருப்பதுபோல, நம்மிற் பலர் நினைப்பதும் பேசுவதும் உண்டு. அறிவியல் வளர வளர, இறையியலும், இறையியல் நம்பிக்கைகளும் தாமே மறைந்துவிடும் என்றும், ஒரு சிலர் வலியுறுத்திக்கூறுவர். இறையுணர்வும் நம்பிக்கையும் உடையவர்களைப் பிற்போக்காளர்கள், குருட்டு நம்பிக்கை கொண்டவர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டு, ஒரு சிலர் ஏளனமும் செய்யா நிற்பர். மற்றும் சிலர் தமக்கு இறையுணர்வும் நம்பிக்கையும் இல்லை என்று சொல்லிக் கொள்ளுதலை, ஒருவகை முற்போக்கு நெறியாகவும், நாகரிகப் பாங்காகவும்கூடக் கடைப்பிடித்தொழுதலை, நாம் காண்கின்றோம்.

ஆனால் உண்மையிலேயே ஆராய்ந்து பார்த்தால், அறிவியலுக்கும் இறையியலுக்கும் எத்தகைய இகலும் முரண்பாடும் இருப்பதாகச் சிறிதும் தோன்றவில்லை. அறிவியலும் இறையியலும் தமக்குள் எவ்வகையிலும் மாறுபட்டன அல்ல. அறிவியல், ஐம்பொறிகளுக்குள் அகப்படும் புறப்பொருள்களையும், பருப்பொருள்களையும் (Phenomena) மட்டுமே, ஆராய்ந்தறிய முயலுகின்றது. இறையியலோ ஐம்புலன்களுக்கு எட்டாமல் அப்பாற்பட்டு விளங்கும் அகப்பொருள்களையும், நுண்பொருள்களையும் (Neumena) ஆழ்ந்துணர்ந்து அநுபவிக்க வழிவகுக்கின்றது. இவ்வாற்றால் இரண்டினுடைய எல்லையும், குறிக்கோளும், செயல்முறைகளும், தனித்தனியாக விளங்குதல் காணலாம். ஆதலின் இவை இரண்டிற்கும் இடையே, எத்தகைய போட்டியும் பூசலும் ஏற்பட வாய்ப்பே இல்லை.

'எங்கே அறிவியல் செயலிழந்து முடிவுற்று நிற்கின்றதோ, அங்கேயிருந்துதான் இறையியல் தொடங்குகின்றது' (1). அறிவியல் என்பது வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு கலையே; அஃது இன்னும் குழவிப் பருவத்திலேயே இருந்து கொண்டிருக்கின்றது. அதன் வளர்ச்சியியல் முறையிலும், ஆராய்ச்சி நெறியிலும், எத்தனையோ இடையீடுகளும் மாறுபாடுகளும் நேரலாம். ஆதலின், அறிவியல் இறையியலுக்கு முரண்பட்டதென்று நாம் முடிவுகட்டிவிடுதல் பொருத்தம் ஆகாது. மேலும் அறிவியல் என்பது இயற்கைப் பொருள்களின் இயல்புகளை விளக்கக் கூடுமேயன்றி, அதன் காரணங்களையும் அடிப்படைகளையும், விளக்கவல்லதன்று(2).

அறிவியல் எனப்படுவது வெறும் அறிவே: ஆனால் இறையியல் ஆகிய சமயமோ அதன் பயனாகிய சிறந்த அநுபவமாக அமைவது. எனவே, அறிவியலும், இறையியலும் தம்முள் ஒன்றையொன்று தழுவிப் பிணைந்து நிறைவுறுவனவேயன்றி முரண்படுவன அல்ல என்று உணரலாம் (3).

**ஐன்ஸ்டைன்:**

''இறையியல் கலவாத அறிவியல் முடத்தன்மையுடையது; அறிவியல் கலவாத இறையியல் குருட்டுத்தன்மை வாய்ந்தது' (4) என்பர் பேரறிஞர் ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன். ''இறையியலோடு இயைபில்லாத அறிவியல் அகந்தை மிக்கது; அறிவியல் சேராத இறையியல் மூடநம்பிக்கை பொருந்தியது' (5) என்பர் பேரறிஞர் இராதாகிருட்டிணன். ''வெறும் அரைகுறை அறிவே இறையுண்மையை மறுத்துப் பேசும்; ஆழ்ந்து நிறைவுற்ற அறிவோ சமயவுணர்வில் தலைப்பட்டுத் தழைத்து நிற்கும்' (6) எனச்சாற்றுவர் பிரான்சிஸ் பேக்கன்'.

'அறிவியற்றுறை அறிஞன் என்பவன், நாத்திகனாக இருத்தல் இயலாது. இயற்கைப் பொருள்களை ஆராய, ஆராய, இறைவனின் அருமை பெருமைகள் அறிவியல் அறிஞனுக்குத்தான் நன்கினிது விளங்கும்' என்பது, அறிவியற் பேரறிஞர்களுள் தலைசிறந்தவர் ஆகிய ஆல்பெர்ட் ஐன்ஸ்டைனின் கூற்று. முதலிற் கடவுளுணர்ச்சி இல்லாமல் இருந்த விஞ்ஞானிகளிற் பலர். பின்னர் நாளடைவில் கடவுளுணர்ச்சி யுடையவர்களாக மாறியிருக்கின்றனர்.

---

(1) " Where Science ends, there religion begins."

(2) " Science cannot tell the ultimate " why " of things and events. Hydrogen and Oxygen combine to form water, but why should they ? We all know Newton's Law of inverse squares. Science does not tell us why it cannot be the Law of inverse cubes. Natural laws are what they are and not something else, science does not say why?"

—W.C. DAMPIER WHETHAM.

(3) " Increasing number of important physicists, astrophysicists, mathematicians, and biologists are now of the opinion that science and religion are not only at all inimical to each other, but constitute only in their intimate inter-relation a complete picture of the world."

—RENE FULOP MILLER.

**ரெனி ஃபுலாப் மில்லர்:**

அறிவியற்றுறையின் போக்கு, இப்பொழுதெல்லாம் ஒரு திருப்பம் அடைந்து, சமயத்தை நோக்கித் தழுவி இணையவே முற்பட்டு வருகின்றது. இதனை ரெனிஃபுலாப் மில்லர் என்னும் அறிஞர், பின்வருமாறு உருவக முறையில் அழகுற விளக்குகின்றார்.

''அறிவுக்கும் (Reason) நம்பிக்கைக்கும் (Faith)—அறிவியலுக்கும் இறையியலுக்கும்—இடையே ஒரு வழக்கீடு ஏற்பட்டு நிலவிவந்தது. அறிவுவாதியாக அமைய, நம்பிக்கையே பிரதிவாதியாக இருந்தது. அறிவு நலனும் பரந்த மனப்பான்மையும் கொண்ட, ஆண் பெண் இருபாலாரும் அடங்கிய ஒரு நடுவுநிலைக் குழுவினர், அதனை ஆராய்ந்தனர். மில்லிக்கன், எட்டிங்டன், ஜீன்ஸ், வொயிட்ஹெட், ஹால்டேன் போன்ற பேரறிஞர்கள் சான்றுரை கூறினர். அச்சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு பிரதிவாதியாகிய நம்பிக்கையின் மீது கொணரப்பெற்ற வழக்கு, தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆனால் வாதியாகிய அறிவுதான், 'புரட்சிகரமான பிற்போக்கு மனப்பான்மை கொண்டுள்ள உண்மையான குற்றவாளி' என்ற ஐயுறவு நேர்ந்தது. ஆயினும் தன் குற்றத்தையுணர்ந்து கொண்டு, மெய்யாகவே திருந்திவிடக் கூடிய நிலையில் மாறி வருவதனால், அறிவு ஆகிய புதிய பிரதிவாதியின் மீது, அக்குற்றம் வலியுறுத்தப்படாமல், பரிவுகாட்டப் பெறுகின்றது''

என அவர் 'அகிலத்தை அசைவித்த அருளாளர்கள்' என்னும் நூலிற் குறிப்பிட்டிருக்கின்றார். இஃது எதனைக் காட்டுகின்றது?

**மில்லிகன்:**

''அறிவியல் அறிஞர்களிற் பலர், இன்று இறையுணர்வும் நம்பிக்கையும் கொள்ளத் தலைப்பட்டுள்ளனர். அறிவியல், உலகாயத நிலையில் இருப்பதாக இன்றும் சிலர் பேசி வருதல் பொருந்தாது. இந்நாளைய விஞ்ஞானிகள், மெய்ஞ்ஞானிகளோடு சேர்ந்து, இறைவனை இயற்கையின் மூலம் உணர்ந்து துதித்துப் பரவி வழிபடத் தலைப்பட்டுள்ளனர்''(8) என்று மில்லிகன் என்னும் அறிவியலறிஞர் இயம்புகின்றார்.

**மார்க்கோனி:**

அறிவியற் பேரறிஞர்களுள் ஒருவராகிய மார்க்கோனி என்பவர், தாம் காலை மாலை வேளைகளில் செய்யும் செபமும் பிரார்த்தனையும் எங்கேயோ பரமண்டலத்திலுள்ள பரமபிதாவுக்கு எங்ஙனம் கேட்டல் இயலும்? என்று தமக்குச் சிறுவயதில் இருந்த ஐயப்பாடு, கம்பியில்லாத் தந்தியைத் தாம் கண்டுபிடிக்க முடிந்த தன் வாயிலாகத் தீர்ந்து விட்டது என்றும்; அன்பர்கள் செய்யும் வேண்டுகோள்களையெல்லாம், உலகம் எங்கணும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவன் செவிமடுத்து, மனமிரங்கி அருள்புரிகின்றான் என்பது முற்றிலும் உண்மையேயாகும் என்றும், குறிப்பிட்டிருக்கின்றார்.

**பெர்ட்ரண்ட்ரஸ்ஸல்:**

உலகப் புகழ்பெற்ற தத்துவ—கணிதப் பேரறிஞர் ஆகிய பெர்ட்ரண்ட்ரஸ்ஸல் என்பவர், 'சமுதாயத்தின் மீது விஞ்ஞானத்தின் விளைவு' என்னும் நூலிற் கூறியிருப்பது ஈண்டுக் கருதியுணர்ந்து மகிழற்பாலது.

''இக்கால நிலைக்கு வேண்டுவன சில இருக்கின்றன; விலக்கப்பட வேண்டுவன சில உள்ளன. நம் கால நிலையில் அருளுணர்வும், மனித இனம் இன்பமாக வாழ வேண்டும் என்னும் விருப்பமும் தேவைப்படுகின்றன. எல்லாவற்றினும் மேலாகத் திடமான நம்பிக்கையும், புதியன படைத்தலில் ஆர்வமும், இக்காலத்திற்கு மிக இன்றியமையாதனவாகும்.

---

(4) "Religion without science is lame, science without religion is blind."

(5) Religion without science is superstition, science without religion is arrogance."

—Dr. S. RADHAKRISHNAN

(6) "I had rather believe all the fables in the Legends and the Talmud and the Alcoran than that this Universal frame is without a Mind. It is true that, a little philosophy inclineth a man's mind to atheism but depth in philosophy bringeth men's minds about to religion.

—FRANCIS BACON.

(7) "At the present time things are taking a decidedly different turn. The odds are clearly against reason. More and more often the witnesses called in from the laboratories and studies of exact science turn evidence for defence, and materialism is told many unpleasant things by its own experts and authorities.

The Jury, composed of intelligent and liberal modern men and women, bases its verdict on the views expressed by the witnesses Millikan, Eddington, Jeans, Whitehead, Haldane. The case against faith is dismissed.

Reason, the original plaintiff, is now suspected of being really the one that is guilty of reactionary backwardness, but the case is not pressed for it seems that the new defendant is honestly desirous of mending his ways."

—RENE FULOP MILLER.
(*The Saints that Moved the World.*)

(8) "Is there anyone who still talks about the materialism of science? Rather does the scientist join with the psalmist of thousands of years ago in reverently proclaiming, 'the Heavens declare the glory of God and Firmament showeth His handiwork."

—ROBERT ANDRES MILLIKAN.

நான் கூறப்புகும் செய்தியின் அடிப்படை அல்லது வேர் யாது எனின், மிக எளிமையானதும், மிகப் பழமை முறையில் அமைந்ததுமான ஒன்றேயாம். நான் கூறமுற்படுவது மிகமிக எளிமையும், மிக்க பழமைமுறை வாய்ந்ததாகலும் பற்றி, ஒரு சிலர் என்பால் புன்முறுவல் பூத்து ஏளனம் செய்யக் கூடுமே என்று அஞ்சி, அதனை இங்குக் குறிப்பிடுவதற்குக்கூட, நான் பெரிதும் நாணம் கொள்ளுகின்றேன்.

நான் கருதும் பொருள்—அதனைக் குறிப்பிடுவதற்காக, அருள் கூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள்—அன்பு, 'இறையியல் அன்பு' அல்லது சமய வுணர்வோடு கூடிய இரக்கவுள்ளம் ஆகும்.

இத்தகைய உணர்வை நீங்கள் பெறுவீர்களாயின், உங்கள் வாழ்க்கைக்கு ஓர் உயரிய நோக்கமும், செயல்களுக்கு ஒரு வழிகாட்டியும் மனவுறுதிக்கு ஒரு காரணமும், அறிவின் நேர்மைக்கு ஓர் இன்றிமையாத தேவையும் பெற்றவர்கள். ஆவீர்கள்'' (9).

இவ்வாறு சமயநெறி வெறுப்பாளராக ஒரு காலத்தில் இருந்த, பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் அவர்கள் கூறுவது, அறிவியல் அறிஞர்களிற் பலர் இந்நாளில், இறையுணர்வும் நம்பிக்கையும்; வாழ்க்கைக்கு இன்றியமையாதன என்று உணர்ந்து கொண்டு மாறிவருகின்றனர் என்பதற்கு. இனிய நல்ல சான்றாகும்.

முடிவுரை:

இதுகாறும் கூறிவந்த சிலவற்றால், உண்மைச் சமயமும் விஞ்ஞானமும்,—அறிவியலும் இறையியலும்-தமக்குள் ஒருபோதும் இகலி மாறுபடுவன அல்ல என்னும் செய்தி, அனைவர்க்கும் இனிது புலனாகும். ஆதலின், நாம் அனைவரும் அறிவியலையும் இறையியலையும் நன்கினிது தக்கவாறு போற்றி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, நலம்பல பெற்றுய்ய முயலுவோமாக!

---

(9) " There are certain things that out age needs and certain things that it should avaoid. It needs compassion, and a wish that mankind should be happy. It needs, above all, courageous hope and the impulse to creativeness.

The root of the matter is a very simple and old fashioned thing, so simple that I am almost ashamedto mention it, for fear of derisive smile with which wise cynics will greet my words. The thing I mean—please forgive me for mentioning it—is love, christian love, or compassion.

If you feel this, you have a motive for existence, a guide in action, a reason for courage, an imperative necessity for intellectual activity."

—DR. BERTRAND RUSSEL,
*Impact of Science on Sciety*, p. 114.

158610

அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்!
அருள்நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்!

எத்தனையும் அரியைநீ எளியை ஆனாய்!
எனையாண்டு கொண்டிரங்கி ஏன்று கொண்டாய்!

பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாய் அன்றே!


இத்தனையும் எம்பரமோ? ஐய ஐயோ!
எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே!

—திருநாவுக்கரசர்

# இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் — காதி கிராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள்
கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு
தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை
மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட
செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி
அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும்
பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு,
வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம்
சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட
காலணிகள், தோல் பொருட்கள்,
வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள்,
இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச்
சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான
பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள்,
அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180
**காதி கிராப்ட்** களிலும்
மலிவு விலையில் கிடைக்கும்.
வாங்கிப் பயன் பெறுவீர்!
கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!




வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!


- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள் !
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது !
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து !
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

## இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009


நெடுங்கல் மன்றம்


எழுநிலை மாடம்


வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002